# காவேரி

MAY 1945
பார்த்திப-வைகாசி

340

28 MAY 1945

4-10



Widest Circulated Monthly




## ௨௦௦௦வருஷங்களுக்குமுன்

முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வார்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின உண்மை என்றும் உண்மையே.

# மைசூர்
## சந்தன சோப்





சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே

★★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★★

1787

உலகப் புகழ்பெற்ற
விஜயபுரம்

28 MAY 1945

Estd. 1904
Tel. KETIOR




குளிர்ச்சியுடைய சந்தனாதி & அரைக்கீரைவிதைத் தைலங்கள், ஒயிட்ரோஸ் ஹேராயில், கிருஷ்ணா அகர் பத்தி, ராஜா பற்பொடி மார்கெட்டில் நற்கியாதி வாய்ந்தது எங்கும் கிடைக்கும்.

மதராஸ் ஏஜண்டு:

**GIRISON & CO.**

PARK TOWN
MADRAS


சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜூசெட்டியார் பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A - தபால்பெட்டி 139 - தந்தி "ராஜா"



# சிக்கிமில்—தேநீர் அருந்தும் நேரம்

சிக்கிமில் உள்ள லெப்சாஸ்களுக்குத் தேநீர் அருந்தும் வழக்கம் மிகவும் பழமையானது. தேநீர் விநியோகித்தல் என்னும் சடங்கு இன்னும் இங்கே ஏழைகளிடையே கூட அனுசரிக்கப்படுகிறது. சீனாவைப்போல இது அவ்வளவு சாஸ்திரோக்தமாய் இல்லாதபோதிலும்கூட இரண்டிடத்திலும் உள்ளடங்கிய கொள்கை ஒன்றேதான்.

தேநீர் பருக ஒவ்வொருவருக்கும் தனித் தனிப் பாத்திரம் உண்டு. எனினும் இங்குள்ளவர்கள் தேநீரைக் கொதிக்கவைத்து ஒரு பெரிய பாத்திரத்தில் பால் சீனியுடன் மொத்தமாய்க் கலந்து வைத்துக்கொள்கிறார்கள். பின் அதிலிருந்து ஓர் அகன்ற சுரை அகப்பையினால் எடுத்து எல்லோருக்கும் வழங்குகிறார்கள்.

சிக்கிம், பள்ளத்தாக்குகள், அணைகள் செங்குத்தான குன்றுகள் நிறைந்த மலைப்பிரதேசம் அல்லவா? அதனால், அங்கு வசிப்பவர்கள் சீதோஷ்ண நிலையின் பலவிதமான மாறுதல்களுக்கு உட்படுகிறார்கள். அங்கே, அநேகமாய் எப்பொழுதும் குளிர்தான் அதிகமாய் இருக்கும். வீட்டுக்குள்ளேயே அலுவல் உள்ளவர்களுக்குத் தங்களைக் கதகத என்று வைத்துக்கொள்ளத் தேநீர் வேண்டியிருக்கிறது. வெளியே வேலை செய்பவர்களுக்கோ தங்கள் தாகத்தைத் தணித்துக்கொள்ளத் தேநீர் அவசியமாய் இருக்கிறது.

எப்பொழுதும் புத்தப் புதிய ப்ரூக்பாண்ட் தேயிலை கிடைக்கும் இந்தியாவின் எட்டாக் கையிலுள்ள பிரதேசங்களில் சிக்கிமும் ஒன்று.

## ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"



# எல்லாவற்றையும் குறைவாக உபயோகியுங்கள்

## -உங்களுக்கும் உதவி செய்துகொண்டு -இந்தியாவிற்கும் உதவுங்கள்!



காகிதத்தை மிச்சப்படுத்து. சிறு காகித துண்டுகளை உபயோகியுங்கள். பழைய கவர்களை (உறைகளைத்) திரும்ப உபயோகியுங்கள்

இந்தியாவின் ஏழைகளுக்காக உங்களது தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். சரக்குகளுக்கும் எல்லாவித சேவைகளுக்கும் பலமான நெருக்கடி இன்று ஏற்பட்டிருக்கிறது. யாருக்கும் அறவே இல்லாமல் போய்விடுவதைத் தடுக்க, ஒவ்வொருவரும் தானாகவே கொஞ்சம் தேவையைக் குறைத்துக் கொள்ளவேண்டும். இது நாட்டுப் பற்றுடையவரின் கடமை.

இப்படிப்பட்ட சிக்கனங்களை 'உங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, அதன் நலன்களை அனுபவியுங்கள். தேவைகளைக் குறைக்கும் ஒவ்வொரு செயலாலும் சிறு சிறு தொகைகள் மிச்சமாகும். அந்த மிச்சங்களின் பொருட்டு சிக்கனத்தைக் கையாளுங்கள்.



விருந்துகளைக் குறையுங்கள்



ஆகாரத்தை சிக்கனப்படுத்துங்கள்—அது ஒரு தேசிய கடமை



நூலை வீணுக்காதீர்கள். அது கிடைப்பது அரிது விலையும் அதிகம்.



குழந்தைகளின் பழைய விளையாட்டுச் சாமான்களைப் பழுது பார்த்துக் கொடுங்கள். புதிதாக வாங்காதீர்கள்.



டிரங்க் டெலிபோனில் முன்னையவிடக் குறைவாகப் பேசுங்கள்



அதிவேக மிதமிஞ்சிய பாரம் ஏற்றியும் குறைவாக காற்றை அடித்தும் டயர்களைப், பாழாக்காதீர்கள்.

**பொருட்களை மிதமாகச் செலவிட்டு அவை தாராளமாகக் கிடைக்கும்படிச் செய்யுங்கள்**

**உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்**

AAA 1

இந்திய அரசாங்க இ. & பி. இலாகா வெளியீடு.

## ஓர் அறிய சந்தர்ப்பம்!

### கல்யாணங்களுக்கும், குடும்ப தேவைகளுக்கும்

உங்கள் மனதிற்கிசைந்த
வேலைப்பாடுகள் நிறைந்த பலவித நாகரீக பட்டு
புடவைகளையும், வெண்பட்டு, நூல் சேலை,
வேஷ்டிகளையும் சொந்ததயாரிப்பில் ஏராளமான
ஸ்டாக்கிலிருந்து பொறுக்கி எடுக்க

# ராதா ஸில்க் எம்போரியம்

ஹெட் ஆபீஸ்: மயிலாப்பூர்
மதருஸ்.
போன்: நெ. 8016

119, பெரிய தெரு,
கும்பகோணம்.


# ‘காவேரி’

**உள்நாடு—**

| | |
|---|---|
| ஒரு வருஷம் | 4—8—0 |
| ஆறு மாதம் | 2—4—0 |
| தனிப் பிரதி | 0—6—0 |

**சிலோன்—**

| | |
|---|---|
| ஒரு வருஷம் | 4-12—0 |
| ஆறு மாதம் | 2—8—0 |
| தனிப் பிரதி | 40 சதம் |

வி. பி. யில்—பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் நாணயமுள்ள ஏஜண்டுகள் தேவை.




## தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

# WOODWARD'S
# GRIPE WATER
*keeps baby well*

1-WW108-111' W. WOODWARD LTD LONDON, ENGLAND

*Agent:*— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

# இசை ஒளி

கர்னாடக சங்கீத வித்வான்

கும்பகோணம்

## A. D. சுல்தான்



தலை சிறந்து விளங்கி வரும் கர்னாடக சங்கீத வித்வான்களில் ஒருவரான கும்பகோணம் A. D. சுல்தான் அவர்கள் 29-4-45-ல் ஈரோட்டில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டில் பல ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கிடையில் கச்சேரி செய்தபொழுது மேற்படியாருக்கு "**இசை ஒளி**" என்ற — பட்டம் வழங்கப்பட்டது. —

இவரது கச்சேரி நடைபெறும் இடங்கள்

**13—5—45** போடி பொன்னுஸினிமா
**25—5—45** நாகூர் தர்க்கா ஷரீப்
**27—5—45** திருநெல்வேலி தியேட்டர்
ஜூன் முதல் வாரம் பெங்களூர் தியேட்டர்


# பொருளடக்கம்


பார்த்திப மலர் 4 | வைகாசி இதழ் 10



வெற்றி - யாருக்கு? ... 8
ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு 11
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 14
  ராமய்யா
இறுதி இடம் ... 17
  ரா. ஸ்ரீ தேசிகன்
சுதம்பம் ... 23
மல்லிகைச் செண்டு ... 25
  கே. சுந்தரம்மாள்
வடக்கும் தெற்கும் ... 30
  யோகி சுத்தானந்த பாரதியார்
சூரியனும் அதன் குடும்பமும்... 35
  ஆர். கே. விசுவநாதன்
"ஜீனியிஸ் - அப்பா" ... 38
  டாக்டர் வே ராகவன்
காலேஜ் கர்வம் ... 44
  சாரி
இங்கிலீஷ் தமிழ் ... 54
  எஸ். பார்த்தஸாரதி அய்யங்கார்
என் ஐயா என் மதத்தையா? ... 57
  எம். எஸ். கமலா
பவபூதி ... 68
  க. சந்தானம்
புத்தக விமர்சனம் ... 71


குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

21018
சென்னை-600

# காவேரி

| | | |
|---|---|---|
| பார்த்திப<br>மலர் 4 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | வைகாசி<br>இதழ் 10 |

## வெற்றி—யாருக்கு ?

உலகெங்கும் வெற்றி முரசு. ஐரோப்பிய மக்களின் மகிழ்ச்சிக்குக் கங்குகரையிருக்க முடியாது. ருஷ்யாவிலும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அமர்க்களப்படுகிறது.

ஐரோப்பா முழுவதும் ஹதமாய்விட்டது. கோடிக்கணக்கில் மக்கள்—வயோதிகரல்ல, பருவகால மக்கள்—மடிந்தார்கள்; துன்பப்பட்டு உயிர் துறந்தார்கள். சாகுபடி செய்யப்பட்ட நிலங்களெல்லாம் டாங்கிகளினாலும் வெடிகுண்டுகளினாலும் பாழாக்கப்பட்டுக் கிடக்கின்றன, தொழிற்சாலைகள், கட்டடங்கள், இல்லங்கள் அனைத்தும் யுத்தத்துக்குப் பலி. போக்குவரத்து சாதனங்கள் இல்லை. உணவுப் பஞ்சம் சொல்லமுடியாது. இந்நிலையிலிருக்கிறார்கள் ஐரோப்பிய மக்கள். இந்த யுத்தத்தினால் அவர்கள் கண்ட பலன் இவையே.

ஜர்மானியர்களுக்கோ அவமானம் தாளமுடியாது. நாட்ஸி கட்சியின் யுத்தவெறியினால் மக்கள் அனைவரும் சுதந்திரமிழந்து துன்பங்களுக்கு உள்ளாக நேரிட்டுவிட்டது. ஜர்மானியர் சேதம் இந்த யுத்தத்தில் கணக்கிடமுடியாது. அதன் புள்ளி விபரங்கள் நமக்கு இன்னும் கிட்டவில்லை.

இந்த யுத்தத்தினால் வேறு எவரேனும் சௌகரியமடைந்திருக்கிறார்களா? இல்லை என்றுதான் கூறவேண்டி வருகிறது. இங்கிலாந்து உலகத்திலேயே பெரிய வல்லரசு என்ற பதவியை இழந்துவிட்டது.

அமெரிக்கா இந்த யுத்தத்தின் பயனாக உன்னத பதவி அடைந்துவிட்டது. ஆனால் அதைக் காப்பாற்ற அது படாத பாடு பட்டாக வேண்டும். ஏனெனில் ருஷ்யா அதற்குப் போட்டியாக அமைந்து விட்டது. ஜர்மனியின் தாக்குதலினால் இந்த யுத்தத்தில் அதிக சேதமடைந்த தேசம் ருஷ்யாதான். ஆனால் ஜர்மனியைச் சரணடையச் செய்தது ருஷ்யப் படைகள்தாம் என்பதை நாம் மறுக்கமுடியாது. இந்த உலக மஹாயுத்தத்தில் ருஷ்யா ஈடுபடவில்லையானால்—ருஷ்யாவை ஹிட்லர் சண்டைக்கு இழுக்காமலிருந்தாலும் அல்லது ருஷ்யா அதை நிர்வகித்து நாட்ஸிப் படைகளை ருஷ்யாவிலிருந்து துரத்தமுற்படாமல் போனாலும்—இந்த யுத்தம் நேசதேசப்படைகளை அடியோடு ஒழித்திருக்கும். எனவே ருஷ்யாவின் கீர்த்தியும் பலமும் ஓங்கிவிட்டன. அமெரிக்கா யுத்தத்தில் கலந்துகொண்டதினால்தான் ருஷ்யாவும் இங்கிலாந்தும் ஹிட்லரை முறியடிக்க முடிந்தது. எனவே ருஷ்யாவும் அமெரிக்காவும்தான் ஜர்மன் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். இந்த யுத்தத்தின் பயனாக அவை உலகநாடுகளில் முதன்மை ஸ்தானம் வகிப்பது இயல்பன்றோ?

உலகம் இனியேனும் சுகித்திருக்க முடியுமா? வருங்கால உலகில் யுத்தப் பேய் தலைகாட்ட இனி இயலாதா?

இந்த மஹாயுத்தம் முடிந்துவிட்டதே ஒழிய யுத்தமே ஒழிந்துவிடக்கூடும் என்று

ЗС
М21,N4217 N45.4-10-11



கூறமுடியாது. இந்த யுத்தத்தின் முடிவே அடுத்த யுத்தத்துக்கு அடிகோலியதாகவும் ஆகலாம் என்று பல சரித்திர நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மேலும் உலக சமாதானத்தை நிலைநாட்ட வென வகுக்கப்பட்டுள்ள உலகஸ்தாபனத்தின் அமைப்பைக் கவனித்தால் எளிய நாடுகள் யுத்தத்தை எழுப்ப இயலாதபடி செய்யப்படுகின்றனவே ஒழிய, பெரிய வல்லரசுகள் யுத்தம் தொடராதபடி நிபந்தனைகள் ஒன்றும் விதிக்கக்காணேம். ஐந்து பெரிய வல்லரசுகளுக்குள் மனஸ்தாபம் ஏற்படாதவரை யுத்தம் நிகழ இடமில்லை. மற்ற நாடுகளுக்குள்ள சச்சரவுகளைப் பெரிய வல்லரசுகளே சமாளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அடிமை நிலையிலுள்ள தேசங்களுக்கு விமோசனம் இல்லை என்பது தெளிவாகி விட்டது. அவை ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்யத்தின் கீழ்தான் வாழ வேண்டும். ஆனல் இவ்வல்லரசுகள் அந்நாடுகளுக்கு டிரஸ்டிகள் என்ற முறையில் பரிபாலனம் செய்வார்களாம். இவர்கள் ஆட்சியை மேற்பார்வையிட எவருக்கும் அதிகாரமில்லை. இவர்களின் ஆட்சிக்கு முடிவு உண்டா என்பதைப் பற்றி விபரம் கிடையாது. உலகப் பாதுகாப்புக் கவுன்ஸில் இவ்விஷயங்களில் தலையிடாது.

எனவே யுத்தத்தினல் வெற்றி யாருக்கு? உலகத்திலுள்ள பெரும்பாலான மக்கள் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். இந்த யுத்தத்தினல் அவர்களுக்கு விமோசனம் இல்லை. ஜர்மனிக்கு விமோசனம் இல்லை. ஐரோப்பிய சிறு நாடுகள், பக்கத்திலுள்ள பெரிய வல்லரசுகளின் இழுப்புக்கு இணங்கி நடிக்கவேண்டும். இல்லையேல் கபளீகரம்தான்; கேட்பாரில்லை. உலகப் பாதுகாப்பு ஸ்தாபனம் இதில் தலையிடாது. எனவே இவ்வுலக யுத்தத்தின் பயனகப் பல பெரிய வல்லரசுகள் இருந்த இடத்தில் இப்பொழுது நாலைந்து வல்லரசுகளே உலகத்தை அடக்கி ஆளப்போகின்றன.

இதைத்தான் வெற்றி என்று கொண்டாடுகிறார்கள். ஹிட்லர் மாண்டதும், ஜர்மானிய அசுரப்படைகள் சரணடைந்ததும் உலகத்துக்கு விமோசன அறிகுறி தான். ஆனல் உலகத்துக்கு விமோசனம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல இடமில்லை.

நாடாசை ஒழியவில்லை. அடிமை நாடுகளுக்கு விமோசனமில்லை. சுதந்திரத்தை உலகத்தில் நிலைநாட்ட எண்ணமில்லை. வெற்றி என்ற பதம் பாமர மக்களுக்கு அர்த்தமளிக்கவில்லை.

ஜர்மன் வீழ்ச்சியினல், ஐக்கிய நாடுகளின் வெற்றியால், இந்திய மக்களின் உள்ளம் மகிழாது. பாஸிஸத்தையும் ஹிட்லரிஸத்தையும் எதிர்த்த இந்தியத் தலைவர்கள் சுதந்திரம் வேண்டுமென்று வற்புறுத்தியதற்காகச் சிறையில் வாடி வதங்குகிறார்கள். நாடு சுதந்திரதாகமெடுத்து அலைகிறது. மக்கள் அவதிப்படுகிறார்கள். இதெற்கெல்லாம் இந்த வெற்றியினல் என்ன விமோசனம்?

லக்ஷக்கணக்கான இந்தியர்கள் போர் முனையில் ஈடுபட்டு இவ்வெற்றியை அடையச் செய்தார்கள். ஆனல் அவர்கள் நாடு அடைந்த நன்மை ஒன்றுமில்லை.

இந்த யுத்தத்தின் பயனக இந்தியா விடுதலை அடைவது திண்ணம் என்று பறைசாற்றப்பட்டது. நாம் அடைந்ததென்ன? பஞ்சமும் கண்ட்ரோல்களும் அவதியும்தான்.

ஜப்பானிய அரக்கன் இன்னும் தன் அகலக் காலைக் குறுக்கியபாடில்லை. அவனை அடக்கியாக வேண்டும். அம்முயற்சியில் இந்தியா மிகவும் முனைய வேண்டி வரும். பர்மா அநேகமாக எதிரியிடமிருந்து மீட்கப்பட்டுவிட்டது. ஆனல் பர்மியர்களுக்குச் சுய ஆட்சி உண்டா? பதிலில்லை. இந்தியாவுக்கு ஊக்கமளிக்க விடுதலை தினம் குறிப்பிடப்படுமா? தலைவர்கள் விடுதலையாவார்களா? 'இல்லை' என்ற பதில்தான் எதிரொலிக்கிறது.

இங்கிலையில் இந்தியாவில் வெற்றிக் கொண்டாட்டத்திற்கு அர்த்தமென்ன? ஐக்கிய நாடுகளின் வெற்றியை நாமும் பாராட்டுகிறேம் என்பதைத் தெரியப்படுத்தவே இக்கொண்டாட்டம் என்று தான் கொள்ளவேண்டும். நம்மை ஆளும் அரசாங்கத்தாருடன் நாம் இத்தருணங்

களில் ஒத்துப்பாட முன்வருவோம்என் பதை இக்கொண்டாட்டம்தெரிவிக்கிறது

ருஷ்யாவிலும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பொதுமக்கள் இவ்வெற்றியை எவ்விதம் கொண்டாடுவார்கள் என்று சற்று யோசித்தால் நமக்கே பிரமிப்பாய் இருக்கும். உள்ளம் குளிர்ந்து மகிழ்ச்சி எழும் அம்மக்களுக்கிடையே; வெற்றிக்கொண்டாட்டத்தில் அது பிரதிபலிக்கும். ஆனால் இந்தியாவில் என்ன? கவர்மெண்டார் விதித்த முறைப்படி கொண்டாட்டம். மக்களிடையே குதூகலமில்லை; ஆர்ப்பாட்டமில்லை, இவ்வெற்றி தங்களுடையது என்று எண்ண இடமில்லை.

இந்திய மக்களுக்கு ஹிட்லர் கோஷ்டியாரிடம் பற்று ஏதேனும் உண்டா? இல்லவேயில்லை. நாட்ஸிஸம் ஒழிந்தது பெரிய வெற்றி என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் வேறு ரூபத்திலுள்ள யதேச்சாதிகாரமும் ஒழிந்தாலொழிய அவர்களுக்கு விமோசனமில்லையே என ஏங்குகிறார்கள்.

ஐக்கிய நாடுகளின் வெற்றியை அடிமை நாடுகளின் வெற்றியாகவும் மாற்றி அமைப்பார்களானால் இதை உலக சிரந்தரவெற்றி என்று எல்லோரும் ஹிருதய பூர்வமாகக் கொண்டாடுவார்கள். ஸான் பிரான்ஸிஸ்கோவில் கூடிய பிரதிநிதிகள் இதைச்செய்ய முற்படுவார்களா?




Madras Stockists:- **M/s. RAJAN DRUG STORES**
155, Nyniappa Naick Street, MADRAS.

# ஸான் பிரான்ஸிஸ்கோ மகாநாடு

யுத்தம் முடிந்துவிட்டது. கோடிக் கணக்கில் மக்கள் மடிந்தார்கள். நாடுகள் பாழாயின; நகரங்கள் அழிந்தன. ஜர்மானியர்கள் மண்ணைக் கவ்வ நேர்ந்தது. ஐந்தரை வருஷம் போர் நீடித்தது. மக்கள் பட்ட துயரம் கணக்கில்லை, இனியேனும் இத்தகைய போர் மூளாமலிருப்பதற்கு வழி பிறக்குமா? நேசதேசங்கள் இத்துறையில் என்ன முயற்சி செய்து வருகிறார்கள். அது வெற்றி பெறுமா? இப்பிரச்னைகளைச் சற்றே ஆராய்வோம்.

இனி உலகில் சமாதானம் என்றும் நிலவவேண்டுமென்ற அவாவினால்தான் இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷ்யா இந்நாடுகள் தங்களுக்குள்ள வித்யாசங்களைத் தீர்த்துக்கொண்டு பிற தேசங்களால் சண்டை எழுப்பப்படாமல் பாதுகாப்பதற்கு ஓர் உலக ஸ்தாபனம் ஏற்படுத்துவதென நிச்சயித்திருக்கிறார்கள். டம்பார்ட்டன் ஓக்ஸ் என்னுமிடத்தில் வகுக்கப்பட்ட திட்டம் அதுதான். அத்திட்டமே இன்று ஸான் பிரான்ஸிஸ்கோவில் விவாதிக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?

உலக சமாதானத்தை நிலைநிறுத்தவும், அதைக் குலைக்க விரும்பும் தேசத்தை அடக்கவும், நாடுகளுக்குள் ஏற்படும் சச்சரவுகளைச் சமரஸத்தில் தீர்த்து வைக்கவும் "ஐக்கிய தேசங்கள்" என்ற ஓர் உலக சங்கம் அமைக்கப்படும். அதில் சமாதானத்தை விரும்பும் எல்லாத் தேசங்களும் அங்கம் வஹிக்கலாம். பொது அஸெம்பிளி (General Assembly) என்பது 46 தேசங்கள் கொண்ட சபை. இதில் பல உட்பிரிவுகள் உண்டு. பாதுகாப்புக் கவுன்ஸில் என்பது 11 தேசங்கள் அடங்கியது. இதில் இரண்டுவகை அங்கத்தினர்கள் உண்டு—நிரந்தர மெம்பர்கள், தற்காலீக மெம்பர்கள் என. இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷ்யா, பிரான்ஸ், சைனா இந்தப் பஞ்சபாண்டவர்களும் நிரந்தர மெம்பர்கள். எஞ்சியுள்ள 6 ஸ்தானங்களுக்கு இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பொது அஸெம்பிளியிலிருந்து மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒரு முறை அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி வகித்தவர்கள் மறுமுறை உடனடியாகத் தேர்தலுக்கு நிற்கக் கூடாது.

இந்தப் பாதுகாப்புக் கவுன்ஸில்தான் இந்த ஸ்தாபனத்தின் ஜீவநாடி. நிரந்தர மெம்பர்கள் ஏகோபித்தால்தான் எத்தகைய முக்கிய தீர்மானமும் நிறைவேற்றலாம். சாதாரண விஷயங்களில்கூட ஏழு ஓட்டுக்கள் இருந்தால்தான் எந்தத் தீர்மானமும் நிறைவேறும். இவ்விதியிலிருந்து தற்காலீக மெம்பர்கள்மட்டும் நிரந்தர மெம்பர்களின் ஆதரவின்றி எதையும் செய்யமுடியாது என ஏற்படுகிறது.

நிரந்தர மெம்பர்களில் யாரேனும் உலக சமாதானத்தைக் குலைக்க முற்பட்டால் அதை அடக்க இந்த ஸ்தாபனம் ஒன்றும் செய்ய இயலாது. ஏனென்றால், நிரந்தர மெம்பர்கள் ஏகோபித்துத் தீர்மானித்தாலொழிய ஒரு தீர்மானமும் நிறைவேற இடமில்லை. ஆகையால் இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால் சில்லறைத் தேசங்கள்மட்டும் சண்டை எழுப்பாமல் பாதுகாத்துக்கொள்ளும் இச்சங்கம். சரித்திரத்தை ஆராய்ந்தால் பெரியதேசங்களின் உதவியின்றிச் சில்லறைத் தேசங்கள் எப்பொழுதும் யுத்தம் உண்டுபண்ணா. அச்சந்தர்ப்பங்களில் இந்த ஸ்தாபனத்தால் நீதி வழங்க முடியாது. பலத்தவர் கட்சியில் தீர்ப்புக்கூறவேண்டிவரும்.

இத்தகைய ஸ்தாபனத்தை ஏற்படுத்தத்தான் 46 தேசப்பிரதிநிதிகள் ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடியிருக்கிறார்கள். பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு 6 தற்காலீக மெம்பர்கள் தேர்ந்தெடுப்பதில் எத்தகைய கொள்கைகள் கையாளப்பட வேண்டுமென்பதைப்பற்றித் தீவிர விவாதம் நடந்து வருகிறது. பெரிய வல்லரசுகளின் கையாட்கள்தாம் அநேகமாக இதிலும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

பெரிய வல்லரசுகள் இனி யுத்தத்தை எழுப்பாமல், தங்களுக்குள்ள சச்சரவுகளைத் தாங்களே இந்த ஸ்தாபனத்தின்

மூலம் தீர்த்துக் கொள்வதாகக் கங்கணம் கட்டிக் கொண்டால் அநேகமாக உலகில் இனி யுத்தம் தலைகாட்டாமலிருந்தாலு மிருக்கலாம். இது சாத்தியமா என்பதைச் சற்று விவரிப்போம்.

ஐரோப்பிய யுத்தம் தீவிரமாக நடந்து வரும்பொழுதே ருஷ்யாவுக்கும் நேசநாடு களுக்கும் இடையே அநேக தகராறுகள் தலைகாட்டி வந்தன. கிழக்கு ஐரோப்பா விலுள்ள பிரதேசங்கள் அனைத்தும் ராணுவ முக்யத்வம் உள்ளவை. வருங் கால உலகில் ஏதேனும் யுத்தம் ஏற்படு மானல் அப்பிரதேசங்கள் யார் கையில் இருக்கின்றனவோ அவற்றைப் பொறுத் திருக்கிறது யுத்தத்தின் முடிவு. ஐரோப் பாவில் யுத்தம் மூளாதிருக்கவேண்டு மானல் இப்பிரதேசங்களிலுள்ள பலசிக் கலான பிரச்னைகள் தீரவேண்டும்.

இங்குள்ள கோடிக் கணக்கான மக்க ளின் சுகவாழ்க்கை இப் பிரச்னையை ஒட்டி நிற்கிறது. ஸோவியத் ருஷ்யாவுக்கும் மேற்கிலுள்ள இங்கிலாந்துக்கும் பரஸ்பர அவநம்பிக்கை. ருஷ்யாவினுடைய பொது உடைமைக் கொள்கையைக் கண்டு இங்கி லாந்து, அமெரிக்கா இத்தேசங்களிலுள்ள பெரிய முதலாளிகள் ருஷ்யாவைத் தொ லைக்கச் சதி செய்வார்கள், சண்டைக்கு இழுப்பார்கள் என்று ருஷ்யா பயப் படுகிறது. மேற்கு ஜர்மனியை ஆக்கிர மித்துக்கொண்டு அங்குள்ள ஏராளமான தொழிற்சாலைகளைத் தங்கள் மூலதனத்தி னல் ஒடச்செய்து ருஷ்யாவைத் தாக்கத் தளவாடங்கள் தயாரிக்க முற்படுவார்கள் என ஐயமுறுகிறது. அதைத் தகர்த்தெறி யத் தன்னுடைய மேற்கு எல்லைப்புறத்தை விஸ்தரித்துக்கொள்வதுடன் அதற்கடுத் தாற்போலுள்ள சிறிய நாடுகளில் தன் செல்வாக்கிற்குட்பட்ட அரசை அமைத் துக்கொள்ள வேண்டுமென முயற்சி செய்து வருகிறது ருஷ்யா. இதனல்தான் இப் பிரதேசங்களிலுள்ள நாடுகளில் பொது உடைமைக் கட்சித் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் கட்சி ஆட்சியை ஆதரித்து வருகிறது. யூகோஸ் லாவியாவில் இம்முயற்சி மிகவும் வெற்றி கரமாக நடந்துவருகிறது.

ஆனல் போலந்தில் அது பலிக்கவில்லை. அங்குள்ள மக்கள் அநேகமாகக் கத்தோ லிக்கர்கள். அவர்களுக்கு ருஷ்யர்களைக் கண்டால் நீண்டநாள் பகை. ஆகையால் ருஷ்யா இப்பிரதேசத்தில் சில பாகங்களை ராணுவ தந்திர நிமித்தம் தன் தேசத் தோடு பிணைத்துக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்தி வருகிறது. கர்ஸான் லயனுக்குக் கிழக்கேயுள்ள போலிஷ் பிர தேசங்களை (கிழக்குக் காலிஷயா, அதன் தலைநகரான லவௌ உள்பட) ருஷ்யா சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வாதாடுகிறது. கோனிஸ்பர்க் வரை (அந் நகர் உள்பட) கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள சில ஜில்லாக்களையும் ருஷ்யா சேர்த்துக் கொள்ள விரும்புகிறது. இதனல் பால் டிக் கடலில் ருஷ்யாவுக்கு ஐஸினல் மூடப் படாத ஒரு துறைமுகம் கிடைக்கிறது. இதற்குப் பிரதியாக ஒடர்—நீஸ்ஸீ இந்த நதிகளுக்குக் கிழக்கேயுள்ள ஜர்மன் பிர தேசங்களைப் போலந்துக்கு ருஷ்யா அளிக் கும். இவ்வகண்ட பிரதேசத்தில் டான் ஸிக் காரிடர், கிழக்குப் பிரஷ்யா, பொம ரேனியாவில் பெரும் பாகம், ஸைலீஷியா உள்பட போலந்துக்குக் கிடைக்கிறது.

இந்தப் பிரிவினையைப் போலந்து ஒப்புக் கொள்ளவில்லை. கர்ஸான் லயனுக்குக் கிழக்கேயுள்ள போலிஷ் பிரதேசத்தில் பெருவாரியாக லிதுவேனியன், யுக்ரேனி யன் ருஷ்யன் குடியானவர்கள் தான் வசிக் கிறார்கள். அவர்கள் ருஷ்யன் ஆதிக்யத் தின் கீழ் சுகித்து வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. போன யுத்தத்தில் இப்பிர தேசம் ருஷ்யர்களிடமிருந்து போலந்தால் கைப்பற்றப்பட்டு அவர்கள் ஆதிக்யத்தின் கீழ் இந்த யுத்தம் ஆரம்பம் வரை இருந்து வந்தது. ஆனல் இப்பொழுது இங்கு 25 லக்ஷம் போலிஷ் மக்கள் வசித்து வருகிறார் கள். இப்பிரதேசம் ருஷ்யமயமாய் விட் டால் அவர்கள் அங்கிருந்து வெளியேற நேரிடும். அவர்களில் தொழிலாளிகள் அநேகமாகக் கிடையாது. தீவிர கத்தோ லிக்கர்கள் அவர்கள். இந்த யுத்தத்தில் அவர்களில் பத்து லக்ஷம் பேர்களை ருஷ்யர் கள் ஆசிய ருஷ்யாவுக்கு பலாத்காரமாகக் கடத்திச் சென்றதாகக் கருதப்படுகிறது. இச்செய்கையினல் இங்குள்ள போலிஷ் மக்கள் ருஷ்யாவின் ஆதிக்யத்திற்குள் வாழ்வதை வெறுக்கிறார்கள். இப்பிர தேசத்தில் போலிஷ் நாகரிகத்திற்குப் பெயர்போன வில்னு, லவௌ என்ற

நகரங்கள் உள்ளன எனவே போலிஷ் மக்கள் இப்பிரதேசங்களை ருஷ்யர் வசம் ஒப்புவித்து ஜர்மனியிலுள்ள பிரதேசத்தை மாற்றாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

மேலும் இந்த 25 லக்ஷம் போலிஷ் மக்களின் நிமித்தம் 100 லக்ஷம் ஜர்மன் மக்கள் ஜர்மன் பிரதேசத்திலிருந்து வெளியேற நேரிடுகிறது. இது மிகவும் கொடூரமான காரியம். இது சாத்தியமான காரியம் என்று வைத்துக்கொண்டாலும் ஜர்மானியர் மனதில் ஓர் ஆறாப்புண் உண்டாக்குவதாகும். எந்நாளும் இது அபாயம்தான். எனவே இந்த ஜர்மன் பிரதேசத்தைப் போலந்து நிரந்தரமாக ஆக்கிரமிக்க வேண்டுமென்றால் அவர்கள் ருஷ்யாவின் தயவை எதிர்பார்த்து நிற்க வேண்டும்.

இதுதான் ருஷ்ய—போலிஷ் தகராறு என்பது. இத்திட்டத்தை ஒருவாறு இங்கிலாந்து ஒப்புக்கொண்டுவிட்டது. ஆனால் லண்டனிலுள்ள போலிஷ் கவர்மெண்டார் இதை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

ருமேனியாவில் தன் கொள்கைக்குகந்த ஆட்சியை ருஷ்யா நிலைநாட்ட விரும்புகிறது. ஏன்? இல்லையேல் பால்கன் பிரதேசத்தில் தனக்கு எதிராகச் சூழ்ச்சிகள் நடக்கும் என நம்புகிறது. ஆகையினால் ருமேனியாமூலம் பால்கன் பிரதேசத்தைத் தன் ராணுவப் பாதுகாப்பில் வைத்துக்கொள்ள உத்தேசம். அம்மாதிரியே கிரீஸ் தேசத்தில் தனக்குத் தங்கு தடையற்ற செல்வாக்கு வேண்டுமென்று விரும்புகிறது இங்கிலாந்து. ஏஜியன் கடல் அப்பொழுதுதான் பிரிட்டிஷார் வசமிருக்கும். ருஷ்யாவுடன் யுத்தம் மூண்டால் டார்டனல்ஸ் துறைமுகத்தை உடனே மூட பிரிட்டனுக்கு வசதியிருக்கும். இத்தகைய ராணுவ ப்ரச்னைகளைப் பொறுத்துத்தான் தேச அமைப்புக்கள், எல்லைகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. வருங்கால யுத்தத்தை எதிர்பார்த்து இப்பொழுதிலிருந்தே அஸ்திவாரக்கல் நாட்டப்படுகிறது. இப்படிக் கேந்திர ஸ்தானங்களாக அமைந்துள்ள பாகங்களை ஏன் எல்லா நாடுகளும் சேர்ந்து ஆட்சி புரிந்துவரக்கூடாது. ஸான்பிரான்ஸிஸ்கோ மஹாநாட்டில் இதைப்பற்றிய பிரச்னை விவாதிக்கப்படமாட்டாது. காரணம் பரஸ்பர அவநம்பிக்கையே. உண்மையில் உலக சமாதானத்தில் பெரிய வல்லரசுகளுக்கு நம்பிக்கையில்லை. விஷயமறிந்தவர்கள் அவர்கள்; ஆனால் வெளிக்கு ஒன்றையும் காட்டிக்கொள்வதில்லை.

ஸான் பிரான்ஸிஸ்கோவில் கூடியுள்ள பிரதிநிதிகளில் அநேகருக்கு இது நன்கு தெரியும். நமது இந்தியப்பிரதிநிதிகளுக்கு மட்டும் இது தெரியாதென்று தான் தோன்றுகிறது. தெரிந்திருந்தால் ஸர் ராமசாமி முதலியாரின் இனிய பேச்சுக்கு அர்த்தமேது? இத்தகைய பேச்சுக்கள் கவைக்குதவா? அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளெல்லாம் அமெரிக்கா, இங்கிலாந்து, ருஷ்யா இவ்வல்லரசுகள் சேர்ந்து நடத்தப்போகும் உலக ஆட்சியை எல்லா நாடுகளின் சம்மதம் பெற்ற ஆட்சி என்று பறை சாற்றவே நாடகம் நடிக்கப்படுகிறது.

ஸான் பிரான்ஸிஸ்கோ மஹாநாட்டின் பலனாக உலகில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்று நம்புவது மதியீனமன்றோ?

## முகப்புப் படம்

ஸான்பிரான்ஸிஸ்கோ வானில் லக்ஷக்கணக்கான நக்ஷத்திரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவைகளுக்கு சிகரம் வைத்தாற்போல் ஜாஜ்வல்யமாய் விளங்குவது இரு நக்ஷத்திரங்களே. ஒன்று ருஷ்ய வானிலுதித்த மூஸேர் **மாலடாவ்.** இவர்தான் ருஷ்யாவின் வெளிநாட்டு மந்திரி. ஸான்பிரான்ஸிஸ்கோ வானின் பிரகாசம் இவரைப் பொறுத்திருக்கிறது. இம்மலரில் மூஸேர் மாலடாவின் திருவுருவம் காணப்படுகிறது. மற்றொரு ஜோதி இந்தியப் பொதுமக்களின் பிரதிநிதி (இந்திய கவர்மெண்டாருடைய அல்ல) ஸ்ரீ மதி **விஜயலக்ஷ்மி பண்டிட்.** இன்னாரின் படம் தான் நமது சித்திரை முகப்பை அலங்கரித்தது.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

சென்ற இரண்டு மலர்களில் எழுதிய அபிப்பிராயங்களை அருமையுடன் ஆமோதித்து அம்மாஞ்சிக்குப் பல கடிதங்கள்கிடைத்தன. அவைகளில் குறிப்பிடத் தக்கவை இரண்டு. திருநெல்வேலியிலிருந்து ஓர் இரசிகர் எழுதிய கடிதத்திலிருந்து ஒரு சிறிய வசனத்தைக் குறிப்பிடுகிறேன்:—

“பிடிலைப்பற்றித் தாங்கள் கூறுவது பெரும்பாலும் பொருத்தமானது. அதனால் பிடிலின் கௌரவம் குறையவில்லை என்பது தான் என் நினைவு. குடிசைக்கு விளக்குப் போடவேண்டும் என்றால் சூர்யனைக் கொண்டு மாட்டவேண்டாம் என்கிறீர்கள். இவ்வளவுதானே! இதனால் சூர்யன் பெருமை குறைந்துவிடுமா? பக்க வாத்தியங்கள் தேவை என்றால் அவரவர்களுடைய ஞானத்திற்கும் சாரீர சாதக பலத்திற்கும் பொருத்தமான பக்க வாத்தியங்கள் உபயோகிப்பதே நல்லது. அதல்லாமல் பழக்கத்தில் உள்ளது என்பதற்காகவோ அல்லது டம்பத்திற்காகவோ காரியங்களைச் செய்ய முயன்றால் கூப்பாடும் கொம்மாளியும் கிடைக்குமே யல்லாது சங்கீதம் கிடைக்காது.”

மற்றொரு நண்பர் பம்பாயிலிருந்து ஆங்கிலத்தில் ஒரு பெரிய கடிதம் எழுதி இருக்கிறார். அதில் முக்கிய கருத்து என்னவென்றால் கர்னாடக சங்கீத வித்வான்கள் பம்பாய்க்குச்சென்று ஏராளமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏனோதானோவென்று பாடிவிட்டுப் போய்விடுகிறார்களென்றும், டிக்கட்டுக் கட்டணங்கள் சாமான்ய ஜனங்களுடைய சக்திக்கு அதிகமாய் இருப்பதாகவும், அதையும் கொடுத்துக் கச்சேரிக்குப் போகும் ரசிகர்களுக்கு ஒரு விதத்திலும் மனசு திருப்தி இல்லாமல் போவதாகவும், ஒவ்வொரு கச்சேரியிலும் அனாவசியமான ஸ்துதிப்பேச்சு ஏற்பட்டு இருப்பதாகவும், இத்தகைய ஒழுக்கங்களால் அந்தப் பட்டணத்தில் நடைபெறும் கச்சேரிகள் சங்கீதக் கொம்மாளங்களாக முடிகின்றனவேயல்லாது கச்சேரிகளாகக் காணப்படவில்லை என்பதே.

நமது பம்பாய் நண்பர் எழுதியதைக் குறித்து அம்மாஞ்சியும் நானும் வருந்துகிறோம். அவருக்கு ஆறுதல் கூறுவதில் நாங்கள் சொல்லுவது ஒரே விஷயம். அதாவது கர்னாடக சங்கீதம் வெகுசெழிப்பாக வளரும் சென்னைப்பட்டணத்திலேயே இந்த மாதிரி அசந்தர்ப்பங்கள் குடிகொண்டிருக்கின்றன என்றால், பம்பாயைப்பற்றி அங்கலாய்த்தல் எதற்கு? சென்னையில் சங்கீத அபிமானி ஒருவன் மாதம் ஒன்றில் நான்கு கச்சேரிகள் கேட்க விரும்பினால் அதமபட்சம் நாற்பது ரூபாய் தனக்குமட்டும் செலவழிக்க வேண்டும். குடும்பசகிதமாகச் சென்றால் இந்தத் தொகையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். நான்கு மணிநேரம் கச்சேரியில் உட்கார்ந்து விட்டு வந்தால் வீட்டுக்கு வந்த பிறகு முழங்கால்கள் இரண்டுக்கும் பத்து அரைத்துப் போடவேண்டும். ஏனென்றால் முன் வரிசை நாற்காலிகளில் முழங்கால்கள் உராய்ந்து, சதை வீங்கியோ அல்லது தோல் வழுவுண்டோ போய் இருக்கும். அடுத்த நாள் உடம்பெங்கும் ரத்தக்கட்டிகள் உண்டாகும். இடுப்புச்சுளுக்குத் தீருவதற்கு ஒரு வாரமாகும். கச்சேரி அந்தத்தில் கேட்ட அசட்டுப் பேச்சுக் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும். இன்னும் வேறு வினை வேண்டுமா?

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் நிஜ சங்கீத அபிமானிகள் சபைகளில் நடக்கும் கச்சேரிகளைக் கேட்காமலும், காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டவிடாமலும் விஷப் பரீட்சை செய்யாமலும் அனாவசியமாகப் பணத்தைச் செலவழிக்காமல், பணத்தையும் அபிமானத்தையும் சேமித்துவைத்து வித்வான்களை வரவழைத்து, பத்துப்பேராகக் கூடி ஏகாந்தமாகவும், ஆத்மார்த்தமாகவும் சங்கீதத்தை அனுபவித்துத் திருப்தி அடையவேண்டும் என்று அம்மாஞ்சி சொல்லுகிறான். தற்கால விபரீத ஒழுக்கங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்கு இந்த மார்க்கம் ஒன்றே காணப்படுகிறது.

சென்ற மாதம் மயிலைச் சங்கீத சபையின் ஆதீனத்தில் ஹீராபாய் பரோடேகர் என்பவர் ஒரு கச்சேரி செய்தார். ரோஷனாரா பேகம், பாய் கேசரிபாய் இவ்விருவருடைய சங்கீதத்தையும் கேட்ட பிறகு, ஹீராபாயினுடைய கச்சேரியையும் கேட்டுவிடலாமே, என்று கருதி அம்மாஞ்சியும் நானும் முட்டி யிடித்துக்கொண்டு மூலையில் உட்கார்ந்தோம். ஆனால் அன்றைய தினம் எங்களுக்கு ஒன்றும் ரசிக்கவில்லை. கச்சேரியின் துவக்கமே சுமார் ஒரு மணி நேரம் காலதாமதம் ஆயிற்று. ஸ்ரீமதி ஹீராபாய்க்குச் சாரீரம் வெகு இடக்குச்செய்துவிட்டது. ரோஷனாரா பேகம், கேசர்பாய் இவர்களுடைய சங்கீதத்திற்கும், ஹீராபாயினுடைய சங்கீதத்திற்கும் வெகு தூரம்போல் காணப்பட்டது. அன்று ஒரு திருநாளாய் இருக்கும் என்று நாங்கள் எண்ணிச் சென்றோம்; ஆனால் வெறு நாளாகவே ஆயிற்று.

ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி நாஷனல் பைன் ஆர்ட்ஸ் ஸர்க்கில் என்ற கூட்டத்தா

ரின் ஆதீனத்தில் நடைபெற்ற பரதநாட்டிய கச்சேரிக்கு அம்மாஞ்சி என்னை அழைத்துக்கொண்டுபோனான். அதே தினத்தில் மற்றோர் இடத்தில் இரண்டு சிறுமிகள் செய்த பரதநாட்டியக் கச்சேரிக்கு நான் போகலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் அம்மாஞ்சி அதற்கு இணங்கவில்லை. இந்த விஷயத்தில் அம்மாஞ்சியினுடைய அபிப்பிராயம்தான் உங்களுக்குத்தெரியுமே! அவன் சொன்னதாவது:— "பரதநாட்டியம் என்பது வயது முதிர்ந்து புத்தி தெரிந்த பெண்கள் காட்டும் கலை. அந்தக் கலைக்கு வேண்டிய முக்கிய அம்சங்கள் என்னவென்றால் பூரணமான வளர்ச்சியுள்ள உருவமும் பகுத்தறிவை நன்றாகக் காட்டக்கூடிய முகக் குறிகளும். இவ்விரு அம்சங்களும் பருவம் முற்றின பெண்களுக்கே உள்ளவையாதலால் சிறுகுழந்தைகளிடம் இந்தக் கலை சோபிக்காது. பகுத்தறிவு இல்லாத சிறுமிகளிடத்தில் நவரஸபாவம் ஊட்டி வைத்தாலும், ஸதசில் அவர்கள் அந்த பாவங்களை வெளியிடும் போது, ஸ்வானுபவம் இல்லாமல் இருக்குமே, ஆதலால் அதை எப்படி அனுபவிப்பது? ந்ருத்தியம், அதாவது அலாரிப்பு என்ற முதல் பாகத்தில் அங்கங்கள் அனைத்தும் ஏகோபித்துச் செய்யும் வேலைகளில் சரீர வளர்ச்சி பூரணமாக இல்லாத குழந்தைகள் ஆடினால், கேவலம் பொம்மலாட்டம்போல் காணப்படுமே அல்லாது, பரத நாட்டியம் ஆகாது. ஆதலால் பதினேழு பதினெட்டு வயதிற்குக் குறைந்த பெண் குழந்தைகளை ஸதசில் பரதநாட்டியம் ஆட வைப்பது, பத்து நாள் குழந்தைக்கு இட்லியும் கொழுக்கட்டையும் ஊட்டிவைப்பது போல் ஆகும். சிறு குழந்தைகள் என்ன செய்தாலும் தமாஷாகத்தான் இருக்கும். ஆனால் பருவம் முதிரும் முன் அவர்களை ஸதசில் நிற்க வைத்துக் கரகோஷம் செய்து மாலைகள் போட்டுப் பரிசுகளும் கொடுத்து விட்டால், குழந்தைகள் உற்சாகப்படலாம், அவர்களுடைய தாய் தந்தையர்களுக்கும் அமோகப் பூரிப்பு உண்டாகலாம், ஆனால் அது கலையாகாது; நாகரிகமும் குன்றித்தான் போகும். பரத நாட்டியத்தில் ஊக்கமுள்ள பெண்குழந்தைகள் எல்லாம் சிறுவயது முதல் சிட்சை பயிலவேண்டியதுதான். சிட்சை பயிலுங்கால் அவர்களை உற்சாகப்படுத்த அவரவர்களுடைய வீட்டுக்குள்ளேயே கோஷ்டிகளும் சேரலாம். ஆனால் சதசில் வந்து ஆடக்கூடிய தருணமும், பருவமும், பகுத்தறிவும், முதிர்ந்த பிறகுதான் வருமே அல்லாது பசும் பிராயத்தில் வாரா. சிறுமிகளுடைய தாய்தந்தையர்களுக்கு அம்மாஞ்சி சொல்லும் எச்சரிக்கை "ஆக்கப் பொறுத்தபின் ஆறப்பொறுக்கவேண்டும்?"


# புதுப்புஸ்தகங்கள்

ரூ. அ.

**1. இரு துருவங்கள்**

வி. ஸ. காண்டேகர் எழுதியது கா. ஸ்ரீ. ஸ்ரீ. அழகாய் மொழி பெயர்த்தது 5—8

**2. ஜனாதிபதி ரூஸ்வெல்ட்**

விரிவான சரித்திரம் 'ஹனுமான்' உதவி ஆசிரியர் கே. எஸ். ஜம்புநாதன் எழுதியது 1—4

**3. பிள்ளை வரம்**

முதலிய கதைகள் 'பெ. தூரன்' எழுதிய 19—சிறு கதைகள் 2—8

**4. மல்லிகை மாலை**

தமிழின்பத்தை நுகரும் வழியைக் காட்டும் கட்டுரைகள் அடங்கிய தொகுதி இது. 2—8

**5. கதைக்கோவை**

தொகுதி—IV 75 எழுத்தாளரின் 75 சிறு கதைகள் கையினால் செய்த உயர்ந்த காகிதத்தில் தயாரிக்கப்பட்டது. 11—0

எங்களிடம் எல்லாத் தமிழ்ப் புஸ்தகங்களும் கிடைக்கும்.

## அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

மேற்கூறிய பரதநாட்டியக் கச்சேரி செய்தவர் கும்பகோணவாசி பெரியநாயகி என்பவர். அந்தக் கச்சேரி வெகு நன்ருய் இருந்ததாகவே சொல்லவேண்டும். ந்ருத்தியத்தில் சிறிதேனும் அப்பு, அழுக்குப் காணவில்லை. விறுவிறுப்பும், தீர்மானமும் பந்தநல்லூர் பாணியை ஒட்டி பரிபூரணமாகவே இருந்ததாக நாங்கள் அபிப்பிராயப்பட்டோம். அபிநயத்தில் மாத்திரம் இன்னும் சிறிது விருத்திக்கு அவகாசம் இருப்பதாகத் தெரிந்தது. அதற்குக்காரணம் ஒருவேளை கூட்டத்தில் முதல்தரமான ரசிகர்கள் ஏராளமாகக் காணப்படாததால் இருந்திருக்கலாம். வேருர் இடத்தில் மற்ருெரு கச்சேரி இருந்ததால், இந்தக்கச்சேரியில் கூட்டம் சிறிது குறைவுதான். ஆயினும், நாஷனல் பைன் ஆட்ஸ் ஸர்கள் சங்கத்தினர் ஸ்ரீமதி பெரியநாயகியின் கச்சேரியை நடப்பித்தது பரதநாட்டியக்கலைக்கு நல்ல கைங்கரியம் செய்ததாகவே ஆமோதிக்க வேண்டும். அன்றைய தினம் அம்மாஞ்சி என்னை அங்கு அழைத்துப் போனதில் எனக்கு மிகவும் திருப்திகரமாகவே இருந்தது.

பலசமயங்களில் முரட்டுத்தனமாக அம்மாஞ்சி இந்தக் கச்சேரிக்குப் போகமாட்டேன், அந்தக்கச்சேரிக்குப் போவேன் என்று சொல்லுகிருனே தவிர அவனும் எக்கச்சக்கமாகச் சில சந்தர்ப்பங்களில் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிருன். அப்பொழுது அவனுடைய சங்கடத்தைக் கண்டு நான் அடக்க முடியாத ஆனந்தமடைவேன். இரண்டொரு தினங்களுக்குமுன் ஒரு நண்பர் வீட்டில் நடந்த கலியாணத்திற்கு போயிருந்தோம். அங்கு ஒருகச்சேரி நடந்துகொண்டிருந்தது. கச்சேரிசெய்தவரின் சங்கீதம் அம்மாஞ்சிக்கு என்றைக்கும் ஒவ்வாத வஸ்து. ஆனல் அருமையான நண்பர் ஒருவர் அம்மாஞ்சியின் கையைப் பிடித்துஇழுத்துக் கொண்டுபோய் முன்னலே அமர்த்திவிட்டார். அந்தச்சமயம் எனக்கு உண்டான சந்தோஷம் கங்குகரையில்லை, காவேரி வீச்சில்லை. ''அகப்பட்டுக் கொண்டானடா தும்மட்டிப்பட்டன்'' என்று பக்கத்திலிருந்த பத்துப்பேரிடம் சொல்லி நான் சந்தோஷித்தேன். அரை மணி நேரம் அம்மாஞ்சி உட்கார்ந்து இருக்கவேண்டிவந்தது. கடைசியாக எப்படியோ தப்பிக்கொண்டு வெளியேறினன். வெளிவந்தபின் ''லௌகிகத்துக்குநீயும் கட்டுப்படவேண்டி வந்தது பார்த்தாயா'' என்று பரிகசித்துச் சொன்னேன். அதற்கு அம்மாஞ்சி, சொன்ன பதில், ''நான் மாத்திரம் அல்ல, என்னுடன் கோஷ்டியிலிருந்தவர்கள் பலபேர் என் ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான். சங்கீதத்தைக் கேட்பதற்குப் பதிலாக வெற்றிலைச் சீவலைப்போட்டு ரசித்துக் கொண்டிருந்தோம்''

விருத்திக்கு வரவேண்டிய சங்கீத வித்வான்கள், (அதாவது, சிறிய வித்வான்கள்) சில மாதங்களாக ஒரு புதிய சம்பிரதாயத்தை அனுஷ்டித்து வருகிருர்கள். என்னவென்ருல் ''ஹிந்து'' பத்திரிகையில் டாம்பிகமாகத் தாங்கள் செய்யும் கச்சேரிகளைச் சொந்தப் பணம் செலவழித்து முன்னதாகவே பிரசாரப் படுத்துகிருர்கள். பலான தேதியில் பம்பாயில் கச்சேரி என்றும், ஹைதராபாத்தில் கச்சேரி என்றும், ஸ்ரீவைகுண்டத்தில் கச்சேரி என்றும், வேலூரில் கச்சேரி என்றும், இப்படி எல்லாம் தினசரிப்பத்திரிகையில் பிரசுரம் செய்து தங்களுடைய கிதாபை மேன்மைப் படுத்திக்கொள்ளுகிருர்கள். இனி ஒன்றுதான் குறைவு. அதாவது கச்சேரி கேட்க வருகிறவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஏதாவது பரிசு கொடுக்கப்படும் என்று சொல்லுவதுதான் பாக்கி. ''பிரசார ஒழுக்கம் என்பது எவ்வளவு மாறி வருகிறது பார்த்தீர்களா?'' என்று கேட்கிருன் அம்மாஞ்சி. சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் நமது வித்வான்கள் ராஜாங்கங்கள் சமஸ்தானங்கள் இவைகளின் ஆதீனத்தில் கச்சேரிகள் செய்து, க்யாதி பெற்று வெகு கௌரவமாகக் காலத்தைக் கழித்து, நிஜ அபிமானிகளிடம் சுலபிகளாக விளங்கி வந்தனர். அதற்குபின், அதாவது சுமார் இருபது வருஷங்களுக்கு முன் இசைத்தட்டுக்களில் அவர்களுடைய சங்கீதத்திறமையைப் பதிப்பித்து, அவைகளின் மூலமாகத் தம்முடைய சாமர்த்தியத்தை வெளிப்படுத்தினர். சுமார் பத்து வருஷங்களுக்குள் சிலர், பேசும் படங்களில் பங்கெடுத்துக்கொண்டு அதன்மூலம் பயன் பெற்று, ஏராளமாக பணமும், செல்வாக்கும் சேகரித்தனர். மற்றும் சிலர் சென்ற மூன்று, நான்கு வருஷங்களாகப் பிரபலமான உத்தியோகஸ்தர்களை அணுகி அவர்களுடைய சிநேக விசேஷத்தாலும், கைங்கர்யத்தாலும் தம்முடைய யோக்கியதைகளை அதிகப்படுத்திக்கொண்டனர். இன்னும் சிலர் யுத்தத்துக்காகப் பண வசூல் இயக்கங்களில் ஈடுபட்டு மேன்மை தங்கிய கவர்னர் முதல், வீதியில் போகும் வம்புச் சாவடிவரை வசீகரப்படுத்திவிட்டனர். இப்பொழுது சில மாதங்களாகப் பத்திரிகைப் பிரசுரம் பிரமாதமாக ஏற்பட்டிருக்கிறது. மேற்கூறிய அங்கங்களில் அகில இந்திய ரேடியோவைப்பற்றிச் சொல்லவில்லை. அந்தச் சங்கத்தினரால் விருத்திக்கு வந்தவர்கள் பலருண்டு. இவைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் சங்கீதத்தைப் பிரஜாபத்தியாபிமானத்துக்குரியவாறு (குடியாட்சிக்குப் பொருத்தமாக) செய்து விடவேண்டும் என்ற நவீன சம்பிரதாயம் எங்கேதான் முடியும் என்றுசொல்வது முடியாத காரியம் என்கிருன் அம்மாஞ்சி!

# இறுதி இடம்

ரா. ஸ்ரீ. தேசிகன்

சென்னைச் சடோஜிச்சந்து. ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணி இருக்கும். ஆபீசுக்குப் போகிற அவசரக் குறிகள் பத்மநாப ஐயங்கார் முகத்தில் இல்லை. நிதானமாய் உண்ண உட்கார்ந்திருந்தார். இலையில் மிகவும் அளிந்து போன சோற்றை அம்புஜம் வைத்தாள்.

"என்ன, இப்படிக் குழைந்துபோயிடுத்தே சாதம்" என்றுர் பத்மநாப ஐயங்கார். "நான் என்ன பண்ணுவேன்? எத்தனை கவனித்து வடித்தாலும் குழைந்து போயிடறது. அடியிலே காந்திவிடறது. புது அரிசியோ, என்னமோ? குழந்தைகளுக்கு ஒத்துக்கொள்ளமாட்டேன்கிறது. எனக்கோ வயறு படபடன்னு இரைகிறது."

"நம்மூர் அரிசிச் சாதமோ மல்லிகைப் பூப் போல இருக்குமே! எத்தனை ருசி! அதைச் சாப்பிட்ட வாயிக்கு இது சப்பின்னு இருக்கு"

"ஏன்ஞு ஊரிலிருந்து அரிசி வருகிறதில்லை?"

"நான்தான் வேண்டாம்னு சொன்னேன்"

"ஏன்ஞு, இந்த ஊரில் அழகாய் அரிசி அகப்படறதே"

"என்ன வந்தாலும் மிச்சப்படறதில்லையே. எல்லாம் அடிபட்டுப் போயிடறதே. வருஷா வருஷம் விளையற நெல்லை வித்துப் பூமியிலே போடச் சொன்னேன்"

"நாலு பேரும் அப்படி ஒத்திருந்தால் சரி. நீங்க பணம் வேறே அனுப்பிக்கிறகள். மத்தப் பிள்ளைகளுக்கு அரிசி போறதோ என்னமோ? கடைசிப்பிள்ளை ஆம்படையாளுக்கு வயிர மூக்குப் பொட்டு முளைச்சு வந்திருக்கு. கையிலே விதவிதமாய்த் தங்க சுவஸ்திக் வளைகள் குலுங்கறது"

"அவள் பிறந்தாத்திலே பண்ணிப் போட்டாளோ என்னமோ"

"அவள் பிறந்தாத்துச் சமாசாரத்தை எங்கிட்ட சொல்லறேகளாக்கும். பிறந்தாத்துப் பெருமையை உடம்பிறந்தானிடம் சொல்லிக்கிருப்பலே இருக்கு. அக்கம் பக்கத்தில் நாங்கள் இருந்திருக்கிறேும். மூணு தலைமுறையாக எங்காத்துக்குத் தெரியும். அவாளுடைய குடும்ப சமாசாரங்கள்"

"தம்பி பாச்சா பண்ணிப் போட்டிருக்காஞெ என்னமோ"

"உங்களைவிடச் சம்பளம் அதிகமோல்லையோ அவருக்கு. மூந்நாறு வந்தாலும் போறமாட்டேங்கறது"

"பட்டணம் எங்கே, மன்னுர்குடி எங்கே"

"எங்கிருந்தாலும் இப்பச் செலவு ஒண்ணுகத்தானிருக்காமே. விசை அரைக்கால் ரூபாய் வித்த கத்தாரிக்கை அரை ரூபாயாயிருக்காமே அங்கேயும்"

"பின்னை அவனுக்குப் பணம் எப்படி மிச்சப்படும்"

"அதுதானே சொல்லவறேன். அரிசியாய்ப் போறது; தேங்காயாகப் போறது; பயருய்ப் போறது; காய்கறியாய்ப்போறது;

"அப்படி ஒர வஞ்சனை அண்ணு செய்வாரா?"

நீங்க என்னத்தைக் கண்டகள். உங்களுக்கு வெளுத்ததெல்லாம் பாலு. உங்களை ஏமாத்தி உங்கள் தலையிலே நன்ஞு மூளகை அரைக்கப்போருள். வருஷா வருஷக் கணக்கு ஏதானும் காட்டருரா? இதுக்குப் போச்சு அதுக்குப் போச்சுன்னு முடிச்சுடுவர். உங்கள் தமக்கைக்குப் போறது உங்களுக்குத் தெரியுமா?"

"இதுக்கென்னபண்ணச் சொல்லறே"

"நமக்குள்ள பாகத்தை புரிச்சுக்கொடுக்கச் சொல்லுங்கள்"

"அவர் - இருக்கிறபொழுதே செய்து கொண்டால் நன்ஞயிருக்குமா?

"அதிலே கோணிண்டுபோயிடுமோ; இது ஒரு நாளைக்கு நடந்தே தீரவேண்டுந்தானே? பின்னுடி ஆறதை இப்பவே பண்ணினுட்டா ஹிம்சை இல்லை;' இப்ப மணமாய்ப்போயிடும்; பின்னுடி ரணகளமாய்ப்போகும்"

இப்பேச்சுக்கிடையே மெல்லச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார் பத்மநாப ஐயங்கார். இத்தகைய உபதேசத்தைச் செய்தவண்ணமே அம்புஜம் இருந்தாள். சந்தர்ப்பங்கள் வாய்க்கிறபொழுதெல்லாம் இதே பேச்சுத்தான். உண்ணுகிறபொழுது உலாவப்போகிறபொழுது உறங்கப்போகிறபொழுது எப்பொழுதுகளிலும் அயர்வில்லாமல் போதித்துக்கொண்டிருந்தாள். இடையருது முற்றுகை போட்டுக்கொண்டேயிருந்தால், எந்தக்கோட்டைதான் விழாது. பத்மநாப ஐயங்காரின் உள்ளம் இணங்கிவிட்டது. மாதங்கள் கழிந்தன. தகப்பனுருக்குக் கடிதம் போடுவது நின்றது. அவருக்கு மாதம் மாதம் அனுப்புகிற பணம் பட்டணத்து பாங்கியில் சேர ஆரம்பித்தது.

* * *

ஆடுதுறை அக்கிரகாரத்தில் ஒரு கிழவனும் ஒரு கிழவியும் பேசிக் கொண்டிருந்தனர்.

''மாசக்கணக்கிலே, ஏண்டி, பத்மநாமன் கடுதாசி போடவில்லை. உடம்பு அசௌக்கியமா? கவலையாயிருக்கே''

''உடம்பு ஒண்ணுமிருக்காது. கவலைப்படாதேயுங்கள். அவள் மந்திரம் உருவேத்திருப்பள்; பாகத்துக்கு வழிதேடருளோ என்னமோ''

''ஏன் அப்படிச் சொல்லறே; திடீரென்று அந்த எண்ணம் உனக்கு வருவானேன்''

குட்டிச்சுவரிலே முட்டிக்கொள்ளறதுக்கு வெள்ளெழுத்தா வரவேணும். மாசம் மாசம் பணம் அனுப்புகிறவன் எப்ப அனுப்பல்லையோ, அப்பவே விஷயம் புரியவில்லையா? பத்மநாபன் பாரமார்த்திகம்; சூதுவாது கிடையாது. ஆனுல் நித்தியம் கொட்டிக்கொண்டே இருந்தால் உருமாறிப் போயிடறது. அப்பவே சொன்னேனே, அந்தாத்துப் பெண் வேண்டாம்னு கேட்டாளா? சீர் சினத்தையைக் கண்டு அப்படியே மகிழ்ந்து போயிட்டகள். 'ஆ, என்று வாயைத் திறந்தகள். அம்மாவைக் கொண்டிருக்கும் பெண். அம்மா காலை வைச்சதும் அருமந்த குலத்தைக் கலைச்சாளே. அதுக்குப் பிறந்தது வேறு தினுசா இருக்குமா''?

''ஆமாம். நீ சொல்றது இப்பத்தான் என் மனசுக்குப் படறது. பிள்ளைகள் சல்லோப் புல்லோன்னு இருக்கமாட்டான்கள் போலிருக்கு. வந்திருக்கிற நாட்டுப்பெண்களோ சொல்லிக்கொள்ளவேண்டியதில்லை. தஞ்சாவூரில் இருக்கானே ரங்கு அவன் ஆம்படையாள் ஒரு முசுடு. அவன் மாமனுர் மாமியார் நம்ப குடும்பத்தைக் கலைக்கப்பாக்கிரு. மாயவரத்திலிருக்கானே நம்ம கிச்சு. அவனைச்சிச்சுவாக்கிவிட்டா அந்தத்தொடகாலி. மன்னுர்குடியிலிருக்கானே, அதைப்பத்திச் சொல்லவேண்டியதில்லை. சம்பளம் குறைச்சலா இருக்கேன்னு ரகசியமா நெல்லுகில்லு அனுப்பினுல்தான் என்ன விச்வாசம் இருக்கப் போறதா. நான் இருக்கச்சே நிலத்தை நாலு துண்டாப் போடப் பாக்கிருங்களே! நாள்கிழமைக்கு வந்தால் நாட்டுப்பெண்கள் எலியும் பூனையும் போலிருக்கும். பையன்கள் ஒரு தினுசா போனுலும் இந்தப் பெண்கள் குடும்பத்தை இரண்டு பண்ணிவிடும்.''

''ஏன் இரண்டு பண்ணும்; நாலுபண்ணும்னு சொல்லுங்கள்''

இவர்கள் இவ்வண்ணம் பேசிக்கொண்டிருக்கும் தறுவாயில் தபாற்காரன் 'தபால்' என்ருன்.

''பட்டணமா? பாருங்கள்'' என்ருன் ரங்கம். 'ஆமாம்' என்று சொல்லிக்கொண்டே பிரித்துப் பார்த்தார் ராமஸ்வாமி அய்யங்கார்.

''ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு வருகிறேன். ஏதானும் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். உங்களை நன்ருய்த் தெரிந்து கொண்டுவிட்டேன்'' என்ற வரிகளைத் திருப்பித் திருப்பிப் படித்தார்.

''என்னமோ இத்தனைநாள் இல்லாது என்னைத் தெரிந்துகொண்டுட்டான்''

''பாகத்தைப் பண்ணித் தொலையுங்கள்.

''மூணே முக்கால் வேலியாயிருக்கே நாலு வேலியானுல் ஆளுக்கு ஒரு வேலி வரும்னு பார்த்தேன். அது முடியாது போலிருக்கே! எனக்கும் வயசாச்சு; தலைக்குப் பிரித்துக் கொடுத்துட்டு ஒவ்வொரு பிள்ளையிடம் மூணுமாசம் இருந்தால் நம்ம பொழுதுபோயிடும்''

''அப்படிச் செய்யாதேயுங்கள்; நமக்கென்னு கொஞ்சம் நிலத்தை ஒதுக்கி வைச்சுக்கொள்ளுங்கள். இந்தப் பசங்கள் நமக்கு ஒழுங்காய்ச் சோறு போடுவாங்கள் என்பது என்ன நிச்சயம்''

''என்னமோ பார்ப்போம்''

ஆடுதுறையில் ஒரு நடுப்பகல். கழனிகளின் மீதும், பூங்காவு மீதும், குளம்

குட்டைகள் மீதும் ஓர் அயர்வு படர்ந்து விட்டது. வெய்யோன் வெப்பம் தாங்காது பறவைகள் எங்கேயோ பதுங்கி விட்டன. இலை ஆட்டமில்லை. அமைதியிலிருந்து சட்டென எழும் சண்ட மாருதமென ஒரு பெரிய பூசல் கேட்டது.

"இத்தனை ஓர வஞ்சனையா உங்களுக்கு" என்று சீறிவிழுந்தார் பத்மநாப ஐயங்கார்.

"என்ன பண்ணி விட்டேன்"

"பாச்சுவுக்கு வருஷா வருஷம் நெல் போறது; எனக்கு ஒருமணி நெல் காட்டினீர்களா?

"யார் சொன்னு உனக்கு"

"யாரானும் சொல்லணுமா. பாச்சு ஆம்படையாளுக்கு நகை நட்டெல்லாம் எப்படி வந்ததோ"

"வயிறு வாய் ஒடுக்கிச் சம்பாதித்துப் போட்டால் உனக்கு ஆகலலை, இத்தனை பொருமை உனக்கு. நான் நல்லவேஷ்டி கட்டிக் கொண்டா உனக்கு எங்கேயோபத்திக்கிறது" என்று குறுக்கே பாய்ந்தார் பார்த்த சாரதி ஐயங்கார்.

"உனக்கு மிச்சப்படும்மடா? தொலையாத சம்பளமில்லையா உனக்கு"

"நீ சம்பாதிச்சா உன்னோடு வைச்சுக்கோ; என் பேச்சை யெடுத்தையோ ரணகளப் படுத்திடுவேன்"

"நீங்க நெல் அனுப்பினகளா இல்லையா? ஏன் மென்னு முழுங்கறகள்"

"தட்டினு முட்டினு அனுப்பினு குறைஞ்சு போய்விடுமா. உன் தம்பிதானே"

"நாங்களெல்லாம் தம்பிகள் இல்லையோ" என்று ஆவேசம் வந்தவர்கள் போலக் குதித்தெழுந்தனர்.

வார்த்தைகள் தடித்தன; கண்கள் பேசின; வாய்கள் நோக்கின. நிலை தடுமாறிவிட்டது. ரங்க நாயகி மூலையில் அழ ஆரம்பித்தாள்; பெத்த வயித்திலே பிரண்டையை வைச்சுக் கட்டிக்கணு என்று வயிற்றிலே அடித்துக் கொண்டாள்.

"என்ன பண்ணச் சொல்லறே"

"எல்லாத்தையும் பிரித்துவைச்சுடுங்கள்"

"அப்படியே செய்கிறேன்"

கணக்குப் பிள்ளை வந்தார்.

"இருக்கிற ஆஸ்தியை நாலு பேருக்கும் முக்கால் வேலி வீதம் கொடுத்துவிடுகிறேன். எனக்கு முக்கால் வைத்துக் கொள்ளுகிறேன்"

"அதெல்லாம் கூடாது; உங்களுக்குப் பிற்பாடு அந்த முக்கால் வேலியைப் பத்திச் சண்டை வரும்" என்றார் பத்மநாப ஐயங்கார்.

அவர் சொல்றது சரிதானே என்று கணக்குப் பிள்ளை தலையை ஆட்டினர்

ஆனல் அப்படியே ஆகட்டும். என்றார் பத்மநாப ஐய்யங்கார்

இணங்காதீர்கள்" என்ற குறிப்படங்கிய பார்வையை வீசினுள் ரங்கம்.

ஒன்றும் பயன்படவில்லை.

பாத்திரங்கள் அனைத்தும் பிரித்துக் கொண்டனர்.

"வீட்டை என்ன பண்ணறது" என்றார் கடைசிப் பிள்ளை.

"யாராவது ஒருவர் வைச்சுக்கொண்டு மற்றவாளுக்குப் பணத்தைக் கொடுத்து விடுங்களேன்."

ஒரு மௌனம்.

"இந்த வீடு யாருக்குவேணும் இந்த வீடு யாருக்குவேணும், நாலு துண்டாய்ப் போட்டுவிடுங்கள். பின்னடி பார்த்துக் கொள்ளலாம்" என்று அனைவரும் சொல்லி விட்டனர்.

"நெல் பத்தாயத்தை என்னபண்ணப் போறகள்" என்றார் கணக்குப்பிள்ளை.

"அந்தப் பத்தாயத்தை ஒருவருக்கும் கொடுக்கமாட்டேன். தலை முறையாய் வந்திருக்கு; ஆவி வந்த பத்தாயம் கொள்ளக் குறையாத பத்தாயமடா. அதுபோயிடுத்துன்னு லக்ஷ்மி விலகிவிடுவாளடா"

"ஆமாம், லக்ஷ்மி விலகிவிடும்! நான் கேட்டேன் கொடுக்கமாட்டேன்னு. நாலு துண்டாப் போடுடா" என்று கோடரியினல் அதைத் தட்டினர் பார்த்தசாரதி ஐயங்கார்.

'அட பாவி' என்ற ஒரு பெருத்த இரைச்சல் கேட்டது.

அம்மா நகையை என்ன பண்ணறது என்று கேட்க ஆரம்பித்தார் கடைசிப் பிள்ளை. நான் செத்து அவள் அறுத்த பின்

ணுடின்னு அந்த விவகாரம் என்று தியெழ நோக்கினார் தகப்பனார்.

இப்பெரும் புயலுக்கிடையே பாகபத்திரம் முடிந்தது. வருஷத்திலே மூன்று மாதம் ஒவ்வொரு பிள்ளை வீட்டில் தாயும் தகப்பனும் தங்கவேண்டியது. இவர்களின் ஈமக் கடன்களை நிறைவேற்றும் விஷயத்தில் நிகழும் செலவை நான்குபேரும் பகிர்ந்து கொள்ளவேண்டியது என்ற தீர்மானத்திற்கு வந்ததும் அவரவர் ஊர்களுக்கு அவர்கள் சென்றனர்.

சில நாட்கள் கழிந்தன. ஆடுதுறையிலுள்ள வீடு நான்கு துண்டாய்ப் போய்விட்டது. நான்கு சுவர்கள் எழுந்தன. அருமையான பத்தாயம்—பழைய ஞாபகங்களைத் தூண்டக் கூடிய பத்தாயம்—அடுப்புக்கு இரையாகிவிட்டது.

தாயும் தகப்பனும் மூன்று மாதத்துக் கொருமுறை வரும் யாத்திரையில் இறங்கிவிட்டனர். மன்னார்குடியிலிருந்து மாயவரம், மாயவரத்திலிருந்து தஞ்சாவூர், தஞ்சாவூரிலிருந்து சென்னை இப்படி இவர்கள் சுற்றிக் கொண்டே இருந்தனர். முடிவில்லாத யாத்திரை நடந்துவந்தது.

மாயவரத்தில் மூணு மாதகால இறுதி நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் நாலைந்து நாட்கள்தான் இருந்தன. இராமஸ்வாமி ஐயங்காருக்கு இருமலும் சுரமும் கண்டன. பிள்ளையும் மருமகளும் வெளியிலே போயிருந்தனர்.

''ஏன் இந்த மாதிரி பண்ணினகள்'' என்றாள் ரங்கம்.

''என் புத்திப் பிசகு; நீ அப்பவே சொன்னயே. நாலு பிள்ளைகளைப் பெற்று அடைகிற சுகம் அது போதும்''

''இது பிள்ளைகளா? மிருத்தியுக்கள்; இன்னும் நாலைஞ்சு நாள்தானே இருக்கு. உங்களுக்கு வியாதி படியணுமே''

''என்ன பண்ணறது? போற வழியிலே பிராணன் போயிட்டுதுன்னு சனியன் தொலைஞ்சுது''

''ஏன் அப்படிச் சொல்லறகள்?''

''மூணுமாசத்திற்கொருமுறைகிளம்பறது! அவர்கள் கையிலே காத்துக் காத்துக்கொண்டிருக்கும்படி தலையிலே எழுதிவிட்டானே'' என்று அழுதார் ராமஸ்வாமி ஐயங்கார்.

அன்றிரவு பிள்ளையும் மருமகளும் பேசிக்கொண்டிருந்தனர்.

''ஏகாதேசிக்குப் பலகாரம் பண்ணட்டும், துவாதேசிக்குத் தஞ்சாவூர் போகட்டும், உடம்பு சரியாயில்லை, அது சரியாயில்லை, இங்கே இருக்கேனே என்று எல்லாம் சொல்லுவா; அதுக்கு இடம் கொடுக்காதீர்கள். வியாதியில் படுத்துக்கொண்டால் வைத்தியம் யார் பார்க்கிறது? அவா ஒரு வேளை அதிகமாய் வைச்சுக்கிறாளா? நம்ம தலையிலே கூழைக் கரைச்சுக் கொட்டிருக்கு''

''அதுதான் உத்தேசம். வைத்தியமோ மருந்தோ அங்கே போய்ப் பண்ணிக் கொள்ளட்டும்'' என்று பதிலுரைத்தான் அவ்வுத்தமன்.

துவாதேசிக் காலை தள்ளாத கிழவனும், கிழவியும் தஞ்சாவூர் போகிற வண்டியில் உட்கார்ந்தார்கள். நிமிர்ந்த கூட்டம். ஆள் மீது ஆளாக அடைந்துகிடந்தனர் ஜனங்கள். நெருக்கடியில் மிருகத்தனம் வருகிறது இயல்பாயிருந்தாலும் கிழவனின் தளர்ந்த நிலைமை கண்டு இரங்கி அவருக்கு இடம் தந்தனர். வண்டி நகர்ந்தது. கிழவனுக்குக் கண்கள் எங்கேயோ சுழல ஆரம்பித்தன.

கிழவி தட்டித் தட்டிக் கூப்பிட்டாள். பேச்சில்லை. ''என்னமோ வந்துட்டதே'' என்று கூச்சலிட்டாள்.

ஆடுதுறை வந்ததும் கிழவனுக்கு உடம்பு அதிகமாகிவிட்டது. அவர்களை மெதுவாக இறக்கிவிட்டனர். தெய்வகதியாய்ச் சொந்த ஊருக்கே வந்து சேர்ந்த விஷயத்தில் சற்று மனம் ஆறுதலை அடைந்தாள் கிழவி. ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரியில் கிழவனைக்கொண்டு விட்டனர். ஆடுதுறைக்குப் பக்கத்திலுள்ள கிராமத்திலுள்ள தன் தம்பிக்குச் சொல்லி அனுப்பினாள். தம்பியும் தம்பியின் மனைவியும் வந்து சேர்ந்தனர். பிள்ளைகள் எல்லோருக்கும் தந்திகள் பறந்தன. கடைசிப் பிள்ளையைத் தவிர மற்றவர்கள் வந்தனர்.

''இப்பப் போவானேன். எல்லாம் ஒரே தடவையாய்ப் போனால் போச்சு. இப்படித்தான் தடபுடல் படுத்துவா'' என்றாள் பார்த்தசாரதி ஐயங்கார் மனைவி. அவள் போட்ட கோட்டைக் கொஞ்சங்கூடத் தாண்டமாட்டார், அத்தனை அடக்கம் அந்த அம்மாளிடம்.

மத்தியானம் வியாதி அதிகமாய்விட்டது. டாக்டர்கள் பிழைக்க மார்க்கம் இல்லை என்று கைவிட்டனர். பிள்ளைகள் அவரைச்

சூழ்ந்து நின்றனர். கிழவனின் பார்வை அவர்கள்மீது விழுந்தது.

"மூன்றுமாத யாத்திரை இனிமேல் இல்லை. தொலையாத நீள் நெறியில் என் யாத்திரை தொடங்கிவிட்டது" என்ற குறிப்பு அதில் அடங்கி நின்றது. தன் மனைவியின பக்கம் அவர் கண்கள் சுழன்றன. 'உன் இறுதி யாத்திரை எப்பொழுது ஆரம்பிக்கப் போகிறதோ" என்ற வினவை அது எழுப்பு வதுபோலத் தோன்றிற்று.

உதடுகள் சுளித்தன. சுவாசமும் அடங் கிற்று. பிணத்தை ஆடுதுறையிலுள்ள வீட் டிற்கு எடுத்துச்சென்றனர். கடைசிப் பையன் இன்னும் வரவில்லை.

"வருஷத்துக்கு இரண்டு வண்டி நெல் அனுப்பினால் இன்னும் சீக்கிரம் வருவான் அவன்" என்றார் பத்மநாப ஐயங்கார்.

சாயங்காலம் அவன் வந்து சேர்ந்தான்.

"இத்தனை நாழிகை பிணத்தைப் போட் டுக்கொண்டிருக்கிறார்களே; சமையல் எப் படிப் பண்ணறது" என்று அக்கிரஹார வாசிகள் முணுமுணுத்தனர். 'இதெல்லாம் பார்த்து முடியுமா?' என்று ரகசியமாய்ச் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு ஆபீசு களுக்குப் போகிறவர்கள் அகன்றனர்.

"ஏண்டா இப்படி பண்ணினே" என்று மாமா கோபித்துக்கொண்டார். ஏதோ சமாதானம் அவனும் அவன் மனைவியும் சொல்ல முயன்றனர்.

"இருத்தியச் செலவையார் போடுகிறது" என்ற சச்சரவும் எழுந்துவிட்டது.

"பாகபத்திரத்தில் கண்டபடி எல்லோரும் போட்டால்தான் நான் செய்வேன்" என்றார் பத்மநாப ஐயங்கார்.

மற்றவர்கள் சம்மதிக்கவில்லை.

"அவர்கள் சம்மதிக்காதபோனால், அவர் களே செய்யட்டும். மற்றவர்கள் செய்ய அதிகாரமில்லை" என்றார் புரோகிதர்.

மாமா சொற்படி ஏதோ கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர்.

காரியங்கள் நடந்தன.

"தாயார் ஒரு வருஷத்துக்கு வெளியிலே கிளம்பமுடியாது. யாராவது ஒருவர் வைத் துக்கொள்ளுங்களேன்" என்றார் மாமா.

"அழைத்துண்டு போனால் அச்சான்னியப் படுவார்கள் குடியும் குடித்தனமுமாய் உள்ளவர்கள்" என்றார் பத்மநாபஐயங்கார். அதே பல்லவியை எல்லோரும் படித்தனர்.

"ஏண்டி அலமேலு! உன் அம்மாவை நீ அழைச்சுண்டுபோறயா?" என்று கேட் டார் மாமனர்.

"நான் ஏன் அழைச்சுண்டு போறேன்! சங் கிலியைக் கேட்டேனே கொடுத்தாளா? போ மாமா! உங்கள் வேலையைப் பாருங்கள்" என்று கோபமாய்க் கூறினள் அலமேலு.

"இந்தப் பசங்கள் கிடக்கிறன்கள் அக்கா, நீ என்னேடு வந்துடு, அவங்கவீட்டுவழி போகவேண்டாம்" என்று கர்ஜித்தார் பை யன்களின் மாமா. அனைவரும் ஊர்போய்ச் சேர்ந்தனர். ரங்கம் தன் தம்பியின் கிராமத் தில் தங்கினள்.

* * *

"நான் அப்பாவே சொன்னேனே, அவங் கள் ஒண்ணுக்கும் உதவமாட்டாங்களன்னு"

"ஏதோ நாம் மாசிய சோதகும்பத்தைச் செய்வோம். பணம் கொடுத்தால் கொடுக் கட்டும், கொடுக்காதபோனால் போகட்டும்"

"கோர்ட்டில் போடுங்களேன்"

"இந்த அல்பக் காசுக்காகவா?" என்றார் பத்மநாப ஐயங்கார்.

அலமேலு தன் தாயாரை நிதம் திட்டிக் கொண்டிருந்தாள். மருமகள்களுக்கு மாமி யார் நாற்றம் அடிக்காதவரையில் சந்தோ ஷந்தான். பிள்ளைகளுக்குத் தாயார் ஒருத்தி இருக்கிறள் என்ற ஞாபகமும் தேய்ந்து கொண்டுவந்தது. நான்கு பிள்ளைகளைப் பெற்றும் சுகவாழ்வு நடத்த முடிய வில்லை என்ற மனக்கசப்பு இருந்தபோதி லும், அதுவும் மாற ஆரம்பித்துவிட்டது. தம்பியின் பிள்ளைகளின் மழலை முற்றாத மென் சொற்களைக்கேட்டுக் களித்தாள். தூரத்தில் ஒலித்த மணியின் ஒலியெனப் பழைய ஞாபகங்களும் காலப்பாலையில் மாய்ந்தன. நாத்தனர் ரங்கத்திற்கு அதிக உபசாரம் நடந்துவந்தது. இரண்டாயிர ரூபாய் நகைகள் வருகிற நிலையில் உபசாரத் திற்குக் குறைவென்ன?



பண்டைய நாட்களில் மொகலாய சக்கரவர்த்திகளின் கொலு மண்டப ஆரணங்குகள் காலைக் கதிரவனின் இளங்கதிரொளியில் ஆளிமார்கள் சூழ தங்களுக்கென்றேயுள்ள சிங்காரக் குளிர் பொய்கைகளில் நறுமணங் கமழும் தைலங்கள் தேய்த்து நீராடி வந்தனர். தங்களது அழகிய மேனியை சுத்தம் செய்வதற்கு அன்று அவர்கள் க்ஷாரமண்ணை உபயோகித்துவந்தார்கள்! ஏனெனில், அந்நாளில் ஸோப்புகளே கிடையாது.

இன்றோவெனில், சகல சுக சௌகரியங்களும் பொருந்தியமைந்துள்ள ஹமாம் தானிருக்கிறதே. ஹமாமின் நுண்ணிய ஏராள நுரை தேகத்தை நன்கு சுத்தம் செய்வதோடு பண்டைய ஜனங்கள் கனவிலும் அனுபவித்தறியாத ஓர் அலாதி இன்பத்தையுமளிக்கிறது.




# ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா
19A, வாணியர் தெரு, த. பெ. நெ. 31, மதராஸ்.

28 MAY 1945

# கதம்பம்

## எப்பொழுது?

காஞ்சியில் கருடசேவை. மதுரையில் தேர். சேது ஸ்னானம் மகா புண்ணியம். சென்னையில் 'பார்க் பேர்' அதிவினோதம். கோடையின் கொடுமையை நீக்க கோடைக் கானல். இஷ்டம்போல் ரயில் பிரயாணம் செய்யலாம். காலை நீட்டிப் படுத்துப் போகலாம். 3ஆவது வகுப்புப் பிரயாணிகளுக்கு இனி வண்டியிலேயே குடிவசதியுண்டு! மின்சார விசிறியும் சுழலும்.

எப்பொழுது எல்லாவற்றையும் கண்டு களிக்கும் இப்படிப்பட்ட நறகாலம் வரப் போகின்றது என்று கேட்கின்றீர்கள்? கவலை வேண்டாம். யுத்தம் முடிந்தவுடன், யுத்தம் முடிந்து நிலைமை சீர்பட்டவுடன், "இஷ்டம்போல் பிரயாணம் செய்தேதீர வேண்டும்! அறிவை விசாலப்படுத்திக் கொள்ளப் பிரயாணமே சிறந்த சாதனம்" இவ்வாறாக விளம்பரம் செய்ய ரயில்வே மெம்பர் பென்தால் துரை இப்பொழுதே திட்டம்போட்டுக்கொண்டிருக்கிறாராம்.

அதுமட்டுமா? 450 கோடி ரூபாயைச் சும்மா அள்ளி இறைத்துக் கண்ட கண்ட இடங்களுக்கெல்லாம் ரோடு வசதிகள் செய்யப் போகின்றார்களாம். போர்ட் மோட்டார் கம்பெனியைச் சேர்ந்த வாட்ஸன் துரை 'கவலை வேண்டாம், வண்டிகளைக் கொண்டு குவித்துவிடுகிறோம்' என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் எப்பொழுது வருமென வாயைப் பிளக்கின்றீர்களா? கவலைவேண்டாம். யுத்தம் முடிந்து இருபது வருஷங்கள் கழித்துப் பாருங்கள்!

அப்புறம், இந்தியர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்க வசதி வேண்டுமென்று கதறிக்கொண்டிருந்தீர்களே? விமோசன காலம் நெருங்கிவிட்டது! இந்தியாவிலேயே ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த எண்ணம். அது விஷயமாய் ஆலோசிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தவும் உத்தேசமுண்டு!

பிறகு, தொழிற்சாலைகள் நாட்டில் பெருகவேண்டுமெனக் கூக்குரலிட்டீர்களல்லவா? வரப்போகின்றது திட்டம்! ஒருசில முதலாளிகள் எல்லாத தொழிற்சாலைகளையும் ஏற்படுத்துவது நல்லதல்லவாம். ஒரு வித வகுப்புவாரிப் பிரதிநிதிமுறை தொழிற்சாலைகள் எற்படுவதில் அனுஷ்டிக்கப்படுமாம். சர்க்காரின் அனுமதி பெற்றே எவ்விதத் தொழிலும் ஆரம்பிக்கலாம். சர்க்காரும் மூலதனம், நன்கொடை முதலியன கொடுத்து உதவுவார்கள். அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் மக்களின் நலத்தையொட்டி அபரிமிதமாயிருக்குமாம்!

"பெரிய மோசடி! அன்னிய முதலாளிகளைக் காற்க-நம்நாட்டில் தொழிற்சாலைகள் அதிகம் ஓங்காதிருக்க—சதி!"—இவ்வாறாக ஸி. ஆர். அவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

யுத்தத்துக்குப் பிறகு செய்வதெல்லாம் இருக்கட்டும், இப்பொழுது ஏதாவது வசதிகள் ஏற்பட வழியுண்டா?

வழியுண்டு! மக்களது தலைவர்கள் மீண்டும் பதவி ஏற்றால்!

## சிரஞ்சீவிகள்

வெறும்கப்ஸா! புரளி! ஹிட்லரும் இறக்கவில்லை, முஸ்லோனியும் மடியவில்லை. அவர்கள் இறந்ததாக நினைப்பதெல்லாம் வெறும் பிரமை, மாயமயக்கம், அக்ஞானம், அறியாமை! மூடத்தனம், சிரஞ்சீவிகளுக்கு அழிவுண்டோ!

துப்பாக்கிக் குண்டுகள் அவர்களது சரீரங்களில் பாயவில்லையா? பாய்ந்தன, ஆனால் குண்டுகளுக்கு அவர்களைக்கொல்லச் சக்தியில்லை. ஹிட்லரையும் முஸ்லோனியையும் அழிக்கத் தக்க சாதனங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அவர்கள் எங்கு இருக்கிறார்கள் இப்பொழுது? எங்கும்! லண்டனில், ருஷ்யாவில், அமெரிக்காவில், ஸ்பெயினில், ஜப்பானில், இந்தியாவில், ஏன்? உங்கள் ஊரில் கூட நடமாட்டமுண்டு!

மூளை சுழல்கின்றதா? விவரிப்போம்.

ஹிட்லர் யார்? சர்வாதிகாரத்தின் சிகரம். நாடாசை, அடிமைகொள்ளும் மனப்

பான்மை, வல்லரசென விளங்க வேண்டுமென்ற அவா—இவைகள் உருக்கொண்ட பைசாசம்! முஸ்லோனியும் அப்படியே.

உலகத்தில் இன்று அம்மனப்பான்மைகள் அழிந்துவிட்டனவா? அல்லது ஒடுங்கித்தான் விட்டனவா?

முன்னையினும் சுயநலமும், பிறர்மீது ஆதிக்கம் செலுத்தும் பித்த புத்தியும், ஏகாதிபத்திய வெறியும், சாம்ராஜ்ய மோகமும், கொழுந்துவிட்டு மகாபிரகாசத்துடனும் ஜ்வலிப்புடனும் எரிகிறது. உலக சமாதானத்தைப் பாதுகாக்க என்று சொல்லிக்கொண்டு ஒரு சிலர் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் கூடிவிட்டால் போதுமா?

ஜெர்மனியை ஒழித்துவிடவேண்டும், இத்தாலியை நசுக்கிவிடவேண்டும், ஸ்பெயினின் பல்லைத் தட்டிவிடவேண்டும், பிரான்ஸ் பழைய பெருமையை மறந்துவிடவேண்டும், சைனாவை என்றும் பலஹீனமாகவே வைத்து ஆதிக்கம் செலுத்தவேண்டும், ஐரோப்பாவில் ஆதிக்கம் கொள்வதைப் பிரித்துப் பங்கு போட்டுக்கொள்ளவேண்டும், இந்தியாபோன்ற அடிமை நாடுகளுக்கு ஆசை வார்த்தைகள் சொல்லி காலங் கடத்தி வரவேண்டும், உலகத்தில் ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் இவைகளே மாபெரும் வல்லரசுகளாக விளங்கவேண்டும்—இப்படியெல்லாம் நினைவுகொண்டு சமாதான பாதுகாப்பு நாடகம் நடிக்கப்படுகின்றது. இவைபோன்ற மனப்பான்மைகளைத்தான் ஹிட்லரும், முஸ்லோனியும் கொண்டு நடந்தார்கள். அதே மனப்பான்மைகள் இன்றும் தாண்டவமாடி வருகின்றன.

நிற்க, ஹிட்லர், முஸ்லோனி, பிரான்கோ முதலிய சர்வாதிகாரக் குழந்தைகளைத் தாலாட்டி, சீராட்டி வளர்த்த பெருமை பிரிட்டனுக்கே உரித்தாகும்.

ஜனநாயகக் குழந்தையைப் பிரான்கோ மற்றவர்களது துணைகொண்டு சித்திரவதை செய்ததைப் பிரிட்டன் பார்த்துக் களித்தது. அபிஸீனியாவில் முஸ்லோனி விஷப்புகைகொண்டு விளையாடினதைக் கண்டு பிரிட்டன் அகமகிழ்ந்தது. நாடாசை பைத்தியம் பிடித்து ஹிட்லர் சிரியதேசங்கள் பலவற்றை விழுங்கவே தந்தை சேம்பர்லின் பையனிடம் பறந்து சென்று அவனது கோரத் திருவிளையாடல்களுக்கு மேலும் உதவினார். ஐப்பானிய சர்வாதிகாரிகள் சைனாவைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துத் தின்று விழுங்குவதைப் பிரிட்டன் ஆதரித்தது என்றுகூடச் சொல்லலாம்.

வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல் சர்வாதிகாரக் குழந்தைகள் பிரிட்டனின் உலக ஆதிக்கத்துக்கும் உலைவைக்க ஆரம்பிக்கவே வளர்ப்புத் தந்தைக்குச்சற்றே கவலை உண்டாயிற்று.

இன்று உலகில் ருஷ்ய அதிபதி ஸ்டாலின் மிகப்பெரிய சர்வாதிகாரியாக விளங்குகின்றார். அடுத்தபடியாகச் சர்ச்சில் துரை சர்வாதிகாரம் செலுத்துகின்றார். சீமை மக்களை ஆடுகள்போல் ஆட்டி வைக்கின்றார். இந்தியாவிலோ? வைஸ்ராய் முதல், தாலூக்கா ஆபீஸ் வில்லைச் சேவகன் வரை ஒவ்வொருவரும் ஒரு குட்டிச் சர்வாதிகாரியாக நினைத்துக்கொண்டுவிட்டனர்.

சரீரங்களுக்கு அழிவுண்டே தவிர, சக்திக்கு அழிவேது? ஆகவே ஹிட்லரும் முஸ்லோனியும் எங்கும் நிறைந்த பரம்பொருளாய் ஜாம்ஜாமென்று வெற்றி முழக்கத்துடன் திக்விஜயம் செய்து, சர்வாதிகார ஜயக்கொடியை நாட்டிவரும் சிரஞ்சீவிகள் என்றுசொல்வது மிகையாகாது.

---

## புதிய புத்தகங்கள்

### மேல்காற்று முதலிய கட்டுரைகள்

ஆசிரியர்: அ சீனிவாச ராகவன்—லாங்மன்ஸ் பிரசுரம்—நடை என்னவோ எளிய நடைதான். சொற்கள் யாவும் நம் பழக்கத்தில் உள்ள பழஞ் சொற்கள். கருத்து மட்டில் புரிந்துகொள்ள ஓர் இலக்கியமல்ல. மேல்நாட்டு கீழ்நாட்டு இரு இலக்கியங்களின் அவசியம் ஏற்படுகிறது. விமர்சன முறை இன்னும் தமிழில் வேர் ஊன்றாததாலா?

### ஸ்டாலின்

வெ. ராமசாமி எழுதியது. தினசரி வெளியீடு; சக்தி காரியாலயப்பிரசுரம் விலை 0-8-0

ஐரோப்பிய யுத்தத்தை வெற்றிகரமாக முடித்துவரும் ஸ்டாலினைப்பற்றிய முழு விபரங்களும் அறிந்துகொள்ள யாருக்குத்தான் ஆவல் இராது? ஆவல் பூர்த்தியாவதுதான் சிரமம். கூடியவரையில் செய்திருக்கிறார் தோழர் வெ. ராமசாமி. ஆயினும் இனி ஸ்டாலினது நோக்கம் என்ன? ஹிட்லர் அஞ்சியபடி ஸாம்ராஜ்ய ஸ்தாபகராகத்தான் பரிணமிக்கப் போகிறாரா அல்லது ஆயுள் முடிவுவரையில் பொது ஜனம் வாழவே பாடுபடப்போகிறாரா என்பது இனிமேல்தான் தெரியவேண்டும். அதற்கு உதவும் முற்கோள்கள் ஒன்றும் இப்புத்தகத்தில் கிடைக்கவில்லை.

தொடர் கதை

# மல்லிகைச் செண்டு

கே. சுந்தரம்மாள்

— 8 —

"ஸௌம்யா! இதோ உனக்கு ஒரு பார்சல்" என்று சொல்லியவாறு அவள் அறைக்குள் வந்தான் ஐ. ஸி. எஸ். சிவகுமார். "எவ்விடமிருந்து?" என்று கேட்ட வண்ணம் பின்னிக்கொண்டிருந்த பூவேலையை வைத்துவிட்டு இவனை நோக்கி வந்தாள் ஜீஜி.

"உன் குருஜீயினிடமிருந்து" என்று சொல்லிக்கொண்டே நாற்காலியில் உட்கார்ந்து மேஜைமீது வைத்துப் பார்சலைப் பிரித்தான். அதில் ராஜூவின் கல்யாண தம்பதிகள் போட்டோ ஒன்றும், வெள்ளி, தந்தம், பச்சை, சிகப்பு, வெள்ளைக்கற்கள் மின்சார பல்புகள் இவைகளாலும், தங்கத் தினாலான பிடியுடன் கீழே நிற்க வைக்கும்படியான ஒரு புஷ்பச் செண்டைபோல் ஒன்றும் இருந்தன. அதில் ஒரு கடிதம் வைத்திருந்தது.

அன்புமிக்க சஹோதரிக்கும், சிவகுமாருக்கும் வந்தனம். அநேக ஆயிரம் மைல்களுக்கப்பால் இருப்பதால் நீங்கள் வரவில்லை என்று வருத்தப்பட்டுப் பிரயோஜனமில்லை. எனது கல்யாணப் பரிசாக இச்சிறிய வஸ்துவையும், படத்தையும் அனுப்பியிருக்கிறேன். மறுக்காமல் அங்கீகரிக்கவும்.

பிரியமுள்ள
ராஜகோபாலன்

படத்தைப் பார்த்ததும் குமாரின் முகத்தில் துக்க ரேகை படர்ந்தது. அதைக் கவனித்த ஜீஜா, "பெண் நன்றாக இருக்கிறாள். ஆனால் உண்மையில் நிறம் எப்படியிருக்குமோ?" என்றாள்.

"நல்ல சிகப்பு நிறம்"

"ஆனால் உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. ஆனால் பட்டணத்தில் பார்த்திருக்கிறேன். அதிருக்கட்டும், செண்டு எவ்வளவு அழகாக இருக்கிறது. தந்தப் புஷ்பங்கள் உண்மை மல்லிகையைப்போல் தோற்றமளிக்கின்றன. இதுமாதிரி நான் ஒரு கடையிலும் பார்த்ததில்லை. ராஜூ அவனது மனோ தர்மத்தை உபயோகித்து ஸ்பெஷலாகப் பண்ணச்சொல்லியிருக்கிறான் என்று நினைக்கிறேன். அதிலேயே பாட்ரிகூட இருக்கிறதே! பல்புகளை எரிய விட்டுப்பார்ப்போம்" என்றார்.

பாட்ரியினால் பல்புகள் பிரகாசிக்கவே கலர் பல்புகளுடன் கூடிய செண்டு மிக்க அற்புதமாகத் தோற்றமளித்தது. அதைப் பார்த்ததும் தான் ராஜூவிற்குக் கட்டிக் கொடுத்த செண்டின் பாட்டன்போல், லோகங்களால் கட்டியிருக்கிறான் என்று தெளிவாயிற்று. பாட்ரியை அணைத்துவிட்டு, செண்டை எடுத்து, அதன் நாலா பக்கத்தின் அமைப்பையும் திருப்பிப்பார்க்கும்பொழுது அடிப்பாகத்தில் ஒரு ஸ்க்ரூ தெரிந்தது. அதைத் திருகினான். உடனே செண்டு இரண்டு பாகமாகத் திறந்துகொண்டது. அதற்குள் ஒரு வாடிய மல்லிகைச் செண்டு இருந்தது. ஆனால், அதன் வாசனை அபரிமிதமாக இருந்தது.

"இது என்ன ஸௌம்யா! வாடின பூவில் மணம்?"

"பூ மணமா? ஸென்டின் மணம்"

"ஆமாம். ஸென்டு மணம்தான். எதற்காக வாடின செண்டை வைத்திருக்கிறான்?

"என்ன பதில் சொல்லுவது" என்ற நினைப்பில் அவனையே உற்றுப் பார்த்தபடி நின்றாள்.

"ஸௌம்யா, இச் செண்டும் உன் முகத் தோற்றமும் இதில் ஓர் இரகசியம் அடங்கியிருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. உனக்கு இஷ்டமானால் சொல்லு. கட்டாயப்படுத்தவில்லை. அவ்வளவு அவசியமுமில்லை. ஆனால் எந்த விஷயமானாலும் தயங்கவேண்டாம். உன்மீது வருத்தமே தோன்றாது. நாகரிகப் போரில் அடிபட்டவன் நான்"

"நினைத்தால் உங்களுக்குச் சமாதான வார்த்தை சொல்ல என்னால் முடியும். ஆனால் எப்பொழுதும் உண்மையைச் சொல்லுவதில் தவறு உண்டாகாது. மனம் ஒப்பவில்லை என்றால் அதன் பிறகு உசிதம்போல்

நடக்கிறது என்ற முடிவில் தெரிவிக்கிறேன். சற்று இருங்கள், இதோ வருகிறேன்'' என்று தன் பெட்டியைத் திறந்து ஒரு காகிதக் கட்டை எடுத்துவந்து மேஜை மீது வைத்துவிட்டு "இதைப் படித்தால் விஷயம் விளங்கும். போனதடவை நான் ஊருக்குச் சென்றிருந்தபொழுது ராஜுவும் வந்திருந்தான். இருவருமாக யோசித்துப் பெயரைமாற்றி எழுதினோம். அவன் கல்யாணம் முடிந்தபின்பு அதையும் சேர்த்துப் பத்திரிகைக்கு அனுப்பலாமென்று நினைத்தோம். நாம் நினைப்பதுபோல் எதுவும் நடக்காது என்பது சாபம்போலும். இன்று இப்படி நேர்ந்தது. அதிலுள்ள விஷயங்கள் முழுவதும், உண்மையென்று உங்கள்மீது ஆணையாகக் கூறுவேன்.''

படித்து முடித்ததும் மேஜைமீது வைத்துவிட்டு, அடுத்த சோபாவில் பின்னல் வேலையிலீடுபட்டிருந்த ஜீஜியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டான்.

கைவேலையைப் பக்கத்து மேஜையில் வைத்துவிட்டு என்ன? என்று கேட்பது போல் பீதியுடன் அவனை நோக்கினாள். ''ஆஹா! அதில் உன்கடிதத்திற்கு மூன்று சபாஷ் கொடுக்கவேண்டும். நமது ஜோடி வெகு தமாஷ்'' என்று அவள் தோளின் மீது கையை வைத்தான்.

விபரம் புரியாமல் திணறினாள். அவள் மார்பு படபடத்தது; முகத்தில் வேர்வை அரும்பிற்று. அவள் படபடப்பைச் சாந்தம் செய்வதுபோல் அணைத்துக்கொண்டு, கைக்குட்டையினால் வியர்வையைத் துடைத்தவாறு, "அட அசடே! ஏன் இப்படிப் பதறுகிறாய்? இப்படி வாழ்க்கையின் போராட்டத்தில் அநேக ஏமாற்றமும் தோல்வியும் சர்வசகஜம். உன் நிலைமையும் என் நிலைமையும் ஒன்றே.''

"ராஜுவின் மனைவி பத்மாவைப் பார்த்தது மட்டுமல்ல. நான் பி. ஏ. ஆனர்ஸ் மூன்று வருஷமும் அவள் இண்டர்மீடியட் முதல் வருஷமும், ஒரே காலேஜில் படித்து வந்தோம். நல்ல அழகுவாய்ந்தவள். அவள் தகப்பனார் சிரஸ்தார். ஐந்துபெண்களும் ஒரு பிள்ளையும். இவள் மூத்தபெண். அந்த வகுப்பில் நான்கு பெண்களே படித்தார்கள். அன்று பரீக்ஷை. எங்கள் ஹால், இரண்டிற்கும், வாசல் தாழ்வாரம் ஒன்றாக நீண்டிருக்கும். யாவரும் வெளி வராண்டாவில் நின்றுகொண்டிருந்தோம். முதல் மணி அடித்ததும் முதலில் பெண்கள்தான் செல்ல வேண்டுமென்பது ஏற்பாடு. அவர்கள் நால்வரும் செல்லும்பொழுது, இவள் பேனா தவறிக் கீழேவிழுந்துவிட்டது. இவள் கவனிக்கவில்லை. பின்சென்ற ஆண்களில் ஒருவன் அதை எடுத்துக்கொண்டான். அடுத்த விநாடி பத்மா திரும்பிவந்து தேடினாள். கிடைக்கவில்லை. இரண்டாவது மணியும் அடித்துவிட்டது. அவள் பரிதாபகரமான தோற்றம் என்மனதை வாட்டிற்று. நானே முன்சென்று, எப்பொழுதும் என்னிடம் இரண்டு பேனா இருக்குமாதலால் ஒன்றை அவளுக்குக் கொடுத்தேன். நன்றி நிறைந்த கண்களால் என்னை நோக்கிவிட்டு மான் போல் துள்ளிச்சென்றாள்.

பரீக்ஷை முடியுமட்டும் என் பேனாவை வைத்திருந்தாள். பிறகு அதை என்னிடம் கொடுக்கும்பொருட்டு, யாவரும் செல்லும் வரை ஒருபுறமாக நின்றுகொண்டிருந்தாள் அதைக் கவனித்த நானும் பின் தங்கினேன். அவள் என்னை நோக்கி வந்தாள், நானும் அவளை நோக்கி நடந்தேன். பேனாவைக் கொடுத்துவிட்டு நன்றி கூறினாள். அன்றையிலிருந்து இருவரும் சந்தித்துப் பேசலானோம். பிறகு காதல் என்று சொல்ல வேண்டுமா? நான் மேல்நாடு செல்ல ஏற்பாடானதும், பிரிவிற்காக நாங்கள் இருவரும் பட்ட வேதனை கடவுள்தான் அறிவார்; கதறிவிட்டாள். சமாதனம் கூறினேன். அவளுடைய சிறிய போட்டோவை வாங்கிக்கொண்டு, எனது போட்டோவையும் கொடுத்தேன். ஐ. ஸி. எஸ். ஆகிவிட்டால் பேதைப் பெண் கவனமிருக்குமா என்றாள். எவ்விதமெல்லாமோ ஆணையிட்டுக்கூறினேன். கடிதம் எழுதும்படி சொன்னேன். அப்படிச் செய்வது தவறு என்றும் என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாயும் போன இடத்தில் கடமையை நினைத்து நடக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள்.

போனவிடத்தில் மனஞ்சலிக்கக்கூடிய சம்பவங்கள் எவ்வளவோ இருந்தும், அவளது படத்தினால்தான் என்மனம் தளராமலிருந்தது. நான் திரும்பிவந்ததும், விசாரித்ததில், அவள் தகப்பனார் திடீரென்று இறந்துவிட்டதினால் அவள் தமையன் யுத்தத்தில் சேர்ந்திருப்பதாயும், அவர்கள் குடும்பம் ஏதோ கிராமத்தில் வசிப்பதாகவும் தகவல் கிடைத்தது. உத்தியோக தோரணையில் வேண்டிய முயற்சிசெய்தும் பயனில்லாமல் போய்விட்டது. எவ்வளவு வருஷமானாலும் காத்திருப்பாள். அதனால் எப்படியும் கண்டுபிடிக்கலாம் என்று பலவாறாக முயற்சிகள் செய்துவந்தேன். இந்த நிலைமையில் அப்பா கல்யாணத்திற்கு ஏற்

பாடுசெய்தார். கொஞ்சம் போகட்டும் என்று தடுத்துவந்தேன். காலம்? அதை மீறும் சக்தி? திடீரென அப்பா மரணப் படுக்கையானார்.

"குமார்! உனது வருங்கால நன்மைக்காக அநேக சுகபோகங்களை நாங்கள் இழந்தோம். ஒரே புத்ரன் என்ற பிரேமையினால் உன் தாய் ஒரு நல்லதுணி உடுக்காமல் நல்ல சாப்பாடு சாப்பிடாமல், ஆதாரமாக இருந்த நிலத்தைவிற்று உன்னை மேல்நாடு அனுப்பினேன். ஆனாலும் உன் புத்தியின் விசாலத்தினால் மேன்மையான பதவிக்கு வரமுடிந்தது. கைநிறையச் சம்பளம் வாங்கி என் கையில் தந்தாய். நான்பட்ட கஷ்டமெல்லாம் மறந்துவிட்டன. ''தாதா' 'என்ற மழலைச்சொல் கேட்டுவிட்டுச் சாகவேண்டும் என்ற ஆவலிருக்கிறது. என்மனம் நிம்மதியுற நீ கல்யாணம் செய்துகொள்வதும், நீ சொல்லும் கடமையில் சேர்ந்ததல்லவா? உனக்கு இஷ்டமானபெண்ணைப் பண்ணிக்கொள். ஜாதி குலம் என்று நான் தடைசொல்லவில்லை. உன்மணக்கோலத்தைக்கண்டபின்பே என் கண்கள் மூடவேண்டும்" என்றார்.

அப்பொழுது என்மனம் மிக்க வேதனையுற்றது. எனக்காக அவர்கள் பட்டகஷ்டங்கள் காட்சியளித்தன. சரி, காதலாவது கத்திரிக்காயாவது, அவர்கள் இஷ்டப்படி ஒருபெண்ணைக் கல்யாணம்செய்துகொள்ளுவோம் என்று நினைக்கும்பொழுது, 'நான் புறப்படும் சமயம் என்னைக் கைவிடமாட்டீர்களே' என்றபத்மாவின் பரிதாபகரமான முகம் ஹ்ருதயத்தில் காட்சியளிக்கும். காதலுக்கும் கடமைக்கும் நடுவில் அகப்பட்டு எதற்கு முக்கியஸ்தானம் கொடுப்பது என்ற நிலைமையில்,

"குமார்! அவர் துயரத்துடன் சாவது உனக்குச் சம்மதமா? கடமைதானடா முக்யம்" என்று அம்மா நினைப்பூட்டக் கடமையே வெற்றிகொண்டது. நமக்குப் பிடித்தமில்லை. அவர்களுக்குப் பிடித்த பெண்ணையே மணப்பது என்று முடிவில் "உங்கள் இஷ்டப்படிப் பெண்ணை நிச்சியுங்கள்" என்றேன்.

"நம்மிரு தகப்பனாரும் ஏதோ உறவு முறைமையினால் உன் ஜாதகம் வந்ததும், குலப் பெருமையினால் சர்வ சம்மதமாய் விட்டது. நான் பார்க்க வரவில்லை என்றேன். கேட்கவில்லை. உனது பாட்டு அப்பாவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவர்களின் இஷ்டப்படியே பார்க்கவந்தேன். விருப்பமில்லாவிடினும் வெறுப்புத் தோன்றவில்லை. மனம் என்ன விசித்ரம்? கிடைத்துவிடும். நாட்டுப்பெண் வந்தவேளை அம்மாவுக்கு மாங்கல்ய பாவம் உறுதிப்பட்டது. மாமி மெச்சிய மருமகள் என்று அவள் மோவாயைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பினான்.

லஜ்ஜையினால் அவள் முகம் சிவந்தது. "ஐயோ போருமே பரிகாசம். விஷயத்தை மேலே சொல்லுங்கள்" என்று அவன் கையை எடுத்துப் பிடித்துக்கொண்டாள்.

இரண்டு மாதத்திற்குமுன் சென்னை சென்றிருந்தேனல்லவா? கபாலீசுவரர் கோவிலுக்குச் சென்றேன். கர்ப்ப கிருஹத்திற்குள் நான் கால்வைப்பதும், பத்மா வெளியில் வருவதும் ஒன்றாக இருந்தன. ஆச்சரியத்துடன் பத்மா, "நில்" என்றேன் அவ்வளவே. நான் வரும்பொழுது, அதிகாரி வருகிறார், சீக்கிரம் பிரசாதத்தை வாங்கிக் கொண்டு போய்விடுங்கள் என்று சொன்ன அர்ச்சகர், அம்மா இப்படி அம்மன் பக்கத்தில் வந்து நில்லுங்கள் என்று உபசரித்தார்.

தெரிசனமெல்லாம் முடிந்து வெளியில், கார் நிற்கும் இடம்வரை மௌனமாகவே வந்தோம். பிறகு,

சேலத்தில்
கல்யாணப் பட்டு ஜவுளி
ரகங்கள் வாங்க சிறந்த இடம்

கோபால
பத்ம விலாஸ்

385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*
S. N. PATHMANABA CHETTIAR
P. R. JAYAGOPALA CHETTIAR

"பத்மா நீ எவ்விட மிருக்கிறாய்? காரில் ஏறு. கொண்டு விடுகிறேன். போகும் பொழுது விஷயங்களைச் சொல்லுகிறேன்" என்றேன்.

"நான் அவ்வளவு பாக்யம் செய்யவில்லை. உங்களுக்குச் சமதையாக உட்கார்ந்துவர அருகதையற்றவள். நான் இருக்கும் விலாசம் இதுதான்" என்று பர்ஸிலிருந்து சிறிய கார்டை எடுத்து நீட்டினாள். நான் அதை வாங்கி விலாஸத்தைப் பார்க்குமுன் என் பதிலை எதிர்பாராமல் கூட்டத்தில் மறைந்து விட்டாள்.

"ஸௌம்யா, உண்மையைச் சொல்லுகிறேன். அந்தச்சமயம், அவள் வீடு சென்று சமாதானம் செய்து, அவளையும் மணக்கவே துணிந்தேன். இருவரைக் காப்பாற்ற எனக்குச் சக்தியில்லையா என்ற உறுதி தோன்றிற்று.

"நான் அவளைக் காணச் சென்றேன். ஒரு சிறிய வீட்டில் தாயார் தங்கைகளுடன் வசித்திருந்தாள். என்மீது சொல்லம்புகளை வீசுவாள் என்று எதிர்பார்த்தேன். களங்கமின்றி இன் முகத்துடன், மாடியில் ட்ராயிங் ரூமில் என்னை வரவேற்றாள். இன்னது பேசுவது என்று புரியாமல் திகைக்கும்பொழுது,

"மிஸ்டர் ஐ. ஸி. எஸ்; தாங்கள் வீணாகக் கவலைப்படவேண்டாம். தாங்கள் கடமையைக் காப்பாற்றியது பற்றி மிக்க சந்தோஷம். உங்கள் தம்பதி போட்டோவைப் பத்திரிகையில் பார்த்தேன்"

"இவ்வளவு நாளாய் எவ்விடமிருந்தாய்? இவ்வூரிலிருந்தால் என் முயற்சி பலனளித்திருக்குமே. பத்மா நான் அபராதி. மன்னிப்பு வேண்டுகிறேன். நடந்த விஷயம் விபரமாகச் சொல்ல முடியுமா? இப்பவும் என் வாக்கை நான் காப்பாற்றத் தயார். உன் சம்மதம் வேண்டும். என் கண்ணின் கருமணி நீ"

ஏளனமாகச் சிரித்துவிட்டு, "உங்கள் அன்பிற்கு மிக்க வந்தனம். காலதேவனின் களி நடனத்தில் நாங்கள் சிதைவுண்டோம். நீங்கள் சென்ற மூன்றும் மாதமே அப்பா இறந்தார். வேறு வழியின்றி அண்ணா சண்டையில் சேர்ந்தான். நாங்கள் கிராமம் சென்றோம். அவ்விடம் பெண் பள்ளிக்கூடத்தில் உபாத்தினி வேலை ஏற்றுக்கொண்டு, தையலும் தைத்துக்கொண்டு, அண்ணா அனுப்பும் பணத்தைக்கொண்டு காலத்தை ஓட்டினோம்.

உங்கள் வரவைத் தெரிந்துகொள்ளுவதற்காகப் பத்திரிகை நாள் தவறாமல் படித்து வந்தேன். காலமானது, பள்ளிக்கூடத்தில் வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் முனைந்து வேலை செய்யும்பொழுது, பத்திரிகை படிக்காத சமயத்தில் உங்கள் வரவு நடந்துவிட்டது.

பிறகு உங்கள் கல்யாணப் போட்டோ பார்த்தபின்பே விஷயம் அறிந்தேன். அவன் வந்தால் இந்த நிலைமையில் உன்னை லக்ஷியம் செய்ய மாட்டான் என்ற அம்மாவின் வாய்க்குச் சர்க்கரை போட்டதுபோலிருந்தது. அந்தச் சமயம் உங்களை மனமாரத் திட்டினேன், சபித்தேன். உங்கள் நண்பர் சிவநேசம், லெக்சருக்காக அவ்வூர் வந்தபொழுது, என்னைக்கண்டு ஆச்சர்யப்பட்டு, நீங்கள் என்னைத் தேடியதையும் கடமைக்காகக் கல்யாணம் செய்துகொண்டதையும் சொன்னார். பிறகுதான் காலமும் விதியும் சதிசெய்துவிட்டன. அவர் என்ன செய்வார் என்று தேறினேன். மூன்று மாதத்திற்கு முன் பிரமோஷன் நிமித்தம் அண்ணா லீவில் வந்தபொழுது, குழந்தைகள் படிப்பை உத்தேசித்து, இவ்வூரிலிருக்க ஏற்பாடு செய்தான். நான் இவ்வூர் பெண்பாடசாலையில் மியூஸிக் டீச்சராக இருக்கிறேன். அண்ணா மறுபடியும் வந்து பத்துநாளாகிறது. பாரதி தினத்தன்று நான் பாடினேன். முதல் பரிசு கிடைத்தது. அன்று என் தமையனுடன் படித்த ராஜகோபாலன் எனது பாட்டை மிகவும் சிலாகித்தாராம். அவரை அழைத்து வந்து என்னிடம் காண்பித்து மணம் செய்து கொள்ளும்படி சொன்னான். பெண்களின் தனி வாழ்க்கையின் கஷ்டங்களைப் பார்த்தும், அனுபவித்தும் இருக்கும்பொழுது வேறு விதி யேது? காதல் கனவு என்று அவரை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டேன். அடுத்த மாதம் முகூர்த்தம்."

"அவருக்கு என்ன உத்யோகம்"

"B. A. பாஸ் செய்துவிட்டு ஏ. ஆர். பியில் வேலை பார்த்தாராம். அதுவும் ஒரு காரணத்திற்காக ஏற்றுக்கொண்டாராம். பிறகு கஷ்டமாக இருக்கிறது வேண்டாமென்றால் அவர்கள் விடமாட்டேனென்றார்களாம். பிறகு அண்ணா எவ்வளவோ முயற்சிசெய்து அதிலிருந்து விடுவித்து, கவர்மெண்டில் நூறு ரூபாய் உத்யோகம் செய்துவைத்தான்."

அந்தச் சமயம் ராஜுவும் முத்துராமனும் அவ்விடம் வந்தார்கள். என்னைப் பார்த்ததும்,

"ஹல்லோ! குட் ஈவினிங் மாப்பிள்ளை" என்றான் ராஜு"

"இவரை உங்களுக்குத் தெரியுமா?" என்றாள் பத்மா.

"எனது சிஷ்யையின் கணவர்" என்றான் ராஜு.

"எனது காலேஜ் நண்பன்" என்றாள் பத்மா.

உடனே நல்லபொருத்தம், "காதல் மல்லிகைச் செண்டைப்போல் உருண்டையானது" என்றான் ராஜு.

முத்துராமன் விழித்தான்." சட்டென அவன் மொழியால் மாலைபோடும் சமயம் உனது தோற்றம் நினைவிற்குவரவே, விஷயத்தை ஒருவாறு ஊஹித்தேன். நாங்கள் மூவரும் மூன்றுவிதமான அபிப்பிராயத்தில் நிலைமையைப் புரிந்துகொண்டோம் என்பதை எங்கள் புன்சிரிப்பினால் அறிவித்துக்கொண்டோம். பத்மாவிற்காகவே ராஜுவிற்கு உயர்ந்த உத்தியோகம் செய்து வைத்தேன். விஷயம் ஒருவாறு மூடப்படட்டும் என்பதற்காகவே, ராஜுவின் கல்யாணத்தைப்பற்றி எனக்குத் தெரிந்தும் உனக்குச் சொல்லவில்லை. இன்று காலம் காட்டிவிட்டது.

"ஆஹா! காலதேவனின் களி நடனத்தில், காதலின் பாவமும் தன்மையும் மாறுகின்றன. நமது வாழக்கையில் இன்பக் குறைவு என்ன தோன்றுகிறது? ஆழ்ந்த காதல் ஆத்மாவுடன்தான் பிரியும். அதை யாரும் மறுக்கமுடியாது. நான் இவ்வளவு இன்பமாக வாழ்க்கை நடத்துவேன் என்று எதிர்பார்க்கவில்லை. நம்பிக்கையுமில்லை."

."அந்த ஓலையைத் திருப்பிப்படி."

"நம்மைப்போல் தானே ராஜுவும் பத்மாவும் இப்படி" என்று முடிக்குமுன்,

"இதையும் சேர்த்துக்கொள்" என்று அவள் முகத்தருகில் குனிந்தான்.

"மிகவும் சரி. பதில் பிரசன்ட் என்ன அனுப்புவது? நமது படம் முன்னாலேயே கொண்டுபோயிருக்கிறான். அவள் அனுப்பியது செண்டு; நாம் அனுப்புவது?"

"மணிபர்ஸிலுள்ள பத்மாவின் படம்' அதுபோல் உன்னிடம் அவள் படமிருந்தால் கொடு. செண்டைப்போல், வெள்ளி, தங்கம், பச்சை, சிகப்பு. வெள்ளைக்கற்கள், பல்பு இவைகளால் கொடிபோல் செய்யப்பட்ட பிரேமின் நடுவில் படம்."

"நான் நினைத்ததைச் சொல்லிவிட்டீர்களே! இது அன்பின் தன்மையல்லவா? எல்லாம் நாலத்தின் சக்தியில் அடங்கிவிடுகிறது. எதற்கும் மனம்தான் காரணமாகிறது. அதைச் சற்று இழுத்துப்பிடித்தால் யாவும் சரியாகப் போய்விடுகின்றன. அது போகட்டும் பிரசண்டை அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள். நாம் அனுப்புவது கொடியின் மத்தியில் பத்மம். அவர்கள் அனுப்பியது மணத்தில் மிகுந்த மல்லிகைச் செண்டு" என்று கண்களை மூடியவாறு அவர் தோளில் சாய்ந்தாள்.

முற்றிற்று.

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

# மேதாவின்
# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப்புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவலைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணி விட்டது.

**கே. எஸ். மேதா & கோ.,**
**மதராஸ்.**

# வடக்கும் தெற்கும்

**யோகி சுத்தானந்த பாரதியார்**

1

பௌதிக வகுப்பில் காந்தப் பாடம் நடக்கிறது. ஆசிரியர் பியாரிலால் காந்த ஊசிகளைக்கொண்டு சோதனை நடத்துகிறார். ஊசிகளின் வடமுனை வடமுனையைத் தள்ளுகிறது; தென்முனை வடமுனையைக் கவர்கிறது. அப்போது மாணவரெல்லாம் "தெற்கை வடக்கு இழுக்கிறது சார்" என்று எக்காளம் செய்கின்றனர். முருகன் கிரண் குமாரியைப் பார்த்து மெல்லக் கடைக்கண் புன்னகை பெறும்போது, மாணவர் இரகசியமாகக் கோட்டா செய்கின்றனர். பியாரிலால் 'ஒத்த முனைகள் விலகும். எதிர் முனைகள் இழுக்கும், மனிதருள் ஆணைப் பெண் கவர்வது போலே." என்று ஒரு போடு போடுகிறார். "விளங்கிவிட்டதையா" என்று மாணவர் சிரிக்கிறார்கள். "நன்றாக விளங்கக் கொஞ்சம் அனுபவம் வேண்டுமப்பா" என்று பியாரிலால் கொஞ்சம் நகைச்சுவையில் விளையாடியபிறகு, காந்தத்தின் சக்தி எப்படிக் கவர்கிறது, எவ்வளவு பரப்பளவில் கவர்ச்சி பரவுகிறது என்பதை விளக்கப்புகுந்து, போர்டில் கணக்குப் போட்டார். அவர் அந்தப்புறம் திரும்பியதுமே இந்தப்புறம், மாணவர் "காந்தத்தின் கவர்ச்சி வகுப்பு முழுதுமே பரவியிருக்கிறது சார்" என்றனர். ஒரு காந்தத்திற்கு இத்தனை கவர்ச்சி என்று ஆசிரியர் கணக்குப் போடும்போதே "எழு காந்தத்திற்கு?" என்று மாணவர் மாணவிகள் பக்கம் திரும்பி நகையாடினர். இதற்குள் ஒரு கடிதம் மெல்லப் பறந்தது, இருவர் உள்ளங்களையும் இரகசியமாகப் பின்னிவிட்டது. தற்காலக் கல்லூரி வாழ்வில் இதெல்லாம் அதிசயமில்லை; நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

"டிங்டாங் டிங்டாங்!" மணியடித்தது. இனி விடுதலைதானே. எல்லாரும் கட்டுச்சோற்றைத் தூக்கிக்கொண்டு சுற்றியுள்ள தோப்புகளுக்குச் சென்று உண்டனர்.

2

பள்ளிக்கூடத்திற்கு வடக்கே ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு பூஞ்சோலையுண்டு. அதில் ஒரு பூம்புதர்; அடக்கமான தனி இடம். அங்கே முருகன் தன் பொதிசோற்றை அவிழ்த்தான். உள்ளே இரண்டு உளுந்து வடைகள், புளியோதரை, தத்யோன்னம் எல்லாம் இருந்தன. முருகன் வடையைச் சிறிது பிட்டு வாயில் போட்டுக் கொள்ளும்போது இலையில் ஒரு ரசகுல்லா விழுந்தது. திரும்பினான் கலகலவென்று சிரித்துக்கொண்டே, கிரண் குமாரி எதிரே நின்றாள்.

முருகன்; கிரண்! நீ இப்படி வந்தால் நண்பர் பியாரிலாவிடம் கோளேற்றி என் படிப்பிற்கே உலைவைப்பார்கள். ஆதலால் நீ சமயமறிந்து காலமறிந்து வரவேண்டும்.

கிரண்; சரியான காலமறிந்துதான் வந்தேன், வருவேன். முருகா! இனி நம்மை யார் கேலி என்னசெய்யும்? வடக்கும் தெற்கும் கவர்ந்தபிறகு...

முருகன்: கிரண், கவர்ந்த காந்தத்தையும் தள்ளிவிட எத்தனையோ பொறாமைக் கண்கள் நம்மைக் கவனிக்கின்றன. முதலில் உனது தந்தை நமது நட்பை விரும்புவாரோ என்னமோ?

கிரண்: முருகா, எனது தந்தை சீர்திருத்தவாதி; அவருக்கு வடக்கும் தெற்கும் ஒரே இந்தியாதான்... ஆனால் உனது முரட்டுத் தந்தையோ தொல்காப்பியத் தமிழில் உன்னை மிரட்டுவார். அவருக்கு நீ சரியான பதிற்சொல்லாவிட்டால் நமது காரியம் ஜயம்...

முருகன்: அதற்கு நானாயிற்று... எத்தனை நாள்தான் இப்படி நம்மவர் ஆரிய திராவிடச்சண்டை போட்டுக்கொண்டிருப்பது.? தெற்காவது வடக்காவது? எல்லாம் ஒரே அடிமை நாடாயிருக்கிறது. வெள்ளைக்காரன் நமது தலை விதியை எழுதும் நிலைமையில் இருக்கிறோம்... சுதந்திரம் கேட்டால் "ஒற்றுமையாக வாருங்கள்" என்கிறார் லண்டன் துரை. நாம் ஒன்று சேராமல் வகுப்புச் சனியன்களும் பேதக்காமாலையும் நம்மை அசூயையால் பிரித்து வைக்கின்றன. வகுப்புச் சண்டையை மெல்லத் திருகிவிட்டு வெள்ளைக்காரன் கவலையில்லாமல் இந்த நாட்டில் தர்பார் நடத்துகிறான். நமது

வாழ்விலாவது இந்த வட—தென் வேறுபாடுகளை ஒழிக்கவேண்டும். இந்தியாவில் பிறந்தவன் எந்த ஊரில் எந்தத்தெருவில், எந்தப் பெற்றோருக்குப் பிறந்தாலும், இந்தியனே என்ற ஒருமையுணர்ச்சி நமக்கு வேண்டும்.

கிரண்; அந்த உணர்ச்சிக்காகத்தான் ரசகுல்லாவைக் கொண்டுவந்தேன்.

முருகன்: சரி, என் உளுந்து வடையைச் சாப்பிடு...

கிரண் உளுந்துவடையைப் பாதி கடித்துத் தந்தாள், முருகன் பெரிய ரசகுல்லாவைப்பாதி அவளுக்குக் தந்தான். அவள் சிறிது கடித்து மீதியைத் தந்தாள். காதல் பிரசாதத்தை இருவரும் உண்டனர். கிரண் கைக்கடிகாரத்தைப் பார்த்து...“நான் போகிறேன் மணியாயிற்று” என்று புதர்களில் புள்ளிமான்போலத் துள்ளித்துள்ளி வகுப்பிற்கு ஓடினாள். முருகன் உணவுகொண்டு பெரிய சிந்தனையில் மூளையை உலாவவிட்டுக் கொண்டே விரைவாக நடந்தான்... “டிங் டாங் டிங்டாங்!” வகுப்பு அழைத்து விட்டது.

3

முதலில் தமிழையா வகுப்பு; ஐயாவின் சங்கத்தமிழுக்கும் மாணவரின் மறுமலர்ச்சித் தமிழுக்கும் போட்டா போட்டி நடப்பதே திருக்கூத்துத்தான். ஐயாவின் தனித் தமிழ், பிள்ளை முருகன் ஒருவனுக்கே வரும் .........குலவித்தையல்லவா? ஆனாலும் முருகன் அப்புறம் போனால் மறுமலர்ச்சித் தமிழே பேசுவான். முருகன் அப்பா இருக்கிறாரா என்று பார்த்துக்கொண்டே வாயைத் திறப்பான். இன்று கிரண்குமாரியும் அங்கேயிருந்தாள்......இன்னும் ஆறு பெண்களும் இருந்தனர். தொல்காப்பியனார் பாடநூலைத் திறந்து மிதிலைக்காட்சிப் படலத்தைத் தொடர்ந்தார்.

*“மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்*
*ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினர்*
*கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்*
*பிரிந்தவர் கூடினாற்பேசல் வேண்டுமோ?”*

தொல்காப்பியனார் இதற்குத் தொல்காப்பியச் சூத்திரங்களையெல்லாம் போட்டுப் புரட்டி, இலக்கணமாக உரைகோடி முடித்து...மாணுக்கர்காள் இச்செய்யுளில், கம்பனார் தலைவனும் தலைவியும் இரண்டுடற் கோருயிர் போன்றே காதலித்து, எஞ்ஞான்றும் அக்காதல்விடாது பற்றிநிற்பதை வியன்படக் கூறினாரென்க...........இக்கூற்றிற்கு உவமைச்சுவையூட்டியிருக்கும் பண்பைக் காண்மினோ......கருங்கடற் பள்ளியில் கலவை நீங்கியதாம்......என்ன.........விளங்கிக்கொண்டீர்களா?

ஒருவன்: ஐயா கருங்கடலில் பள்ளி யென்றால் பள்ளிக்கூடமா?

புலவர்: அட! கசடா பள்ளி யென்றால் பாயல், படுக்கை......

பகுத்தறிவு மாணவன்: ஐயா கருங்கடல் அலை வீசுமே; அதிற் பாயல் இருத்தலெப்படி...? ஆண்பெண் இருவர் படுத்தலெப்படி...... கலவி யெங்ஙனம் நிகழும்?

புலவர்: அட மட்டி, கருங்கடலில் பாம்பின் மேல் கலவை நடந்ததடா......

ஒரு பெண்: கலவை என்றால்......என்ன சந்தனமா......குழம்பா?

புலவர்: கலவை கலத்தல் என்னும் தொழிற் பெயரிற் பிறந்தது. கலத்தற் றொழிலுடையது கலவை.

மாணவர்: கலத்தற்றொழில் எப்படி நிகழ்ந்ததையா?

வகுப்பில் ஏக கலாட்டாதான்...கைகொட்டலும் பெஞ்சைத் தட்டலும் சிரிப்பும் விளையாட்டும்......கண் வீச்சும் அமளிபட்டன!

ஒரு மாணவன்: ஐயா, கம்பனார் மருங்கிலா நங்கை என்றாரே, அப்படியொரு நங்கையுண்டா?

புலவர்: முட்டாள்......மருங்கிலா என்றால் இடையே இல்லாமல் இருப்பதன்று. நுண்ணிய நூல் போன்ற இடை என்பது பொருள்......

மாணவன்: ஒருங்கிய இரண்டுடல் என்றால் என்ன ஐயா......

இந்தமாதிரி மாணவர் புலவரைக் கோட்டா செய்தார்கள். புலவர் விடைபகரக் கூசினால், “ஐயா பரீக்ஷையில் இவற்றைக் கேட்பாராயின் யாம் திகைக்க நேரிடும். அச்சமயம் நமதுபுகழ்பெற்றதொல்காப்பியனாரின் மாணவரோ இக்கேள்விக்குப் பின் வாங்கினர் என்று மற்றோர் சிறுமைசெய்ய நேரிடும். ஆதலின் சொல்லிவிடுங்கள் திறந்து” என்று அசம்பாவிதமான கேள்விகளையெல்லாம் அடுக்கி மணியடிக்கு மட்டும்

ஐயாவை வம்புக்கிழுத்துத் தொலைத்தனர். வகுப்பு முடிந்ததுதான் தாமதம். முருகனையும் கிரண் குமாரியையும் நோக்கி "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?" என்று மாணவர் பாடிக் கைகொட்டிச் சென்றனர். இப்படியே எல்லாவகுப்புக்களிலும் நண்பர் இருவரையும் கோட்டா செய்தனர். மாலையில் முருகன் டென்னிஸ் ஆடும்போது அவளும் வந்துசேருவாள். இப்படி இருவர் நட்பும் முதிர்ந்து பருவத்திற்குரிய காதற் கனலானது. கிரண்குமாரி முருகனுக்கு இந்துஸ்தானி நன்றாகச் சொல்லிக்கொடுத்தாள். முருகன் அவளுக்குத் தமிழ் சொல்லித் தந்தான்......

4

ஒருநாள் ஒரு மாமரத்தைச் சுற்றிப் படர்ந்த மல்லிகைக் கொடியை முருகன் கண்டான். அதில் பூப்பறித்து ஒரு மாலை கட்டி வைத்தான். கிரண் ஓடிவந்தாள். அந்த மாலையை எடுத்து முருகன் கழுத்திற் சூட்டி "நாம் இந்த மரமும் கொடியும் போலிருப்போம்" என்றாள். முருகன் "மலரும் கனியுமாகச் செழிப்போம்" என்றான்......பிறகு உணர்ச்சி வேகம் இருவரையும் மௌனமாக்கியது......அந்திமாலையில் புட்களெல்லாம் ஜோடி ஜோடியாகப் பாடித் தாவிச் சிறகடித்து விளையாடின. வாழ்க்கைச் சோலையில் தாமும் அப்படி விளையாடக் காதலர் உள்ளம் துடித்தது. ஆனால் அதற்குள், செவ்வானத்தில் கருமை படர்ந்தது. உலகம் இருட்டுத் திரையில் மங்கத் தொடங்கியது......நிறப்பொலிவால் செருக்குற்ற இயற்கையில் இரவு கரிபூசத் தொடங்கியது.

பகலும் மாலையும் கூடிக் கலந்தன......... கிரணும் முருகனும்......இருவரும் வீடு சேருமுன் சப்தரிஷி மண்டலம் பளிச்சிட்டது. கிரண் அருந்ததியைக் காட்டி ஒரு புன்னகை புரிந்து மின் போல ஓடி மறைந்தாள்.

அக்காலமே ராஜாஜி மந்திரியாகித் தமிழ் நாட்டில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்தார். ஹிந்துஸ்தானியைப் பள்ளிகூடங்களில் கட்டாயமாக்கினார். அதன் விளைவாக இந்திப்போர் எழுந்தது. அப்போரில் முன்னணியிற்சென்று சிறைபுகுந்த தமிழர் பலர். பின்னணியிலிருந்து விட்டுத் திண்ணையில் சொற்போராடியவர் பலர். நமது தொல்


# இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்
தியாகராயநகர் புரசவாக்கம் மவுண்டு ரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... ... | ரூ. 33,61,250 |
| ரிஸர்வ் நிதி | ... ... ... | ரூ. 33,62,500 |
| டிபாஸிட்டுகள் | ... ... | ரூ. 10,5000000-க்குமேல் |

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B.

N. கோபால அய்யர், செக்ரடரி

காப்பியனருக்கு அரசியல் கிளர்ச்சி பிடிக்காது. சிறையென்றால் நடுக்கம். மேலும் பள்ளித்தலைவர் இந்திரேசர். ஆதலால் புலவர் தமது நெஞ்சக் கொதிப்பையெல்லாம் திண்ணையில் வாரிவிட்டார். அவருடைய வாயைப் பெருக்கப் பத்துபேர் கூடுவதுண்டு. அவருள் ஒருவர் ஐந்தெழுத்தனர். அவர் 'தமிழர்' ஆங்கிலங்கூடக் கற்கக் கூடாது; கற்றால் தமிழுடன் ஆங்கிலத்தையும் கலந்து விடுவார்கள்' என்பவர். இந்தியைப்பற்றி அவருடைய கருத்தைக் கேட்கவேண்டியதில்லை. அவர் மகன் செங்குட்டுவன் இந்திவகுப்பிற்குப் போக மறுத்துப் படிப்பையே விட்டதில் அவருக்கொரு பெருமை. "எமது மகன் செங்குட்டுவன் வடக்கே படைநடத்தி, இமயச்சிமயத்திற் றமிழ்க்கொடி எழுதுவான்" என்று சிலப்பதிகாரத்தை ஒப்பித்துக்கொண்டிருந்தார் ஐந்தெழுத்தனர் (பஞ்சாட்சரம்). இந்தச் செங்குட்டுவனுக்கும் முருகனுக்கும் வகுப்புப்பொருமை பற்றிக்கொண்டது. முருகன் பள்ளிக்கூடத்திற் சேர்ந்தபோது ஐந்தாம் வகுப்பிற் படித்த செங்குட்டுவன், முருகன் பத்தாம் வகுப்பிற்கு வந்தபோது தான் அதை விட்டுக்கிளம்பி ஆறும்வகுப்பை எட்டினன். அவன் கிரண்குமாரியுடன் முருகன் நெருங்கிப் பேசுவதைப் பற்றிக் கதைகட்டி அப்பாவிடம் சொல்லி, அப்பா தொல்காப்பியனரிடம் சொல்லி, இன்று திண்ணைவம்பிற்கு அந்தப் பேச்சு வந்து நின்றது.

தொல்காப்பியனர்: தமிழகம் தமிழருக்கே உரியது. அதில் வேற்றினத்தார் புகவொட்டோம். பிறமொழி கலக்கவொட்டோம். இப்போழ்து இந்தி மந்தி என்னும் பேச்செல்லாம் இனி முறிந்தொடியச் செய்வோம். முயற்சி திருவினையாக்கும்.

ஐந்தெழுத்தனர்: அண்ணு, தங்கள் தமிழார்வம் தீப்பறக்கிறது. ஆனல் தங்கள் மகனரே, ஓர் வடநாட்டுப் பெண்ணுடன் உறவு கொண்டு காலத்தை வீணுக்குகிருர்.

இச்சமயமே முருகன் வந்தான்.

தொல்காப்பி: முருகா, ஏன் இந்நேரம்? சொல் உண்மையை.

முருகன்: தந்தாய், யான் காற்பந்தடித்து நண்பருடன் சிறிது உரையாடி வந்தேன்.

தொல்: உனது நண்பர் யார்? முருகா, ஏது கெட்டுப்போனய். நீ காதலார் (பியாரிலாலுக்குத் தனித் தமிழ்) கன்னியோடு களியாட்டயருவதை யாம் அறியோமா? அப்பெண்ணுடன் உனக்கென்ன உறவு? அவள் வடமகள்; நீ தென்மகன். வடக்கும் தெற்கும் பொருந்துங்கொல்?

முருகன்: அப்பா, வடக்குமுனையும் தெற்கு முனையுந்தாம் கவர்ச்சிகொண்டு பொருந்தும்.

தொல்: கெட்டி கெட்டி; அதனலேதான் உன் உள்ளம் வடமகள் உள்ளத்தைக் கவர்ந்ததுபோலும்.

முருகன்: தந்தாய்! இஃதென்னே விந்தை! நாமனைவரும் இந்தியர் அல்லமோ? எத்தனை நாட்கள் இப்படி நாம் ஒருவரையொருவர் வெறுத்துக்கொண்டு கலகம் செய்வது? இன்று நாம் வடக்கானலென்ன தெற்கானலென்ன? எல்லாரும் அடிமைகளாகவே இருக்கிறோம். மேலும் இவ்வேறுபாடு எனக்குப் பிடிக்கவேயில்லை. தமிழ் வளரவேண்டியதுதான். அதற்காக நாம் ஏன் இந்துஸ்தானியை மறுக்கவேண்டும்? அதுதானே இப்போது நமது நாட்டிற்கெல்லாம் தாய்மொழியாக வல்லது. அதற்காகத்தானே நானும் அதைப்பயின்றேன். நீரும் பயின்றால் குமரிகண்டக்கதைகளை வடநாட்டாருக்குச் சொல்லலாமே. நீர் தனித்தமிழிற் பேசினல் எந்த வடநாட்டுக் காதும் கேட்காதே.

தொல்: அட, களி, மடி, மானி, கயவா கள்ளா, தடியா, மடையா, குடிகேடா, இந்தி கற்ருயா? அவளிடமா? சரிசரிசரி... நீ இனி நமது பிள்ளையல்லை. போ, அவளுடனேயே போ... போடா... உன் முகத்தில் யாம் விழியாம்... போ... இந்தி இயக்கத்தில் இத்தனை தமிழர் சிறைசென்றிருக்கிருர்கள். தமிழனகப்பிறந்த நீ, நமது மகனன நீ, தொல்காப்பியரிடம் பயின்றநீ, இந்தி கற்பதாம்! வடமகளுடன் குலாவுவதாம்... கெட்டி கெட்டி! நமது மானத்தைக்கெடுக்கவே பிறந்தாய்... போ, போ.

முருகன்: அப்பா வணக்கம்; செல்கிறேன்.

முருகனுக்கு ரோசம் பொறுக்கவில்லை. தனித்தமிழ் வளர்ப்பதிலும் அவனுக்கு வெறுப்பில்லை. ஆனல் நமது சகோதரரான வடநாட்டாரை அருமையுடன் இகழ்வதையே அவன் வெறுத்தான். முருகன் ஒருகடிதம் எழுதி மறுநாள் வகுப்பில் மெல்ல, கிரண்குமாரியின் புத்தகத்தில் வைத்துவிட்டு எங்கோ கிளம்பிவிட்டான். பிறகு அவனைப்பற்றித் தகவலேயில்லை.

6

பியாரிலால் கோரக்பூரில் பிறந்து, பரம ஏழைக்குடும்பத்தில் வளர்ந்து கோயங்கா

என்பவரின் உதவியால் படித்து எம். ஏ. தேறியவர். உடனே அவர் சபர்மதி சென்று மகாத்மாவுக்குத் தொண்டு செய்தார். அவரை மகாத்மா தெற்கே ஹிந்துஸ்தானி பிரசாரத்திற்கே அனுப்பினார். இங்கே அவர் தமிழை நன்ருகக்கற்ருர். தமிழ்நாடு அவருக்குப் பிடித்துப் போனது. இங்கே வந்த பிறகே அவர் சென்னை தங்கசாலைத் தெருவில் கோகுல்தாஸ் மகள் ருக்மாயியைமணந்தார்; கிரண்குமாரி பிறந்தாள். உப்பு சத்யாக்கிரகம் வரையில், அவர் மகாத்மாவையே பின்பற்றினார். அந்தச் சத்தியாக்கிரகத்தில் அவர் இடது தோளில் பெரியகாயம் பட்டது......மகாத்மா "இனி நீ உபத்தியாயர்வேலைபார்த்து மாணவரிடையே தேசாபிமானத்தை வளர்" என்று உத்தரவிட்டார். பியாரிலால் தேசியக் கல்லூரியில் இடம் பெற்று, ஸயன்ஸும் ஹிந்தியும் பயிற்றிவந்தார். அவருக்குக்கிரண்குமாரியிடம் உயிரன்புண்டு. அவளை உயர்ந்த படிப்பளித்து, பெண்கல்விப் பணியில் ஈடுபடுத்த அவர் விரும்பினார்......கிரண்குமாரிக்கு இப்போது வயது பதினைந்து. ஸ்கூல்பைனல் தேர்வு நடந்துவிட்டது. தாயார் அதற்குள் கலியாணப் பேச்செடுத்தாள். பியாரிலால் அவளை ஒரு நல்ல தமிழ் வாலிபனுக்கே தரத் திர்மானித்திருந்தார். தம்மாணவருள் ஐந்தாறு பேர்கள் அவளைவிரும்பிக் காதற்கடிதங்களும் எழுதினர். கிரண்அனைத்தையும் கிழித்தெறிந்தாள். அம்மா கலியாணப்பேச்செடுக்கும் போதெல்லாம் இவள் துளஸி ராமாயணத்தை உரக்கப்படித்துப் பேச்சை அமுக்கிவிடுவாள். அவள் உள்ளம் முருகனுக்கே துடித்தது. பியாரிலாலுக்கும் முருகனிடம் பிரியமே. ஆனால் அவன் தந்தையின் போக்கு அவருக்குப் பிடிப்பதில்லை. முருகனும் மறைந்தபிறகு அவன் நினைப்பும் அவருக்கு மறைந்தது. ஆனால் கிரண் மறப்பாளா?

7

கிரண்குமாரி பி. ஏ. தேறியபிறகு, சேவாக்கிராமம்சென்று வார்தாக்கல்வி பயின்று மகிளாமந்திரத்திற் சேவைசெய்தாள். ஒரு நாள் மஹாத்மா காந்தி, மஹாதேவதேசாயை, "மஹாதேவ், ஸ்ரீபுரியில் அஹிம்ஸாபாய் தொண்டு எம்மட்டில் உள்ளது? அவர் ஒரு பெண் கலாசாலை வைக்கவேண்டும் என்ருரே" என்றுகேட்டார். "அஹிம்ஸாபாய் ஸ்ரீபுரியைக் காந்திபுரியாக்கிவிட்டார்' அங்கே சர்க்காப்பாட்டும் கதர்த்தறியின் தாளமும், கலப்பைஓசையும், கைத்தொழில்களின் துடிப்பும், கல்வியின் நாதமும் கேட்கின்றன. கட்குடி நின்றது. அவர் உழைத்துப் பிழைக்கின்றனர். எல்லாருக்கும் தமிழ் ஹிந்தி எழுதப் படிக்கத் தெரியும். காலை மாலை பஜனை நடக்கிறது. சென்றமாதமே அஹிம்ஸாபாய் குமாரி வித்யாலயம் தொடங்கினார், அதில் இப்போது நூறுபெண்கள் படிக்கிருர்கள். அதற்கு ஒரு தலைமை ஆசிரியை வேண்டும் என்று சென்ற வாரமே கடிதம் எழுதினார்." என்ருர் தேசாய்.

மகாத்மா, கிரண்குமாரியை அன்புடன் அழைத்து, "குமாரி வித்யாலயத்தை நீ நடத்து...... உனக்கு மங்களமாகுக. ஓம் ராம்" என்று ஆசீர்வதித்தனுப்பினார். அஹிம்ஸாபாய்க்குத் தந்தி பறந்தது.

ஸ்ரீபுரி நான்காண்டுகளுக்குமுன் மூதேவி புரியாகத்தானிருந்தது. அஹிம்ஸாபாய் அங்கே அரியதொண்டுசெய்து, புதிய கிராமத்தையே நாட்டினார். இன்று அது திருமகள் வாசமாயிருக்கிறது...... அஹிம்ஸாபாயைக் கிராமவாசிகள் சோடா காந்தி என்று மதிக்கிருர்கள். சோடா காந்தி சொல்லுக்கு இரண்டில்லை.

இன்று புத்தாண்டு நாள்...... சித்திரைத் தென்றல் பூமணத்தை அள்ளிவருகிறது. கிராமம் தோரணமும், வாழைகமுகும், கோலமும், மேளதாளமுமாயிருக்கிறது. திவ்ய கானங்கள் தமிழிலும் இந்தியிலும் முழங்குகின்றன. வந்தாள் கிரண்குமாரி. கிராமத்தில் புதிய களை வீசியது......, பார்த்தான் அஹிம்ஸாபாய்...... "ஆ கிரண்குமாரி... நீயா........." என்ருன். "முருகா நீயா அஹிம்ஸாபாய்"...... என்று களிபொங்கினள் கிரண். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?

மறுநாளே பியாரிலாலுக்குத் தந்தி வந்தது. தொல்காப்பியனார் மனமும் முருகன் மறைந்த பிறகு மாறிப்போனது. அவரையும் இழுத்துக்கொண்டு பியாரிலால் ஸ்ரீபுரிக்கு வந்தார். மஹாத்மா காந்திக்குத் தந்தியடித்தார். "அஹிம்ஸா-கிரண் மங்கலமாக வாழ்க" என்று மகாத்மா தந்திபேசினார்...... முருகனும் குமாரியும் மனங்கனிந்த திருமணம் புரிந்து, தேசசேவை செய்தனர். ஸ்ரீபுரிக்கு இருவரும் தாய்தந்தையர்போல் விளங்குகிருர்கள். முருகன் துளஸி ராமாயணத்தைத் தமிழில் எழுதினன். கிரண் கம்பனை இந்தியில் எழுதினள். வடக்கே செல்லும்போதெல்லாம் இவன் கம்பனைப் படிக்க, அவள் இந்தியில் விளக்கினள். தென்கலை வடக்கே புகழ்பெற்றது........ வடக்கும் தெற்கும் ஒன்ருயின......மங்களந் தானே!

# சூரியனும் அதன் குடும்பமும்

ஆர். கே. விசுவநாதன்

"ஞாயிறே, நின்முகத்தைப் பார்த்த பொருள்களெல்லாம் ஒளி பெறுகின்றன. பூமி, சந்திரன், செவ்வாய், புதன் சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ், நெப்தூன் முதலிய பல நூறு வீடுகள்—இவை எல்லாம் நின் கதிர்கள் பட்டமாத்திரத்திலே ஒளியுற நகைசெய்கின்றன. தீப்பந்திலிருந்து பொறிகள் வீசுவதுபோல, இவை எல்லாம் ஞாயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டனவென்பர். உன் மந்திரத்திலே கட்டுண்டு வரைகடவாது சுழல்கின்றன" என்று பாரதியார் சூரியமண்டலத்தை வர்ணிக்கின்றார்.

இரவில் வானவெளியில் தோன்றும் எண்ணற்ற நக்ஷத்திரங்களைக்கண்டு அனைவரும் வியப்படைவது திண்ணம். இவற்றை அறிய இவற்றின் ஒளியே காரணமாக இருக்கின்றது. இவை ஒவ்வொன்றும் பூமியிலிருந்து அளவுகடந்த தூரத்தில் இருக்கின்றது. ஓர் ஊரின் தூரத்தைச் சொல்லும்போது அது இவ்வளவு மைல்களுக்கு அப்பால் இருக்கின்து என்று சொல்லுகிறோம். இங்கே மைல் என்ற தூரத்தை அலகாக (unit) வைத்துக்கொண்டு அதன் தூரத்தைக் குறிப்பிடுகின்றோம். ஆனால் ஒரு நக்ஷத்திரம் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதைக் குறிக்கவேண்டுமானால் அதை மைல் கணக்கில் சொல்லிச் சாத்தியமாகாது. இதற்கு விஞ்ஞானிகள் செய்கையாலும் அலகு நம்மை திகைக்கச் செய்யும். ஒளி ஆற்றல் ஒரு வினாடிக்கு லக்ஷத்தி எண்பத்தாறாயிரம் (1,86,000) மைல் வீதம் பரவுகிறது. இவ்வேகத்துடன் ஒரு வருஷகாலத்தில் (அதாவது 24x60x60x 365 வினாடிகளில்) இது கடந்து செல்லக் கூடிய தூரத்தை அலகாகக்கொண்டு ஒரு நக்ஷத்திரம் இருக்கும் தூரத்தைக் குறிப்பிடுகின்றார்கள். இவ்வலகுக்கு ஒளி வருஷம் (Light-year) என்று பெயர். எனவே நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றும் இருக்கும் தூரத்தை உணரலாம். வானத்தில் பல்வேறு தூரங்களில் அமைந்துள்ள நக்ஷத்திரங்களில் சூரியன் மிகச் சிறியதொரு நக்ஷத்திரமாகும். சூரியனைச்சுற்றிப் பல கிரகங்கள் ஓடிவருவதுபோல மற்ற நக்ஷத்திரங்களைச் சுற்றியும் பல கிரகங்கள் ஓடிவரலாம் என்று ஊகிக்கின்றார்கள். இக்கட்டுரையில் சூரியமண்டலத்தைப்பற்றி சில விவரங்களைக் கவனிப்போம்.

கோடிக்கணக்கான வருஷங்களுக்குமுன் சூரியனைச்சுற்றி ஒரு கிரகமும் இல்லாமல் அது தன்னந்தனியே போய்க்கொண்டிருந்திருக்கவேண்டும். அந்நிலையில் வானத்தில் உள்ள மற்ற நக்ஷத்திரங்களில் ஒன்று சூரியனுக்குச் சற்று சமீபத்தில் வந்திருக்கவேண்டும். இதன் விளைவாக இரண்டுக்குமிடையே பெரியதொரு கவர்ச்சி சக்தி தொழிற்பட்டு சூரியனின்று சிறிதுபாகம் தெறித்து வெளிப்பட்டிருக்கவேண்டுமென்று விஞ்ஞானிகள் ஊகிக்கின்றார்கள். பூமி, புதன், சுக்கிரன் முதலிய கிரகங்கள் இவ்வாறு தெறித்து வந்த பாகத்தின் அம்சங்களே என்று கூறுகின்றார்கள். சற்றேறக்குறைய அதே சமயத்தில் கிரகங்களிலிருந்தும் சில பாகங்கள் வெளிப்பட்டு உபகிரகங்கள் ஏற்பட்டன என்று கூறுகின்றார்கள். பூமியைச்சுற்றிச் சந்திரன் ஓடிவருவதுபோல, செவ்வாய் கிரகத்தைச் சுற்றி இரண்டு உபகிரகங்களும், குரு, சனி இவ்விரண்டு கிரகங்கள் ஒவ்வொன்றையும் சுற்றி ஒன்பது உபகிரகங்களும் 'யுரேனஸைச்சுற்றி நான்கு உபகிரகங்களும், நெப்த்யூனைச்சுற்றி ஒரு உபகிரகமும் ஓடிவருவதைக் கண்டார்கள். சுக்கிரன், புதன் இரண்டுக்கும் உபகிரகங்கள் இல்லை. கிரகங்களும், உபகிரகங்களும் நக்ஷத்திரங்களைப்போல சுயம்பிரகாசமானவை அல்ல. இவை எல்லாம் சூரிய வெளிச்சத்தினால்தான் பிரகாசிக்கின்றன.

சூரியனுக்கு மிகவும் அருகாமையில் இருப்பது புதன். இதற்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் சுமார் மூன்று கோடி மைல் (Thirty million miles). சூரியனுக்கு மிகவும் தூரத்தில் உள்ளது புளுடோ (Pluto) என்னும் கிரகம். இது சூரியனின்று நாலு லக்ஷம் கோடி (Four bililon) மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. இக்கிரகம் 1930-ம் ஆண்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கிரகங்கள் ஒவ்வொன்றின் விட்டமும் (Diameter) வெவ்வேறாகும். பரிமாணத்தில் மிகவும் சிறியதான புதனின் விட்டம் சுமார் மூவாயிரம் மைல் என்றும், பரிமா

ணத்தில் மிகவும் பெரியதான குருவின் விட்டம் எண்பத்தி எண்ணுயிரம் மைல் என்றும் கண்டிருக்கின்றுர்கள். கிரகங்கள் ஒவ்வொன்றின் நிறையையும் அளந்திருக்கின்றுர்கள். இவற்றை எல்லாம் கூட்டிவரும் தொகை சூரியனின் நிறையில் எழுநூற்றில் ஒரு பங்கே இருப்பதைக் கண்டார்கள். புளூடோ என்னும் கிரகம் நீங்கலாக மற்ற கிரகங்களை இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக்கொள்ளலாம். புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய் ஆகியநான்கும் முதல் வகுப்பைச் சேர்ந்தவை. குரு, சனி, யுரேன்ஸ், நெப்தியூன் நான்கும் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவை. முதல் வகுப்புக் கிரகங்களுக்கும், இரண்டாவது வகுப்புக் கிரகங்களுக்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. முதல் வகுப்புக் கிரகங்கள் இரண்டாவது வகுப்பு கிரகங்களைக் காட்டிலும் சிறியவை ஆனல் இவற்றின் திண்மை (Density) இரண்டாவது வகுப்புக் கிரகங்களின் திண்மையைக் காட்டிலும் அதிகமாயிருக்கின்றது. மற்றும் முதல் வகுப்பு கிரகங்களின் நிறைகளைக் கூட்டினுல் அத்தொகை இரண்டாவது வகுப்புக் கிரகங்களில் மிகக் குறைவான கிரகத்தின் நிறையைவிடவும் குறைவாக இருப்பது தெரியவந்தது. புளூடோ கிரகத்தின் குணங்கள் இவ்விரு வகுப்பு கிரகங்களைக்காட்டிலும் சற்று வேருகக் இருப்பதைக் கண்டார்கள். இனி இக்கிரகங்களைப் பற்றித் தனித்தனியே சிறிது கூறுவோம்.

கிரகங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறியது புதன் என்று முன்பு கூறினேம். இது எண்பத்தெட்டு நாட்களில் சூரியனை ஒரு சுற்றுச் சுற்றுகின்றது. இதன் கதி செகண்டுக்கு இருபத்தொன்பது மைல் என்று அறிந்தார்கள். பூமியின் மேற்பரப்பில் இருப்பதுபோல இதன் மீது பவனம் யாதொன்றும் இல்லையென்று தெரிகிறது. இதற்கு அப்பால் ஓடிவரும் கிரகம் சுக்கிரன். அனேக விஷயங்களில் இது பூமியைப் போலவே இருக்கின்றது. இதன் விட்டமும், பூமியின் விட்டமும் ஏறக்குறைய ஒரே மதிப்பைக்கொண்டன. இதற்கு சூரியனைச் சற்றிவர இருநூற்று இருபத்தைந்து நாட்கள் ஆகின்றன. இதன் மேற்பரப்பில் அடர்த்தியான வெண்மேகங்கள் இருப்பது தெரியவந்தது. இவற்றில் கரியமலவாயு (Carbon-di-oxide) அதிகம் இருப்பதைக் கண்டார்கள். இவ்வாயு இருப்பதைக் கொண்டு இங்கு சில உயிர்வர்க்கங்கள்


மேதாஸ்

“சுந்தரி எலிக்ஸர்”

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார்செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

K. S. மேதா & Co., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு :—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

இருக்கவேண்டுமென்று ஊகிக்கிருர்கள். இதற்கு அப்பால் சூரியனைச்சுற்றி ஓடிவரும் கிரகம் .பூமி. பூமிக்கு அப்பால் செவ்வாய் சுற்றி ஓடிவருகின்றது. இது அறுநூற்றுஎண்பத்தேழு நாட்களுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றிவருகின்றது. இதன் நிறம் சற்று சிவப்பானது. இதன் மேற்பரப்பில் பூமியின் மீது இருப்பதுபோல் காற்று மண்டலம் இருக்கவேண்டுமென்று தெரிகின்றது. இக்காற்றுமண்டலத்தில் பிரதிபலனம் ஆகிவரும் ஒளியைச் சோதனைசெய்து பார்த்து நீராவியும், பிராணவாயுவும் இதில் இருக்கவேண்டுமென்று முடிவுகட்டினார்கள். பிராணவாயு இருப்பதிலிருந்து இங்கும் மானிடவாழ்க்கை இருக்கவேண்டுமென்று ஊகிக்கிருர்கள். பூமியில் ஏற்படுவதுபோல இங்கும் பருவகாலங்கள் ஏற்படவேண்டுமென்று நினைக்கத் தக்க சான்றுகள் இருக்கின்றன. இதற்கு அப்பால் சூரியனைச்சுற்றி ஓடிவரும் கிரகம் குரு. இது பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை சூரியனைச் சுற்றிவருகின்றது.கிரகங்கள் எல்லாவற்றையும்விட இதுவே நிறை அதிகம் உள்ளது. பூமியின் நிறையில் முன்னூறு மடங்கு கொண்டது இதன் நிறை. இதன் மேற்பரப்பில் நீராவி, பிராணவாயு ஒன்றும் இல்லை. நிறையில் இதற்கு அடுத்தபடியாக உள்ள சனி கிரகம் இதற்கப்பால் சூரியனைச்சுற்றி ஓடிவருகின்றது. மற்றக் கிரகங்களைக் காட்டிலும் இதற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது அழகான வட்டங்களால் சூழப்பட்டிருக்கின்றது. இவற்றிற்கு சனி வளையங்கள் (Saturn rings) என்று பெயர். இவ்வட்டங்கள் திடப்பொருள்களாக இருக்க முடியாது என்று கருதுகின்ருர்கள். மேலும் இவை மிகவும் சன்னமாக இருப்பதைக் கண்டார்கள். இவ்வளையங்கள் எவ்வாறு உண்டாயின என்று விஞ்ஞானிகளால் இன்னும் கூறமுடியவில்லை. இதற்கு அடுத்த படியாக முறையே எண்பத்திநான்கு வருஷங்களிலும், நூற்றுஅறுபத்தைந்து வருஷங்களிலும் யுரேனஸ், நெப்த்யூன் கிரகங்கள் சூரியனைச்சுற்றி ஓடிவருகின்றன. நெப்த்யூன் கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது வான சாஸ்திரத்தில் ஒரு விநோத சம்பவமாகும். விஞ்ஞானிகள் யுரேனஸின் இயக்கத்தைப் பரிசோதித்துப் பார்க்கும்போது முன்னுல் அறியப்பட்ட விதிகளுக்கு முரணுக அது இயங்குவதைக் கண்டார்கள். இதற்குக்காரணம் அதன் அருகில் வேருெரு கிரகம் இருக்கவேண்டுமென்று நினைத்து அது இருக்கவேண்டிய இடத்தைக் கணக்கிட்டார்கள். தொலைநோக்கியைக்கொண்டு அது கணக்கியலால் இருக்கவேண்டியஇடத்தைப் பார்க்கும்போது அக்கிரகம் தென்படுவதை கண்டு அதற்கு நெப்த்யூன் என்று பெயரிட்டார்கள்.

இக்கிரகங்கள் எல்லாம் சூரியனைச் சுற்றி வருவதற்கு சில விதிகள் உண்டு. அவற்றிற்கு கெப்ளர் விதிகள் (Kepler's laws) என்று பெயர். இவையெல்லாம் சரியான வட்டங்களில் ஓடி வராமல் ஆயுதங்களில் (Ellipses) ஓடி வருவது தெரியவந்தது. இவைசுற்றிவருவதற்கு காரணம் நெடுநாள் வரை விஞ்ஞானிகளுக்குப் புலப்படவில்லை. நியூட்டன் என்ற விஞ்ஞானியே இதற்குக் காரணம் கண்டுபிடித்தார். இவர் சூரியனுக்கும் கிரகங்களுக்குமிடையே அவ்வவற்றின் நிறைகளுக்கு ஏற்பக்கவர்ச்சி சக்திகள் தொழிற்படுகின்றதென்றும் அவற்றின் விளைவாகக் கிரகங்கள் எப்பொழுது ஓடிவருகின்றன என்று எடுத்துரைத்தார். முன்னர் கூறிய விநோத சம்பவம் அதாவது நெப்த்யூன் கண்டுபிடித்த விதம் இவரது கவர்ச்சி விதியினுல்தான் முடிந்தது. உபகிரகங்களும் இதுபோன்ற கவர்ச்சி சக்திகளின் விளைவினுல்தான் கிரகங்களைச் சுற்றி ஓடிவருகின்றன. கிரகங்களின் நிறையைவிட உபகிரகங்களின் நிறை மிகச் சிறியதாகையால் அவற்றைப் புறக்கணித்து கிரகத்தை உபகிரகம் சுற்றுவதற்குண்டான நேரத்தையும், இரண்டிற்குமுள்ள இடைத்தூரத்தையும் கொண்டு, கிரகங்கள் ஒவ்வொன்றின் நிறையையும் நியூட்டன் கவர்ச்சி விதியினுல்தான் அறிந்தார்கள். இதுபோன்று அனேக விவரங்கள் சூரியமண்டலத்தைப்பற்றி அறிந்திருக்கின்ருர்கள். அவற்றை எல்லாம் சிந்திக்குங்கால் இயற்கை அன்னையின் விசித்திரம் நன்கு புலனுகும்.

# "ஜீனியிஸ் - அப்பா"

டாக்டர் வே. ராகவன்

[மாம்பலத்தில் புதிதாகக் கட்டப்பட்ட வீடொன்று; அதன் முன் அறை (Drawing room); ராமகிருஷ்ண விவேகானந்தர், காந்தி, ஸாயிபாபா, சங்கராசாரிய ஸ்வாமிகள், ரமண மகரிஷி, அரவிந்தர் முதலிய மஹாத்மாக்களின் படங்கள்; நடுநடுவே ஏதோ சில சித்திரங்கள், வளையல்கள், தையல் வேலைப்படங்கள். வீட்டு எஜமானர் வெளியேபோயிருக்கும் சமயம்; புதிய மனிதர் ஒருவர் வந்து உட்கார்ந்து பார்த்துவிட்டு, நாழிகையானதால் வெளியே தோட்டத்திலிருக்கும் தோட்டக்காரனைக் கூவி அவனருகில் வந்து பேசிக்கொண்டிருக்கிறார்.]

புது மனிதர்: (தோட்டக்காரனைப்பார்த்து) ஏனப்பா! தோட்டக்காரா! ஐயா வீட்டிலே இல்லையோ?

தோட்டக்காரன்: இல்லேங்க; கருக்கல்லயே கார்லே வெளியே போனாரு; குந்திண்டு இருங்களேன்; வந்தூடர டயன்தாங்க!

புது மனிதர்: ஏம்பா! ரொம்ப நாழியா ஒக்காண்டுருக்கேனே! வீட்டுக்குள்ளே அம்மா இல்லே! வேறே பெரிய கொழந்தைகள்ளாம் இல்லே?

தோட்டக்காரன்: இருக்காங்கோ; அம்மாவுக்கு ஒடப்பு சவுக்கியமில்லேங்க; புள்ளத்தாச்சியாயிருக்காங்க; கொழந்தைங்கள்ளாம் அதது அவா அவா ரூம்கள்ளே படிச்சுண்டுருக்கும்; காலை வேளை இல்லே! அதுகளை காலைவேளைலே கூப்படப்படாதுன்னு அய்யா உத்தரவு.

புது மனிதர்: (தோட்டக்காரன் அருகில் வந்து) ஏப்பா! அய்யருக்கு எவ்வளவு கொழந்தைகள்?

தோட்டக்காரன்: கொழந்தைகளா? இருங்க ......... 1, 2, 3, 4, 5, 6, 7, 8............

புது மனிதர்: என்ன எண்ணிண்டே போறயே? அவ்வளவும் பொண்ணு. பிள்ளையா?

தோட்டக்காரன்: ஒரே ஒரு பொண்ணுதாங்க; மத்ததெல்லாம் புள்ளப்பசங்க; ரொம்ப கெடுபுடிங்க அய்யர்; ஆனால் எல்லாக் கொழந்தைகளும் ரொம்ப ரொம்ப கெட்டிக்காரங்க.

(ஒரு Private tuition வாத்தியார் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வருகிறார்.)

புது மனிதர்: இதோ வெளியே வருகிறாரே, யாரு?

தோட்டக்காரன்: வாத்யாருங்க; புள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துட்டுப் போறாரு.

புது மனிதர்: (வாத்தியாரை பார்த்து) நமஸ்காரம் ஸார்! ஆத்து ஸார் எப்போ திரும்பி வருவாரோ?

வாத்தியார்: (வீட்டு வாசற்படிக்குமேலுள்ள கடிகாரத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு) இன்னும் வரல்லயோ? (தோட்டக்காரனைப்பார்த்து) டேய், அய்யர் வந்திருந்தா சொல்லுடா, யாரோ பாக்க வந்துருக்கான்னு. (சொல்லிவிட்டுப்போகிறார்)

(புது மனிதர் பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும்போதே மற்றொரு வாத்தியார் உள்ளிருந்து வெளியே வருகிறார்.)

புது மனிதர்: (தோட்டக்காரனைப் பார்த்து) இவர் யார்?

தோட்டக்காரன்: இவங்க இன்னொரு வாத்தியாருங்க.

புது மனிதர்: எவ்வளவு வாத்தியார்ரா? புத்துலேந்து ஈசல் களம்பராப்போலே இருக்கே.

தோட்டக்காரன்: மொதல்லே போனாங்களே அவங்க கணக்கு, இன்னஎன்னமோ பாடங்கள்ளாம் சொல்லிக் கொடுக்கராரு; இவங்க சாஸ்திரி அய்யரும்பாங்க; காலேலே வந்தாருனா பூ கீ பரிச்சு பூசைபண்ணி பின்னாலே சமஸ்கரம்கராங்களே அது சொல்லிவைப்பாரு; அய்யர்கூட சில சமயம் இவருகிட்ட ராமாயணம் வாசிப்பாரு.

(இதற்குள் மற்றொருவர் வெளியே வருகிறார்.)

புது மனிதர்: என்ன? பயில்வான் நடையா இருக்கு! தோட்டக்கார்! இவர் யார்?

# In the Swiss Mountains



......சமாதானம் காணப்படுகிறது. பள்ளத்தாக்குகளிலுள்ள சிறு நகரங்கள் உலகத்தில் மிகச் சிறந்த கடிகாரங்களை தயாரிப்பதில் முனைந்துள்ளன. வெஸ்ட் எண்டு மாடல்கள் ஏற்றுமதிக்குத் தயாராயிருக்கின்றன.

சுற்றியுள்ள தேசங்களில் இப்பொழுது யுத்த அலைகள் ஓங்கியும் குறைந்தும் வருகின்றன. சில தேசங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஏற்றுமதி வசதி ஏற்படவில்லை. மற்ற இடங்களில் வியாபாரக் கால்வாய்கள் அடைபட்டுக் கிடக்கின்றன.

அமைதியான காலம் ஏற்படும் வரை நமது புகழ்பெற்ற கடிகாரங்களை சப்ளை செய்ய இயலவில்லை. தற்பொழுது நமது ஸ்டாக்குகளிலிருந்து எல்லோருடைய கோரிக்கைகளையும் பூர்த்திசெய்ய முடியவில்லை.

நமது சப்ளையை அதிகரிக்கச் செய்ய பெருமுயற்சி செய்து வருகிறோம். ஆனால் தற்காலீகமாக உள்ள ஸ்டாக்குக் குறைவு நம் முயற்சியை எதிர்க்கிறது. இந்நிலைக்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல என்பதை நமது வாடிக்கைக்காரர்கள் உணருவார்கள் என நம்புகிறோம்.

**வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.**
பம்பாய் — கல்கத்தா

QUALITY WATCHES

# WEST END WATCH Co.

**BOMBAY . CALCUTTA**

*Makers of Quality Watches for over 75 Years.*

தோட்டக்காரன்: இருங்க, இவருக்கு மொதல்ல அவர் ஸைகளை எடுத்துக் கொடுத்துட்டு வரேன். (போய் ஸைகளை எடுத்துக்கொடுத்துவிட்டு வருகிருன்.) இவரு தண்டால், பஸ்கி எல்லாம் சொல் லிக்கொடுக்கராரு. "கும்"னு மூச்சைப் புடிச்சுக்கச் சொல்லுவாருங்க; திடீர்னு பசங்களை தலைகீழா நிக்கவைப்பாரு; கால் கையெல்லாம் எப்படி எல்லாமோ ஒடிச்சு வச்சுடுவாரு!

புது மனிதர்: ஓ! யோகாஸனம் போல இருக்கு! ஏன்டா, இவ்வளவு வாத்தியாரா?

தோட்டக்காரன்: ஸரிதான்; பாக்கி எங்க போச்சு; ஒரு கான்வெண்ட் ஸ்கூல் சட்டக்காரம்மா அந்திப்போதுலே வந்து இங்கிலீஷ் சொல்லிவைக்க வருவாங்க.

புது மனிதர்: இம்..........

தோட்டக்காரன்: பாட்டு வாத்தியார், நட்டுவக்காரரு ஒத்தரு.........

புது மனிதர்: என்ன? யாரு?

தோட்டக்காரன், நட்டுவக்காரரு; டான்ஸ் ங்க! அதாம் தாளம் தட்டி கிட்டு 'ததா ஞத' ங்கராங்களே!

புது மனிதர்: பொண்ணுக்கு டான்ஸ் சொல்லி வக்கராங்களோ?

தோட்டக்காரன்: முன்னே பொண்ணுக்கு சொல்லிவச்சுண்டு இருந்தாரு; இப்போ ஒரு புள்ளிக்கொழந்தைக்குக்கூட சொல்லிவக்க ராரு.

புது மனிதர்: பையனுக்கா?

தோட்டக்காரன்: ஆமாங்க; ஒரு புள்ளை ஆடும்; ஒண்ணு பாடும்; ஒண்ணு பொம்மை போடும்; அதோ மாட்டிருக்கிற படங்க அந்தக் குழந்தை எழுதினதுதாங்க. இன்ஞெரு கொழந்தை கிருகட்டு ஆடும்.........

புது மனிதர்: அதிருக்கட்டும்; மூத்த புள்ளை இருக்காரா வீட்டிலே?

தோட்டக்காரன்: இல்லேங்க; அவர்தான் அய்யாவோட கூட வேலையைப்பாத்துக்க ராரு; காலலே ஷாப்புக்குப் போயிருக்காரு; சாப்பாட்டுக்கு வருவாரு.

புது மனிதர்: காலேஜுலே படிக்கல் லயோ!

தோட்டக்காரன்: படிச்சாச்சுங்க; இப்போ, பொண்ணு காலேஜுலே படிக்கரதுங்க! வர வரிசம் அடுத்த புள்ளக்கொழுந்தை காலேஜுக்குப் போகப்போரதாம்.

(கார் ஹார்ண் (Car Horn) சப்தம்) இதோ, அய்யாவே வந்துட்டாருங்க!

காரில் அய்யரும், அவர் பெண்ணும், பாட்டு வாத்தியாரும் வந்து இறங்குகிருர் கள்.

அய்யர்: (தம்பூரைக் காரிலிருந்து எடுக்கும் தம் பெண் நாகத்தைப் பார்த்துக் கோபத்துடன்) நாகம்! அந்தத் தம்பூரை அதோ தோட்டக்காரச் சோமுகிட்டே கொடுத்து அவரப்பந்தலுக்குக் காலாய் வக்கச்சொல்லு; உள்ளேபோய் செக் புக் (Cheque Book)ஐ எடுத்துண்டுவா, பாட்டு வாத்தியார் கணக்கைத் தீத்துடரேன்!

பாட்டு வாத்யார்: இதென்ன இவ்வளவு ஆத்தரம்! அகாடமி காம்பெடிஷன்லே (Academy competition) பிரைஸ் வரலேனு தம்பூரை விட்டெறிவானேன்? அகாடமி காம்பெடிஷன்னு பிரிவி கவுன்ஸிலா? வேறே தெரிந்தவா இல்லையா? நம்ப குழந்தை பாட்டை யார்னு கொறை சொல்ரது? என்ன ஞானம்!

அய்யர்: ஆமாம்; என்ன தெரியும் இந்த அகாடமி ஜட்ஜுகளுக்கு! ஆனைப்பட்ட வித்வான்கள்ளாம் நம்ப ஆத்துலே வந்திருந்து சாப்பிட்டுட்டு, நம் குட்டிபாட்டை கேட்டு ப்ரமித்துப்போயிருக்கா; இவங்க என்னடான்னு, ச்ருதியோட சேரல்லயாம், தாளம் நிக்கல்லயாம்; இவங்களுக்கு என்ன தெரியும்னு நெனச்சுண்டு 'ஜட்ஜ்' பண்ண வந்துட்டானுக!

பாட்டு வாத்யார்: அது போகட்டும்னு; யாரோ வந்திருக்கா, ரொம்ப நாழியா காத்துண்டுருக்கா; அவரை கவனியுங்கோ.

அய்யர்: (புதுமனிதரைப்பார்த்து) வாருங்கோ, ஸார்; இப்படி உள்ளே வந்து ஒக்காண்டிருக்கப் படாதோ, தோட்டத்துலேயே நின்னுண்டிருப்பாளோ?

புது மனிதர்: பாதகமில்லேனே! நீங்க கொஞ்சம் ச்ரமப்பரிகாரம் பண்ணிங்கோ! படபடப்பாயிருக்காப்பலே இருக்கு. தோட்டக்காரன் நல்ல புத்திசாலி; அவனோடே பேசிண்டு இருந்தேன், போதுபோனதே தெரியல்லே!

அய்யர்: புத்திசாலியில்லாட்டா நம்ப ஆத்துலே ஒத்தரும் இருக்கமுடியாதுங்கரத்தை 'நோட்' பண்ணிக்கோங்க! வரபோது ஒத்தன் ஒண்ணும் தெரியாதவனுயிருந்தாலும்,

நம் காம்பௌண்டு (Compound) க்குள்ளே அடிவச்சூட்டா, அவனுக்கு எங்கேந்தோ புத்தி வந்தூடும்!

புது மனிதர்: வாஸ்தவம்தான்.

அய்யர்: இங்கே எல்லாம் 'மேதை' தான். கொஞ்சம் இருங்கோ.........டேய் சோமு! என்ன, காலநேரமும் அதுவுமா பேசிண்டுருந்தயாமே, செடிகளை கவனிக்காமே; போடா, வேலையைக்கவனி; செடிகள்ளாம் வளரவேயில்லை.

தோட்டக்காரன்: செடிகளுக்கு எரு போட்டுருக்கு, தண்ணிகொட்டிருக்கு; பின்னே என்னங்கபண்ரது? கூடவே நின்னுகிட்டு, வளரு வளருன்னு அதுகளைப் பார்த்து சொல்லிக்கிண்டே இருக்கணுமா?

அய்யர்: போடா; வாசல்லே அந்த கில்ட் போட்ட கல் வச்சிருக்கே, அதை நன்னு தொடச்சூட்டுவா, போ. (புது மனிதரைப் பார்த்து) நீங்க பங்களா வாசல்லே கில்டுலே வீட்டுக்குப்பேர் போட்டிருக்கேனே அதைப்பார்க்கல்லயோ?

புதுமனிதர்; பார்க்கல்லயே!

அய்யர்: பாரும் நம்பவீட்டுக்கு "மேதா விலாஸம்" னு பேர்,

புது மனிதர்: சே! இதைச் தெரிஞ்சுக்காமலா, அகாடமி ஜட்ஜுகள் தீர்மானஞ் செஞ்சூட்டா?

அய்யர்: இந்தப் பொண்ணு கிடக்கான்னு; ஒம்பது புள்ளை பெத்திருக்கேன்; ஒம்பதும் ஒன்பது ரத்னம்போங்கோ! மூத்த பயல் பிஸினஸ்லே மஹா மேதை; கல்லைத் தொட்டாலும் அது பொன்தான்! அடுத்த பயலுக்கு ராமானுஜம்னு பெயரு?

புது மனிதர்: அரியக்குடிபோல பாடராம் போலே இருக்கு!

அய்யர்: சே! Mathematician!

புது மனிதர்: ஓகோ! ஸரிதான்!

அய்யர்: அதுக்கடுத்த பயல் — அய்யோ ஏன் கேக்கரேள்...... தாங்கல்லே போங்கோ என்னால் தாங்கல்லே! எல்லாம் ஒரே ஜீனியஸ்—Genius!

(என்று கைகளை தூக்கிக்கொண்டு எழுந்து நின்று அய்யர் துடிக்கிறார்.)

புது மனிதர்: அய்யர்வாள்! ஒக்காருங்கோ ரொம்ப அலட்டிக்காதேங்கோ. ரத்தக் கொதிப்பு (Blood Pressure) வந்தூடும்.

அய்யர்: Blood Pressure ஆ! ஒரு வியாதியும் எங்கிட்டவராதூனு! என் வயசு என்ன இருக்கும்னு நெனைக்கிறேள்! பத்துக் குழந்தை பெத்துருக்கேன்; நாளை மாசம் பொரந்தா பதினொன்னு ஆச்சு! நெனச்சா நிமிஷத்துலே ஆபீஸுக்குப் ஸைக்கிள் பண்ணின்டே போயிடுவேன். பாரும் (என்று கையை மடக்கி மஸில்ஸ் Muscles பலத்தைக்காட்டி கச்சம்கட்டி ஒரு அந்தர் அடித்துத் தலைகீழாய் சற்று நிற்கிறார்)

புது மனிதர்: ஸார், ஸார்! இதென்ன கொடல் எங்கேயாவது சொருகிக்கப் போறது, போரும் ஸார்!

(அய்யர் நிதானமாய் ஸோபாவில் உட்கார்ந்துகொண்டு பெண்ணைப் பார்த்து)

நாகம், நீ போய், மேலே இன்னிப் பாடத்தை வாசி; டயத்தை வீணாக்காதே!

புது மனிதர்: அய்யர்வாள்! ஒரு வார்த்தை; எவ்வளவு வாத்யார், எவ்வளவு ட்யூஷன்! என்ன இது! கொழந்தைகளா, மெஷின்


# மாதவிடாய் நின்றிருந்தால்



குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்திரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத் தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 பிரத்யேகம்)

**Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)**
Tollygunge, Calcutta.

*Available also from :—*

(1) HARRY & SON, 93, China Bazar Road, Madras.
(2) RAJA MEDICAL HALL, 31, Dharmaraja St., Bangalore Contt.
(3) NATHAM & CO. Mattancheri, Cochin.
(4) K. C. MATHEW & Co., Kozhancheri, Travancore.

(Machine) களா! விடாம முடிக்கிண்டே இருக்கேளே! இவ்வளவு கெடுபுடி கூடாது.

அய்யர்: சரி நீங்க வந்த காரியத்தைச் சொல்லுங்கோ.

புது மனிதர்: சமயம் நன்னா இல்லே போல இருக்கு! நீங்க ரொம்ப 'Excited' ஆ இருக்கேள். அப்பரம் வேணும்னா வரேனே!

அய்யர்: அதெல்லாம் புதிசா இன்னிக்குனு ஒண்ணுமில்லேனா, சொல்லுங்கோ.

புது மனிதர்: நமக்கு ஒரு பொண்ணு கல்யாணத்துக்கு இருக்கா; ஒங்க மூத்தபுள்ளைக்கு கொடுக்கலாம்னு வந்தேன். பொண் படிச்சிருக்கா! காலேஜுலே மெடல் வாங்கினவ.

அய்யர்: மெடல் வாங்கிருக்காளா! தெரியுமே! வாங்கித்தானிருப்ப; நம்ப ஆத்துக்கு வரதெல்லாம் சோடயா இருக்கவே இருக்காதுன்னு அப்பவே நான் சொன்னேனே!

(இதற்குள் பூட்ஸ் படபடவென்று சப்தம் கேட்க பெரிய பையன் வருகிறான்.)

நல்ல சமயம் ஸார்! பேசிண்டிருக்க போதே மாப்பிளைப்புள்ளையாண்டான் வந்துட்டான்! டேய்! ராஜம், நீ இவர் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப்போரே!

ராஜம்: தீர்மானம் ஆயிடுத்தா?

புது மனிதர்: அய்யர்வாள்! அவசரம் வேண்டாம்; கொழுந்தைகள் ஒத்தரை ஒத்தர் பாக்கட்டும்; பாத்துப் புடிச்சாக வேண்டாமா?

அய்யர்; பாக்கவாவது, புடிக்கவாவது! இவனைக் கேட்டுண்டுதான் இவனுக்குப் படிப்புக்காக 10,000 செலவு செய்திருக்கேனா? பண்ணிக்கோன்னா, பண்ணிக்கல்லேன்னா, எனக்குப் புள்ளையா அவன்? ஏண்டா, என்னைமீறி சொல்லப்போராயா என்ன? என் புள்ளையாயிருக்கிறதுனாலே தானே இந்த சம்பாதிக்கிற 'ஜீனியஸ்' உனக்கு வந்திருக்கு.

ராஜம்: ஜீனியஸ் எல்லாம் அததுக்குத் தானா வரது; அப்பாகிட்டேந்து வருவானே?

அய்யர்: என்ன சொன்னே? இதோ சொத்தில்லாமே 'disinherit' பண்ணி, அடிச்சு வெளியே தள்ளுவேன்.

(என்று அய்யர் ஆவேசத்துடன் எழுந்திருக்கிறார்.)

புது மனிதர்: அய்யர்வாள், அமைதியாயிருக்கணும்; ஒக்காருங்க. இதென்ன புள்ளையோடு இப்படியா வாக்குவாதம் பண்ணுவா?

அய்யர்: இல்லே ஸார்; எனக்கு அன்புனாலும் ஸரி, கோபம்னாலும் ஸரி, ஒரேடியாய் வந்துடரது.

புது மனிதர்: அப்படிக் கூடாதுன்னா; அதியா ஒண்ணையும் பண்ணக்கூடாது? ஒரே 'tension'லே எம்போபாத்தாலும் 'விண்'ணு இருந்துண்டே இருக்கப்படாது; கொஞ்சம் தளத்தி, விட்டுப்புடிச்சாப்பலே இருக்கணும்; lifeலே ஒரு light touch வேணும்; ஒண்ணையும் ரொம்ப புடிச்சுண்டு தொங்கப்படாது; எதை ரொம்பப் பெரிசா நெனச்சுண்டுருக்கோமோ, அதிலேயே ஈச்வரன் நம்மை சோதனை செய்வான்! நீங்க கொஞ்சம் நிதானப்படுத்திக்கோங்க. நான் அப்பரம் வரேன். இதோ என் அட்ரஸ் இருக்கர கார்ட் (card), வச்சுக்கோங்கோ' வரேன்.

(என்று தன் visiting card-ஐ கொடுத்து விட்டு 'இந்தப் பைத்யத்தை யார் கட்டிக் கொண்டு மாரடிப்பது?' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு வந்த புது மனிதர் போய் விட்டார். அய்யர், விஸிடிங் கார்டையும் போகும் மனிதரையும் பார்த்துப் பார்த்துத் திகைத்து நிற்கிறார்.)

அய்யர்: (தனக்குள்; கார்டைப் பார்த்துக் கொண்டே) டாக்டர் நிதானம்! ஆகா! என்ன சான்ஸ் (chance) தவறிப்போயிடுத்து; கொழுத்த வரும்படிக்காரர். ஸரி, கொஞ்ச நாள் கழித்து மூன்றாம் மனிதரை அனுப்பி இந்த சம்பந்தத்தை முடிக்கல்லேனா, என் பங்களாபேர் 'மேதா விலாஸம்' இல்லே.

— 2 —

(பல வருஷங்களுக்குப் பிறகு டாக்டர் நிதானம் அவர்களின் வீடு; காலையில் கடிதமொன்றை டாக்டர் தன் பக்கத்திலுள்ள நண்பர் ஒருவரிடம் படித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்.)

டாக்டர்: கொஞ்சம் இந்த லெடரைக் கேட்டுட்டு போங்க...............

"டாக்டர் நிதானம் அவர்களுக்கு நமஸ்காரம். என்னைத் தங்களுக்கு ஞாபகமிருக்குமென்று நினைக்கிறேன். இன்று பல வரு

ஷங்களுக்குமுன் தாங்கள் என் வீட்டிற்கு வந்து, என் முதல் புதல்வனுக்குத் தங்கள் புதல்வியைக் கொடுக்கலாமென்று யோஜித்தது ஞாபகமிருக்கலாம். ஆனால் தெய்வம் நம் மிருவரையும் சேர்த்து வைக்கவில்லை; நான் பின்பு தங்களுக்குப் பலதடவை மனிதரை அனுப்பியும் தாங்கள் என்னைப் பொருட்படுத்தாதது அன்று எனக்கு அவமானமாயிருந்தாலும், இன்று புத்திமதியாயிருக்கிறது. அன்று தாங்கள் என்னை விட்டு எழுந்து போகும்போது கடைசியாய்ச் சொன்ன வார்த்தைகளை நான் இன்று ஹிதோபதேசமாய் கௌரவிக்கிறேன். "ஒன்றையும் பிடித்துக்கொண்டு அதிகமாய் தொங்கக்கூடாது; எதில் பலமாய் ஆசை வைத்தோமோ, அதிலேயே ஈச்வரன் நம்மைச் சோதனை செய்வான்." ஆகா! தாங்கள் கேவலம் சரீர வியாதிகளின் வைத்யர் மட்டுமல்ல; மனோவியாதியின் மருந்தைத் தெரிந்த ரிஷி!

நான் பிடித்துத் தொங்கிய என் genius குழந்தைகளெல்லாம் ஒன்றொன்றும் எவ்விதமெல்லாமோ வளர்ந்து என்னுடன் பகைப்பட்டு, அதது தனித்தனியே பிரித்துக்கொண்டு போய்விட்டன; மனைவியும் 'குழந்தை-மிஷி'னை மடிந்தாள். இதையெல்லாம் நினைத்ததால் எழுந்த ரத்தக் கொதிப்பினால் ஜுரம் வந்துகிடக்கிறேன். சமையற்காரியும், தோட்டக்கார சோமுவும்தான் பந்துவாய் நிற்கிறார்கள். என் குருவாயும் பந்துவிலும் பந்துவாயும் தோன்றும் தங்களை நான் மறக்கவே இல்லை; தாங்கள் இச்சமயம் என்னை வந்து பார்த்துவிட்டுப்போனால், எனக்குப் புனர் ஜீவன் வந்தது போலாகும்."

நண்பர்: பாவம்! யார் ஸார், இவர்?

டாக்டர்: நானைச் சொல்லுகிறேன்; இனி அவரைக் காணாமல் இருக்க முடியாது. "ஜீனியஸ்—அப்பாவே! நண்பரே! 'மேதா விலாஸ'க்கோளாரின் முடிவு இப்படி ஆகும் என்று எனக்குத்தெரிந்தே அன்று உமக்கு அந்த உபதேசம் செய்தேன்..............

குரங்குப்பிடி எதிலும் வேண்டாம்......... லேசாய் தொட்டதும் தொடாததுமாய் இருக்கவேண்டும்............

அதுதான் "வாழ்க்கை யோகம்"

---


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

**டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

# காலேஜ் கர்வம்

சாரி

"ஸரோஜ்! நீ பிச்சுக்கு வரவில்லை? நாங்களெல்லோரும் தயார், அம்மா; உன்னுல்தான் தாமதம்" என்று சொல்லிக் கொண்டே தங்கம் உள்ளே நுழைந்தாள்.

"ஓ, வராமல் இந்தப் புழுக்கத்தில் 'ரூமில்' என்ன செய்கிறது? பரிக்ஷைக்குப் படித்துப் படித்து மூளையே கொதித்துப்போய்விட்டது. மாலையிலாவது சற்று நல்ல காற்றில் போய்வர வேண்டாமா?" என்று பதில் சொன்ன ஸரோஜா, சுவரில் இருந்த கண்ணுடியில் தன் முகத்தைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

———பெண்கள் கலாசாலையின், மாணவிகள் விடுதியில் ஓர் அறையில் இச்சம்பாஷணை நடந்தது. இவர்கள் கிளம்புவதற்குள், இன்னும் பத்துப்பன்னிரெண்டு பெண்கள் விதவிதமான ஆடையலங்காரத்துடன் அங்கு வந்து கூடினுர்கள். யாவரும் 'பீச்சு'க்குப் புறப்படும் அவசரம்; பேச்சும் சிரிப்பும் அறையைப் பிளந்தது.

"ஸரோஜ், இன்று ஏன் முகம் ஒருமாதிரி இருக்கிறது?"

"ஓ எனக்குத் தெரியுமடி! அவளுக்கு யாரோ........."

"சீச்சி. அதெல்லாமில்லை. எனக்குத் தெரியும், எவ்வளவு நேரம் படித்தால் இந்த பி. ஏ. பரிக்ஷையில் ராஜதானிக்கு முதன்மையாகத் தேறலாமென்று யோசித்ததில் அவளுக்கு மூளை குழம்பும் போலிருக்கிறதாம்."

"கவலைப்படாதே, அம்மா! எங்கப்பா ஜோசியத்தில் நிபுணர்; நான் வேண்டுமானுல்............"

இவ்விதம் ஆளுக்கொன்ருகப் பேசினர். "ஓ இன்னிக்கி ஊரிலிருந்து ஏதோ கடிதம் வருமென்றும், பரிக்ஷைக்குப் பணம் கட்ட மணியார்டரை எதிர் பார்ப்பதாகவும் சொல்லிக்கொண்டிருந்தாள். அது வரவில்லை போலும். ஏன் ஸரோஜ், அப்படித்தானே?" இவ்விதம் கேட்டது தங்கம்தான்; இதுவே உண்மைக்காரணம் என்பதும் அவளுக்குத் தெரியும்.

இந்தப் பெண்கள் இருவருக்கும் நெடுநாளைய நட்பும் பழக்கமும் உண்டு. ஓர் ஊரிற் பிறந்து வளர்ந்து, 4 வருட முன்பு ஒரே நாளில் கலாசாலையிற் சேர்ந்தவர்கள்; ஒரே வயது, இருவரும் ஒரே வகுப்பு, பிரிவு. மேலும் கலாசாலை விடுதியில் சென்ற நான்கு வருடமாய் ஒரே அறையில் வசித்த தனிப் பழக்கமும் இவர்களுக்கு ஒரு அலாதிப் பற்றுதலைக் கொடுத்தது.

ஆனுல் ஒரு விஷயத்தில் இருவரும் மிக்க வித்யாசப் பட்டனர். அது அவர்களின் கல்வியறிவு சம்பந்தமானது. சரோஜா மிக்க கெட்டிக்காரி. எல்லா வகுப்பிலும் அவள் தான் முதல் ஸ்தானம் வகிப்பாள். பரிக்ஷைகளில் முதலில் தேறி, அதற்கேற்பட்ட தங்கப் பதக்கங்களை அனுயாசமாக அடித்துக்கொண்டு போவாள்.

தங்கமோ இதற்கு முற்றிலும் மாருனவள். பரிக்ஷைகளில் உயர்வகுப்பில் தேறிப் புகழ்பெறும் கெட்ட வழக்கம் அவளிடம் கிடையாது. ரொம்ப மந்தபுத்தியுள்ளவளும் இல்லை; ஆகவே கலாசாலையில் தவருமல் நான்கு வருடங்களைக் கழித்துவிட்டாள்.

மற்ற அம்சங்களில் தங்கத்தின் புத்திசாலித்தனம் குறிப்பிடத்தக்கது. ஸதா சிரிப்பும் விளையாட்டும், அவளை இணைபிரியாத தோழிகள். அதோடு மனிதருடன் வாஞ்சையுடன் பழகுவதும் இயற்கைக் குணமாக அமைந்தவள்.

மாணவிகள் கலகலப்பாய்ப் பேசிக் கொண்டே கடற்கரையை அடைந்தார்கள். இவர்களைப்போல் அநேக மாணவ மாணவிகள் அங்கே கூட்டம் கூட்டமாய் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். சற்றே இவர்களை விட்டு விலகி உட்கார்ந்த ஸரோஜா தங்கத்தை நோக்கி "உண்மையில் எனக்குப் பயமாக இருக்கிறதடி; இன்று கடிதம் வராமற்போனுலும், மணியார்டராவது நிச்சயம் வந்திருக்கவேண்டும். நாளைக்கே பரிக்ஷைப் பணம் கட்டவேண்டிய கடைசித் தவணை என்பதை வற்புறுத்தி அப்பாவுக்கு எவ்வளவு கடிதமெழுதினேன்! இவ்விதம் செய்துவிட்டாரே" என்று அங்கலாய்த்தாள்.

"அவர் அனுப்பியிருப்பாரடி; தப்பிதம் தபாலாபீஸின் பேரில்தானிருக்கவேண்டும். ஒரு வேளை நாளைத் தபாலில் வரலாம் அல்லவா?"

"நாளைக் காலையில் எல்லோரும் பணம் கட்டும்பொழுது நானென்ன செய்வேன்? எனக்குப் பணம் வரவில்லையென்று எப்படியடி சொல்லுவது?"

"கஷ்டம்தானடி ஸரோஜா. என் கையில் ரூ. 66—10—0 இருக்கிறது. நீ வேண்டுமானால் அதை உன் பரீக்ஷைக்கட்டணமாக நாளைக்குக் கட்டிவிடு. பிறகு மணியார்டர் வரும்பொழுது எனக்குக் கொடு."

"ரொம்ப அழகுதான், தங்கம். பணமே எனக்கு வராமற்போனால் உன் பரீக்ஷையின் கதி என்ன?...—... ஆனால் எனக்கு இதைவிட இப்பொழுது வேறொரு கவலை தான் பெரிதாகத் தோன்றுகிறது. ஒரு சமயம் எங்கப்பாவுக்கு உடம்பு ஏதாவது சரியாகஇல்லையோ என்று பயப்படுகிறேன். அம்மா ஒண்டிக்காரி என்ன செய்வாள்?"

"அடே, ரொம்ப மூளைக்காரியென்பதைக் காண்பித்துவிட்டாயே? ஒரு கடிதம் வரச் சற்று காலதாமதமானால் இவ்வளவு விபரீதக்கற்பனை செய்யும் மூளை மேதைக்கே என்று அறிவிக்கிறாயாக்கும்" என்று தங்கம் நகைத்தாள்.

இது காதில் விழுந்ததும் சற்று எட்டி உட்கார்ந்திருந்த மற்ற மாணவிகளும் நகைத்தார்கள். ஸரோஜாவுக்கு வெட்கமாய் இருந்தது. அதை மறைக்க நினைத்து, முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சுமார் ஐந்து நிமிஷம் ஸரோஜாவை ஒருவரும் தொந்தரவு செய்யவில்லை. திடீரென்று விமலா என்கிற பெண் "ஸரோஜ், ஸரோஜ், தலை நிமிர்ந்து இந்த வேடிக்கையைப் பாரேன். இவ்வளவு புராதன ஜனங்களைச் சென்னைக் கடற்கரையில் இதுகாறும் நீ கண்டிருக்கமாட்டாய்" என்று கத்தினாள்.

ஸரோஜா தலை நிமிரவில்லை. தன்னைக் கேலிசெய்து ஏமாற்றப் பார்க்கிறார்களென்று நினைத்துக்கொண்டாள். இதற்குள் ராதா என்னும் மாணவி, "இதென்னடி! இவர்கள் நிச்சயமாய்ப் பதினைந்தாம் பசலி ஜனங்களாக இருக்கவேண்டும். ஏதாவது கண்காட்சி சாலையிலிருந்து உயிர்பெற்று எழுந்து ஓடிவந்துவிட்டனரோ?" என்று இடி இடியென்று சிரித்தாள்.

தங்கம் "இதற்கெல்லாமா இவ்விதம் சிரிப்பது? சற்றுப் பழையகாலத்து ஜனங்கள், அவ்வளவுதான்..." என்றவள் பேச்சை முடிக்காமல், "அடே எனக்கு இவர்களைத் தெரியும்போலிருக்கிறதே! ஸரோஜ்! இதோ பார். ஊரிலிருந்து......" என்ற வண்ணம் பரபரப்புடன் தன் தோழியைப் பிடித்து அசைத்தாள்.

இந்த அமளியில், ஆவல் பொறுக்கமுடியாத ஸரோஜாவும், தலை நிமிர்ந்து இவர்கள் பார்க்கும் திசையில் தானும் நோக்கினாள். அவளது கண்கள் ஆச்சரியம் தாங்காமல் விரிந்தன.

"ஆம், இவர்களை நமக்கு நன்றாகத் தெரியுமே? ஒரு கட்டை மரத்தில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தது தனது மாமா முத்துவையர் அல்லவா? பயபக்தியுடன் சற்றுத் தூரத்தில் கன்னத்தில் கைபதித்து அமர்ந்திருந்தது அவரது தர்மபத்னி ராஜம் மாமி! இவர்கள் எப்படி இங்கு வந்தார்கள்?"

சில நிமிஷத்திற்கு பந்துக்களின் எதிர்பாராத தரிசனத்தில் ஏற்பட்ட ஆனந்தம் அவளிடம் குடிகொண்டது. அவர்கள் இருந்த திசையையே திகைப்புடன் நோக்கினாள். இதற்குள், இந்தப் பெண்களைக் கவனித்த கிழத் தம்பதிகள் ஸரோஜா தங்கள் பக்கம் பார்க்கவும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டனர். பிறகு சற்று அவசரத்துடன் தங்களது ஒரு துணி மூட்டை, பித்தளைக் கூஜா இவைகளைப் பொறுக்கிக்கொண்டு, சிரமத்துடன் எழுந்தார்கள். இவ்வளவு தொலைவிலிருந்தும், கவலை தீர்ந்ததென்கிற நிம்மதியின் குறியை அவர்கள் முகத்தில் காண முடிந்தது.

"ஸரோஜ், ஸரோஜ், அங்கே பாரடி! அந்தக் கிழங்கள் இரண்டும் உன்னை நாடித்தான் வருகிறார்கள். யாரடி இவர்கள்? இந்த அழகான உறவினரை எங்கேயடி கண்டுபிடித்தாய்?" என்று தோழிகள் இவளைக் கேலிசெய்து நகைத்தார்கள். ஸரோஜாவுக்குப் பொறுக்க முடியவில்லை.

முத்துமாமா, ராஜம் மாமி இவர்கள் பேரில் கோபம் மூண்டு எழுந்தது. என்ன பைத்தியங்கள் இவர்கள்? இவ்வேளையில் இங்கே தோன்றி ஏன் தனக்கு அவமானத்தைக் கொண்டுவரவேண்டும்? தோழிகளிடம் தன் உறவினர் இவர்கள் என்று ஒத்துக்கொள்வதைவிட வெட்கத்தினால் பிராணனை விடுவதே மேல் என்று அச்சமயம் நினைத்தாள். தனக்குப் புறம்பான ஓர்

அசட்டுத் தைர்யத்துடன், "சிச்சி, என்னைப் பார்க்க ஒருவரும் வரவில்லை. இந்தக் கிழங்களை இதற்குமுன் நான் கண்டதேயில்லை, ஏதோ யாசகம் கேட்க நம்மை அண்டிவரும் பிச்சைக்காரர்களாயிருப்பார்கள்!" என்று அலக்ஷியமாய் மொழிந்தாள்.

இதைச் செவியுற்ற தங்கம் திகைத்துப் போனாள். "என்னடி இது. முத்து மாமா......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் ஸரோஜாவின் முகக் குறியைக் கண்டு அஞ்சியவளாய் மேலே பேசவில்லை. வாயை அடக்கிக்கொண்டாள்.

இரண்டு நிமிஷத்திற்குள் இவை யாவும் நடந்தன. கிழத்தம்பதிகள் மாணவிகளை நோக்கி மெல்ல நடந்துவந்தனர். புதை மணலில் அவர்களது பிரயாணம் மிக்க சிரமத்துடன் கூடியதாய் இருந்தது.

இதைக் கவனித்ததும் ஸரோஜா அவசரமாக எழுந்தாள். "நீங்களெல்லோரும் சற்று நேரம் இருந்துவிட்டு வாருங்கள். எனக்குத் தலைநோய் பொறுக்க முடியவில்லை; நான் போய்ப் படுக்கப்போகிறேன்" என்று சொல்லி விரைவாக நடந்து சென்றாள்.

இருட்டும் தருணம், மற்றவர்க்கும் அங்கே தாமதிக்க விருப்பமில்லை. மேலும் ஸரோஜா இன்று ஒரு வகையாக நடந்துகொண்டது அவள் தோழிகளின் வழக்கமான உத்சாகத்தைக் குறைத்து விட்டது. ஒவ்வொருவரும் மனத்தில் இதன் காரணத்தை ஆராய்ந்தவராய், கூடவே தொடர்ந்தார்கள்.

"ஸரோஜா, ஒரு 'ஆஸ்பிரின்' சாப்பிடு, தலைவலி சரியாகிவிடும்." என்றாள் ஒருத்தி.

"இரவில் வெகு நேரம் படிக்காதே. உடம்புக்கு ஆகாது" என்றாள் இன்னொரு தோழி. இவ்விதம் தங்களுக்குத் தெரிந்த வைத்யத்தை ஸரோஜாவிற்கு உபதேசித்த வண்ணம் மாணவிகள் நடந்தார்கள்.

தங்கம் மட்டும் மௌனம் சாதித்தாள். அவள் வாயிலிருந்து ஒரு சொல்லும் கிளம்பவில்லை. உண்மையில் ஸரோஜாவுக்கு என்ன நேர்ந்திருக்கக்கூடுமென்று தெரியாமல் விழித்தாள். "என்ன அநியாயம்! பந்து ஜனங்கள், சிறு குழந்தைமுதல் எடுத்து வளர்த்த மாமா, மாமியைத் தான் கண்டதேயில்லை என்று சாதிக்கிறாளே! அதுமட்டுமன்றி, அவர்கள் பிச்சைக்காரர்கள் என்றுமல்லவா கூறத் துணிந்தாள்? உண்மையில் இவளுக்குத் திடீரென்று புத்தி பேதலித்திருக்கவேண்டும்; அல்லது இதுகாறும் நான் காணாத துர்க்குணங்கள், இவளுக்கு இயற்கையில் நிரம்பி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறு நடந்துகொள்ளத் துணிவாளா ஒரு பெண்?" என்று சிந்தித்தாள். தோழியின் முகத்தை ஓரிரண்டு தடவை குறிப்புடன் நோக்கினாள். இவள் பக்கம் ஸரோஜா திரும்பினால் தானே?

விடுதியும் சமீபித்துவிட்டது. மாணவிகள் பேச்சை நிறுத்திக்கொண்டு வெவ்வேறு திசையில் பிரிந்து சென்றனர். ஸரோஜா கொஞ்சம் தயங்கினாள். தன்னை ஒருவரும் கவனிக்கவில்லையென்பதைத் தெரிந்துகொண்டு, மெல்லப் பின்னால் திரும்பிப் பார்த்தாள். மாமா, மாமி பின்தொடரவில்லை. தொலைவில் இவளையே குறிப்பாய்ப் பார்த்த வண்ணம் அசைவுற்று அவர்கள் நின்றநிலை, நிராசையைக் குறித்தது. ஸரோஜாவின் உள்ளத்தில் ஒரு கண நேரம் பரிதாப உணர்ச்சி பெருகிற்று. மனம் இளகி இரண்டடி பின்னால் வைத்தாள். ஆனால் திடீரென்று மனம் மாறியவளாய்ச் சமாளித்துக்கொண்டு விடுதியை நோக்கிச் சென்றாள்.

அச்சமயம் அவளுக்கிருந்த கோபத்தில் தான் செய்தது தப்பிதம் என்கிற உணர்ச்சியே ஏற்படவில்லை. "இவர்களை யார் இப்படி அசட்டுத்தனமாய், சொல்லாமல் கொள்ளாமல் வரச்சொன்னது? நன்றாய் வேண்டும் கிழங்களுக்கு. இன்றிரவே திரும்பி காரக்குரிச்சிக்குப் போகட்டும். என்ன தைரியத்தில் இங்கே வந்தார்கள்? இவ்வளவு நாகரிகமான என் தோழிகளின் மத்தியில் இந்த கிராமாந்தரக் கிழங்களை எவ்விதம் வரவேற்பது, என் உறவினர் என்றுதான் எப்படிச் சொல்லிக்கொள்வது? நல்ல லஜ்ஜைக் கூத்து!" என்று மனதில் அவர்களைக் கடிந்து கொண்டாள்.

நல்ல குணவதியான பெண்ணையும்கூட அசட்டுக்கர்வம் எவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டியது, பாருங்கள்.

மறுதினம் காலையில் விடுதியில் எங்கும் அமைதியாக இருந்தது. பெரும்பான்மையான மாணவிகள் பகல் நேரத்தைப் பரீக்ஷைக்குப் படிப்பதில் கழித்தனர்.

தங்கமும் ஸரோஜாவும் முன்தினம் மாலை கடற்கரையில் சம்பாஷித்ததுதான்; மௌனமாய் இரவுச் சாப்பாட்டை முடித்துக்

கொண்டு படுக்கச் சென்றார்கள். ஆனால் தூக்கம் கொள்ளவில்லை. ஸரோஜா கட்டிலில் புரளுவதையும், அடிக்கடி பெருமூச்சு விடுவதையும் தங்கம் கவனித்தாள். ஒரு முறை தோழியைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டும் பார்த்தாள். பதிலே இல்லை. தன்னிடம்கூடச் சொல்லாமல் ஏன் அவள் தனிமையில் சங்கடப்படவேண்டும் என்று தங்கத்திற்கு அங்கலாய்ப்பாக இருந்தது. ஆனால் தன்னை நெருங்க விடுவதில் ஸரோஜாவுக்குப் பிரியமில்லை யென்பதைத் தெரிந்துகொண்டு, மறுபக்கம் திரும்பிப் படுத்து, நித்திரை போனாள்.

விடியற்காலையில் எழுந்த ஸரோஜா, தன் வேலைகளை முடித்துக்கொண்டு மேஜையருகில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவள் சினேகிதி கண் விழித்த சமயம் இந்தக் காட்சி அவள் கண்ணிற்பட்டது. அன்பாக அவளிடம் சென்று விசாரிக்க மனம் தூண்டிற்று; முதல்நாளிரவு தன்னைப் புறக்கணித்ததை நினைவில் கொண்டு, தங்கம் அவளை அணுகாமலே தன் காரியங்களைக் கவனித்தாள்.

ஸரோஜாவின் மனம் ஒரே சஞ்சலத்தில் முழுகியிருந்தது. பெரும் கவலைகள் இரண்டு மனத்தை வாட்டின. இன்று தபாலிலும் பணம் வராவிட்டால், பரீக்ஷைக்கு எவ்வாறு பணம் கட்டுவது என்பது ஒரு புறம்; முத்து மாமாவும் ராஜம் மாமியும் என்ன ஆனார்களோ என்கிற திகில் இன்னொரு புறம். வாய்விட்டு அழுதால் தன் துக்கம் குறையும் போலிருந்தது அவளுக்கு!

"தங்கம், இந்தா, உனக்கு இரண்டு கடிதங்கள்" என்று கத்திக்கொண்டே விமலா உள்ளே நுழைந்தாள். உரியவரிடம் கடிதம் போய்ச் சேர்வதற்குள் "எனக்கொன்றுமில்லை?" என்று கேட்டவண்ணம் ஸரோஜா அவளை நெருங்கினாள்.

"உனக்கும் ஒரு கடிதமிருக்கிறதடீ, ஸரோஜ், இல்லாமலிருக்குமா?" என்று பதிலுரைத்தாள் விமலா.

இந்த விளையாட்டுக்கூட ஸரோஜாவுக்குப் பொருக்கவில்லை. தன் கடிதத்தை அவள் கையினின்று பிடுங்கிக்கொண்டு, மேஜையருகில் அமர்ந்து, அவசரத்துடன் உறையைக் கிழித்துப் படிக்கத் துடங்கினாள்.

சுபம்

காரைக்குரிச்சி,
தைமீ 21 ஆந் தேதி.

ஸ்ரீமதி கோந்தை ஸரோஜாவுக்கு ஆசீர்வாதங்கள். நீ சௌக்யமாயிருப்பா யென்று




பாரதநாட்டுப் •
பெண்களின் •
அணிகலன் •

நீண்டு கறுத்த கேசம்

★

இதற்கு இன்றியமையாதது

ஜாப்கோ
ஹேர்குரோயர்

சிறந்த மூலிகைகளைக் கொண்டு
தயாரிக்கப்பட்டது.

நம்புகிறேன். பரீக்ஷை நெருங்கிவிட்டது. சிரத்தையுடன்படி; ஆனால் இரவில் அதிக நேரம் கண்விழித்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. சூடு தணிய எண்ணெய் தேய்த்துக்கொள்ளு. இரவில் பால் சாப்பிட மறக்கவேண்டாம். உன் தாயார் இதெல்லாம் எழுதச்சொன்னாள்.

பரீக்ஷைக்குப் பணம் கட்டவேண்டிய கடைசித்தேதி நாளைக்கு என்று நீ எழுதிய கடிதம் இப்பொழுதுதான் என் கைக்குக் கிட்டியது. கையில் பணம் கொஞ்சம் போரவில்லை. சேகரித்து இன்று தபாலில் மணியார்டர்செய்யச் சாவகாசம் இல்லை. ஆனால் நாளைக்குள் பணம் உன் கைக்கு வந்துசேர ஒரு யுக்தி செய்திருக்கிறேன். வெகு நாளாய் முத்துமாமாவும், ராஜம் மாமியும் சென்னையைப் பார்க்க ஆசைப்பட்டது உனக்குத் தெரியும். நீயும் படிப்பு முடிந்து அங்குவிட்டுப் புறப்பட்டுவிட்டால் அவர்களுக்குத்தான் யார் எல்லாவிடங்களையும் சுற்றிக் காண்பிக்கப்போகிறார்கள். ஆகவே உன் பரீக்ஷைக்குக் கட்டவேண்டிய பணத்தை அவர்கள் கையில் தந்து, இன்றிரவு ரயிலில் அவர்களை அங்கே அனுப்புகிறேன். நாளை மாலை மூன்று மணிக்கு அங்குவந்து சேருவார்கள்.

அவர்கள் பட்டணத்தை முன்பின் கண்டதில்லை. ஆகவே நீ ரயிலடிக்குச்சென்று அழைத்துவரவேண்டும். மாமியை ஹாஸ்டலில் உன்னுடன் வைத்துக்கொள்ளு. மாமாவுக்குமட்டில் வெளியில் ஓர் அறை அமர்த்தி அங்கே இருக்கச்செய். மாமிக்கு அங்கே ஆசாரம் போராது. ஆகையால் உன் அறையில் ஓர் ஓரமாய்ச் சமையல் செய்துகொள்ளட்டும்.

கோந்தே, நீ எல்லாம் தெரிந்தவள். மாமாவும் மாமியும் உன்பேரில் அளவற்ற வாஞ்சை வைத்திருப்பதுஉனக்குத்தெரியும். அவர்களை அன்புடன் உபசரித்து பட்டணத்தில் மீன் காலேஜி, செத்த காலேஜி, உயிர்காலேஜி எல்லாம் கொண்டுபோய் காண்பி. தள்ளாத வயதில் அவர்களது ஆசையைத் தடுக்க மனமில்லை. ஆகவே ஒரு நிதிபோல் அவர்களை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். பத்திரமாக ஒருவாரத்தில் அவர்களைத் திருப்பியனுப்புவது உன்பொறுப்பு. அலக்ஷியமாக இராதே. அவர்கள் ஆசிர்வாதம் உனக்கு வேண்டும்.

இதையெல்லாம் எழுத என்ன அவசியமிருக்கிறது? மாமா மாமியைச்கண்டதும் எங்களையே கண்டதுபோல் நீ சந்தோஷிப்பாய் அல்லவா?

நீ எப்பொழுது ஊருடன் வந்து சேருவாயென்று எதிர் வீட்டுச் கப்புத்தாத்தா தினமும் விசாரிக்கிறார்.

வேணும் ஆசீர்வாதம்
உன் தந்தை
சுப்பிரமணியன்.

கடிதம் நேற்றே வந்திருக்கவேண்டியது! ஒருநாள் தாமதித்து வந்திராவிட்டால் அனுவசியமான எவ்வளவு துன்பங்கள் லாபமாயிருந்திருக்கும்? இதுவும் விதியின் கூற்றே. கடிதத்தைப் படித்து முடித்த ஸரோஜாவுக்கு உலகமே சுழன்றது. கண்ணீர் பெருகி எழுத்துக்களே தெரியாமல் மறைத்தது. அதன் வாக்கியங்கள் சம்மட்டியால் ஆணி அடிப்பதுபோல் அவள் நெஞ்சைப் பிளந்தன.

"தள்ளாத வயதில்" "ஒரு நிதிபோல்" "உன் பொறுப்பு" "எல்லாம் தெரிந்தவள்" இந்த வார்த்தைகளெல்லாம் அவள் கண் முன்னால் பெரும் எழுத்துக்களில் தோன்றிச் சுற்றிச்சுற்றி வந்தன. அவளையறியாமல் கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. மேஜை மீது தலையை மோதியவண்ணம் விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

தங்கம் தன் கடிதங்களைப் படிப்பதில் ஈடுபட்டிருந்ததினால் இவளைக் கவனிக்கவில்லை. அழுகைச்சத்தம் கேட்டு ஓடிவந்து, ஸரோஜாவைத் தாங்கிப்பிடித்தாள். துயரத்தின் போக்கைத் தடுக்கமுடியவில்லை. மெதுவாக அவளைக் கட்டிலில் கொண்டுபோய்ப் படுக்கவைத்து, "ஏம்மா, ஸரோஜா? ஊரில் யாருக்கென்ன? அழாமல் என்னிடம் சொல்லு." என்று கெஞ்சினாள்.

அழுகை ஓயவில்லை. அதோடு கீழே கிடந்த கடிதத்தைச் சுட்டிக்காட்டினாள். பிறகு ஒரு முறை பலமாகச் சிரித்தாள். கோந்தை ரொம்பத் தெரிந்தவள் அப்பா! என்ன செய்தாள் பாருங்கள்." என்று கூச்சலிட்டாள். மறுபடி அழுதாள்.

தங்கத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. எதற்கும் கடிதத்தைப் பார்க்கலாமென்று நினைத்து, அதை எடுத்து வாசித்தாள். அரைவாசி படிக்கு முன்பே அவள் மனத்திற்கு எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஸரோஜாவின் மடமைக்கு வருந்தினாள்.

தங்கத்தின் உலக அனுபவமும் சுவபாவமும் மிகவும் உயர்வானது என்பதை முன்பே குறித்தேனல்லவா? பாவம், நேற்று

விளையாட்டுப்புத்தியில் மாமா, மாமியைத் தனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டாள். பிறகு, இரவு முழுவதும் இதை நினைத்து அலட்டிக்கொண்டதில் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேளை அவர்களைக் கடற்கரையிற் கண்டது கூடப் பொய்யாக இருக்கலாகாதாவென்று எண்ணியிருப்பாள்! இந்தக்கடிதம் அந்த ஆசை வீண் என்பதைத் தெரிவித்திருக்கிறது. அந்த அதிர்ச்சி தாளாமல் 'ஹிஸ்டீரியா' என்கிற வியாதிக்கு உள்ளாகி விட்டாள். ஆனால் இதற்குப் பரிகாரம் எனக்குத்தெரியும். ஒரு நொடியில் இவளை ஏமாற்றி விடுகிறேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ஒரு மனோதத்துவ சாஸ்திர நிபுணருக்கும் இந்த யோசனை தோன்றியிராதென்பது திண்ணம்!

கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு நோயாளியைக் கடைக்கண்ணால் நோக்கினாள். அவள் அழுவதும், புரளுவதுமாயிருந்ததில் இவளைக் கவனிக்கவில்லை. நிதானத்துடன் மேஜைமீதிருந்த பேனாவைக் கையில் எடுத்து, கடிதத்தில் தை-மீ 21 இருந்ததை 22 என்று திருத்தி எழுதினாள். சற்றுக் கூர்ந்து நோக்கினால் திருத்தியுள்ளது தெரியக்கூடும்—ஆனால் தங்கம் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஒன்றுமே அறியாதவள் போல் "ஏண்டி ஸரோஜா அழுகிறாய்? கடிதத்தில் ஒன்றுமே இல்லையே? ஒரு வேளை மாமாவுக்கு இடம் அகப்படாதென்றுபயப்படுகிறாயோ? நான் வேண்டுமானால் பார்த்துத் தருகிறேன்" என்றாள். ஸரோஜா அழுகையை நிறுத்தி இவளைப்பார்த்து விழித்தாள் "என்ன தங்கம், உனக்குப் பைத்தியமா? அவர்களை எங்கேயடி போய்த் தேடுவது? நேற்றே இந்த ஊருக்கு வந்துவிட்டார்கள். நாம்கூட பீச்சில் காணவில்லை? ஐயோ பாவம்........." என்றவள் மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

தங்கம் அவளைத் தடுத்தாள். "நேற்று? உனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறது. கடிதத்தில் என்ன தேதி போட்டிருக்கிறதென்று கவனித்துப்பாரு."

"ஐயோ, இல்லையடி. இன்று 23ஆந் தேதி தானே?"

"ஆமாம் ஆமாம். யாரடி இல்லையென்றார்கள்? நேற்று 22ஆந் தேதியென்று ஒத்துக்கொள்கிறாயோ, இல்லையோ"

"நேற்றிரவு ரயிலில் மாமா மாமி கிளம்பினால், இன்று 23ஆந் தேதி மாலை 3 மணிக்கு இங்கு வருவார்கள்; அதையும் நீயே ஒத்துக்கொள்கிறாய். ஆகவே ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. நீ சற்று நிம்மதியுடன் தூங்கு; எழுந்தவுடன் ரயிலடிக்குப்போய் அவர்களை அழைத்து வருவோம்" என்றாள் தங்கம்.

ஸரோஜா ஒன்றும் புரியாமல் விழித்தாள். பிறகு "என்னடி புரளி பண்ணுகிறாய்? அந்தக் கடிதத்தை இப்படிக்கொடு" என்று அதைப் பிடுங்கிப் பார்த்தாள். தைமீ 22ஆந் தேதி என்று தீர்க்கமாக எழுதியிருந்தது! இருந்தும் அவள் விடவில்லை. "அப்படியானால் நேற்றுமாலை நான் அவர்களைப் பார்த்தேனேடீ" என்று பிரலாபித்தாள்.

"ஸரோஜ்! யாரோ இரண்டு யாசகம் வாங்கும் கிழங்களையல்லவா நீ கண்டதாகச் சொன்னாய்?"

"ஐயோ இல்லையடீ, என் கர்வத்தில் பொய் சொன்னேன். நேற்றுக் கண்டது மாமா மாமிதான். இதற்கென்ன சொல்கிறாய்?"

தங்கமா இதற்கெல்லாம் சளைத்தவள்? "ஸரோஜா, எனக்கு விளங்கிவிட்டது. Telepathy என்கிற சக்தியைப் பற்றி நீ கேட்டிருக்கிறாயல்லவா? அதே சக்தி, நேற்று உன் தந்தைக்கும் உனக்குமிடையில் ஒரு பாலத்தை யுண்டாக்கி, அவர் யாரைப் பற்றி உனக்கெழுதினாரோ அவர்களை முன் கூட்டியே உன் எதிரில் இங்குத் தோன்றச் செய்திருக்கிறது. இது நிச்சயம். சாவகாசத்தில் நாம் இதை ஆராய்ச்சி செய்ய வேண்டும். 22 ஆந் தேதி என்பதைக் கவனிக்காமல் நீ இவ்வளவு அலட்டிக் கொண்டாய்." என்று ஒருபோடு போட்டாள்!

ஸரோஜாவின் பலவீன நிலைமையில் இதைத் தடுத்து விவாதம் செய்ய அவளுக்குச் சக்தியில்லை. இப்படியும் ஒரு வேளை இருக்கக்கூடுமென்று அவளுக்கு அடிப்படையாக இருந்த ஆசை சொல்லிற்று. சற்று மௌனமாய்க் கண்களை மூடினாள்.

இந்த அமைதியைப் பயன் படுத்திக் கொள்ளத் தங்கம் சற்றும் தாமதிக்கவில்லை. ஓடிப்போய் ஒரு டம்ளர் நிறையப் பாலைக் கொண்டுவந்து ஸரோஜாவின் முகத்தின் அருகில் பிடித்தாள். ஒரு நாய்க்குட்டிபோல் அதைப் பருகியவள் சுவர்ப்பக்கம் திரும்பிப் படுத்து நித்திரை போனாள். அதிற் கலந்

திருந்த தூக்க மருந்து இன்னும் குறைந்த பக்ஷம் 4 மணி நேரத்திற்குத் தன் கடமையைச் செய்யும் என்பதைத் திண்ணமாக உணர்ந்த தங்கம், மெள்ள எழுந்து ஒரு பெருமூச்சு விட்டாள்.

சரி, இனி தாமதிக்காமல் கிளம்பி, போலீஸ் டேஷன்களுக்கெல்லாம் 'போன்' செய்து இந்தக் கிழங்களைத் தேடிப் பிடித்து இங்கே கொண்டுவந்து சேர்க்கவேண்டும். ஸரோஜா கண் விழிப்பதற்குள் அவர்களை இங்கே கொண்டுவந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்று எண்ணியவள், உடனே உடையணிந்து வெளியிற் புறப்பட்டுச் சென்றாள்.

அன்று மாலை $4\frac{1}{2}$ மணி இருக்கும். தண்டையார் பேட்டை போலீஸ்டேஷன் அருகில், முகத்தின் வியர்வையைத் துடைத்துக்கொண்டும், கைக் கெடிகாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டும் தங்கம் நின்றிருந்தாள். 'பஸ்ஸோ' 'டிராமோ' ஒன்றும் கிட்டத்தில் வரும் சின்னத்தைக் காணோம். தங்கம் பொறுமை இழந்தவளானாள்.

யாரோ கிழ தம்பதிகள் இங்கே இருப்பதாகக் கேள்விப்பட்டு, விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தாள். நேரில் பார்த்தால் ஒரு ஒட்டனும் அவன் மனைவியும் குடித்துவிட்டுப் போதையில் கண் திறவாமல் கிடந்தார்கள்! 'டாணா' உத்யோகஸ்தருக்குக்கூட தங்கத்தின் ஆத்திரத்தைப் பார்த்துச் சிரிப்பாக வந்தது. டெலிபோன் மூலமாகவே தீர விசாரித்த பிறகு வந்திருக்கக்கூடாதா வென்று, அனுதாபத்துடன் கேட்டார்! வீண் அலைச்சலும், கோபமும்தான் மிச்சம்.

இதோடு, ஸரோஜா கண்விழித்து என்ன அமர்க்களம் செய்கிறாளோ வென்கிற கவலை வேறு. கடைசியாக $4\frac{3}{4}$ மணிக்கு ஒரு 'டிராம்' வருவதைக் கண்டாள். அம்மாடி, பிழைத்தேன், 6 மணிக்காவது ஹாஸ்டலைக் கண்டுபிடிக்கலாம்' என்று நினைத்தவளாய்த் தங்கம் அதில் ஏறிக்கொண்டு கிளம்பினாள்.

அவள் வந்து சேர்ந்த சமயம் பெண்கள் கடற்கரைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர்; அங்கே ஸரோஜா தென்படவில்லை. தங்கள் அறைக்குச் சென்று பார்த்தாள்! அறை காலி! பெண்களும், பிற்பகல் முழுவதும் ஸரோஜாவைக் கண்ணிலேயே காணோம் என்றார்கள்.

தங்கத்திற்குத் திகில் பிடித்துக்கொண்டது. இந்தப் பெண் மோசம் செய்துவிட்டாள் போலிருக்கிறது; அவளிருந்த நிலைமையில் கடலில் விழுந்து பிராணனை விட்டிருப்பாள் என்று நினைத்தவளாய், கடற்கரைக்குத் தானும் ஓடினாள். பெண்களும் கூடவே சென்றனர்.

ஆனால் ஸரோஜாவுக்கு உயிரின்மேல் அஸாத்தியப் பற்றுண்டு. அப்படியெல்லாம் பிராணத்தியாகம் செய்கிறபெண் அவளில்லை!

சரியாக $3\frac{1}{2}$ மணிக்குக் கண் விழித்தாள். புத்தி மந்தமாக இருந்தது. சுவரில் இருந்த கடிகாரம் கண்ணிற்பட்டதும் ரயிலடிக்குச் செல்லவேண்டியது ஞாபகம் வந்தது. தங்கத்தைக் கூப்பிட்டுப் பார்த்தாள்; அவளைக் காணோம். உடலில் அலுப்பு அதிகமாக இருந்தது. அச்சமயம் அப்பாவின் கடிதம் கீழே கிடந்ததைக் கண்டாள். சோம்பலுடன், அதைக் கையிலெடுத்துப் பார்த்ததும் திடுக்கிட்டாள். தேதியைத் திருத்தி எழுதியிருந்தது தன்னைப் பார்த்துக் கேலி செய்வதுபோலிருந்தது! தங்கம் இம்மாதிரி தன்னை ஏமாற்றிவிட்டாள் என்பதை உணர்ந்தாள். மனம் பழையபடியும் பதட்டமடைந்தது.

இதெல்லாம் ஒரு கெட்ட கனவென்று எண்ணிக் கண் விழித்தேனே; என்ன பேதைமை? என்று எண்ணினாள். உடனே, மாமா மாமி இப்பொழுது எங்கே யிருப்பார்கள்? நேற்றெல்லாம் ஆகாரத்திற்கு என்ன செய்திருப்பார்கள்? என்று நினைத்ததும், தான் செய்த குற்றம் எவ்வளவு அருவருக்கத்தக்கதென்பதை மனம் இடித்துக் காண்பித்தது.

பாவம்! காரக்குரிச்சியைவிட்டு என்ன ஆவலுடன் புறப்பட்டிருப்பார்கள்? சிறு குழந்தையாக இருந்தபொழுது ஏன் இன்றளவும் விடுமுறை நாட்களில் ஊருக்குச் செல்லும்போதெல்லாம் — புழுங்கரிசிப் பழையமுதும் எருமைத் தயிருமாகக் கலந்து கீரைக்குழம்புடன் தனக்குப் பரிவோடு கையில் சாதம் போடும் மாமியின் அன்பை எண்ணி உருகினாள்.

மேலும் இந்தப் பெரியவர்களின் ஆசீர்வாதமே தன்னுடைய நலத்திற்கெல்லாம் காரணம் என்பதை அவள் பூர்ணமாக அறிந்திருந்தாள். சரி ஏதோ கெட்டகாலம் தான்; இல்லாமற்போனால் என்பேரில் அளவற்ற வாஞ்சையுள்ள இந்த எளிய ஆத்மாக்களின் வெளித்தோற்றத்தில் வெட்கி, வீண் கர்வம்

கொண்டு அவர்களைத் தவிக்கவிட்டிருப்பேனு? இனி வருந்தியும் பயனில்லை. சகல குற்றத்தையும் எடுத்துக்கொண்டு அப்பாவுக்கு ஒரு தந்தியடிப்பதென்று தீர்மானம் செய்தாள்.

ஆனாலும் ஒருக்ஷணம் மறுபடியும் கெட்ட எண்ணம் மனத்தைத் தூண்டிற்று! கடிதம் என்னவோ ஒருநாள் கழித்துத்தானே என் கைக்கு வந்தது? அதை மட்டும் சொல்லி விட்டால் என்பேரில் குற்றம்விழாமல் தப்பித்துக்கொள்ளலாமே? தற்செயலாய் நேற்று கடற்கரையில் அவர்களைக்கண்டதாக ஏன் ஒத்துக்கொள்ளவேண்டும்? என்று மனம் தயங்கினுள். மறு நிமிஷமே கோபத்துடன் அந்தத் தகுதியற்ற யோசனையை உதறித்தள்ளிவிட்டுத் தந்திகொடுக்கும் உத்தேசத்துடன் கிளம்பினுள்.

வெய்யில் கண்ணைப்பறித்தது. கால்கள் தன்னையறியாமல் கடற்கரைக்கு அவளை இழுத்துச்சென்றன. தலை குனிந்து நடந்தவள், தன் கேவல புத்தியையும் அதனுல் விளைந்த துன்பங்களையும் எண்ணி வருந்தினுள். கண்ணில் நீர் தளும்பிற்று. புடவைத் தலைப்பினுல் அதைத் துடைத்தவள் தலை நிமிர்ந்தாள்.

என்ன அதிசயம்! விந்தையென்ருல் இதுவன்ரே விந்தை! இதென்ன கனவா உண்மைதானு? நேற்றுப்போல் அதே இடத்தில் பொறுமையுடன் அமர்ந்து தன்னையே நோக்குவது மாமாவும் மாமியும் தானு? ஐயோ கிழப்பிராணனே, பசி தாகம் கூட உங்களுக்கில்லையா?

''மாமா மாமி!'' என்று கத்திக்கொண்டே ஸரோஜா ஓடிப்போய் மாமியின் மடியில் விழுந்து அழுதாள்.

''அம்மா ஜரோஸா! கோந்தே ஏம்மா அழரே? அழாதே ஜரோஸா'' என்று ஏக காலத்தில் கிழவர்கள் அவளைத் தேற்ற முயன்றனர்.

''மாமா, மாமி என்னைக் கொல்லுங்கள்! நான் பாபி, வஞ்சகி பொல்லாதவள்......''

''கோந்தே அப்படியெல்லாம் சொல்லாதேயம்மா. சுப்பையா எழுதின கடுதாசி வந்துதோன்ளுே?''

''இன்று காலையில் வந்தது மாமா. ஆனுல்......''

''பின்னே நீ என்ன பண்ணுவே! நான் அப்பவே சொன்னேன்; மூந்தா நாள் கட்டுக்குக் கடுதாசி போய்ச் சேராதென்று.''




பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு நன் கொடை யெனப் போற்று கிருர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதருஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினுப்பள்ளி.

பிராஞ்சு:

பெரிய தெரு,
கும்பகோணம்.

"ஆனால் உங்களை நான் நேற்றுமாலை இங்கே பார்த்தேனே; என் சிநேகிதிகள் முன்னிலையில், நீங்கள் என் பந்துக்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கி உங்களைக் காணாதுபோல் திரும்பிக்கொண்டேன், மாமா! அதற்காக என்னை என்னவேணுமோ செய்யலாமே!"

கிழவர்கள் சிரித்தார்கள், அவர்களுக்கு இந்தத் தர்க்கம் ஒன்றும் சரியாகப்படவில்லை. கோந்தே, கடுதாசி வந்து சேராவிட்டால் நீ என்ன பண்ணுவே? நேற்று மாலை இங்கே ஒரு ‘கோட்டை’ப்பெண்கள் எங்களைப் பார்த்துக் கேலி பண்ணுத்துகள். நீ மட்டும் இல்லையே யென்று நினைத்தோம். கடைசியில் உன்னைப்போல் ஒருத்தி இருப்பதாக மாமி சொன்னாள். எழுந்து போய்ப் பார்ப்பதற்குள், பெண்கள் போய்விட்டார்கள்" என்றார் மாமா.

"அது நான்தான் மாமா!" என்று ஸரோஜா மன்றாடினாள். கிழவர்கள் அதை நம்பினால்தானே? இந்த அதிருஷ்டத்தைப் பாருங்கள்! "நீயாக எப்படி இருக்கமுடியும், கோந்தே? எங்களைக் கண்டவுடன் ஓடி வந்திருக்கமாட்டியா?" என்றே சாதித்தார்கள். குழந்தைகளை ஒத்த அவர்களின் எளிய சுபாவம் இவ்விதமும் உலகில் நடக்கும் என்பதை நினைக்கவும் மறுத்தது.

"கோந்தே உன் மாமிக்கு ஏதாவது ஆகாரம் பண்ணிவைக்கவேண்டும். அவள் உண வருந்தி இரண்டுநாளாகிறது," என்றார் மாமா.

ஸரோஜாவுக்கு அப்பொழுதே சுயப்பிரக்ஞை வந்தது. ஐயோ, பசி தாகத்தைப் பொறுத்துக்கொண்டு இந்தச் சுடு மணலில் இரண்டுநாள் தவம்புரிந்த இவர்களின் வாஞ்சையை என்னவென்பது? என்னைக் கண்ட பிறகாவது ஒரு சுடு சொல் கூறினார்களா? இறைவா, என்னை இந்த மாசற்ற அன்பிற்குத் தகுந்தவளாக்கு, என்று பிரார்த்தித்தது அவள் உள்ளம்,

"மாமா, மாமி, எழுந்திருங்கள். உங்களிருவருக்குமே ஹாஸ்டலில் ஸ்நானம், சாப்பாடு எல்லாம் செய்விக்கிறேன். என் நிமித்தம் இவ்வளவு துன்பங்களைச் சகித்தீர்களே...... பாவம்." என்றாள்.

"கோந்தே மாமாவுக்குத்தான் ரொம்பவும் பசி. ஸத்துமா கொண்டுவந்திருந்தேன்; அதைப் பிசையத் தண்ணீரில்லை; இன்றும் உன்னைக்காணாவிட்டால், இரவு ரயிலில் காரக்குரிச்சிக்குப்போய் சுப்பையாகிட்ட பணத்தைக் குடுத்து விடுவோம் என்று மாமா சொல்லிண்டு இருந்தார்—நல்ல வேளை, நீ வந்தாய், கோந்தே" என்றாள் மாமி.

யாவரும் எழுந்தார்கள். மாமியின் புடைவைத்துணி மூட்டையை ஸரோஜா இடுப்பில் வைத்துக்கொண்டு ஒருபுறம் மாமா, மறுபக்கம் மாமி நடந்துவர, மிகப்பெருமையுடன் ஹாஸ்டலுக்கு அவர்களை அழைத்துச் சென்றாள்.

தங்கம் விமலா இவர்களுடைய கோஷ்டி மத்தியில் எதிர்ப்பட்டது! தங்கம் ஓடிவந்து "மாமா மாமி! வந்தீர்களா? ஸரோஜா, நீ தற்கொலை புரிந்துகொண்டிருப்பாய்; உன் உடலைத் தேடுவோமென்றே கடற்கரைக்கு வந்தேனடி!" என்று கேட்டுக்கேலி பண்ணினாள்; குரலில் தனிப்பட்ட அன்பும் ஆதரவும் தொனித்தது.

தன் தோழியின் முகத்தை நன்றியறிதலுடன் பார்த்துவிட்டு "வா தங்கம் இவர்களின் களைப்பைச் சற்று ஆற்றிவைப்போம்" என்றாள்.

மற்ற மாணவிகளும் இவர்களிடம் வந்து சேர்ந்தனர். இங்குக்கண்ட காட்சியில் பிரமித்துப்போய் திருட்டுத் தனமாய் ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள். ஸரோஜாவின் நாகரிக உடையும் அவள் இடுப்பில் மூட்டையும் இரு புறமும் நின்ற கிழவர்களையும் கண்டு, விமலா அடக்க முடியாமல் சிரித்துவிட்டாள்.

ஸரோஜாவுக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே! ஒரு ராணிபோல் நிமிர்ந்து நின்று தன் மாமன் மாமியைக் கையிற் பிடித்துக்கொண்டு, "விமலா, ராதா, இவர்கள் தான் என் மாமாவும் மாமியும், காரக்குரிச்சியிலிருந்து வந்திருக்கிறார்கள்" என்று பெருமையுடன் அறிமுகம் செய்துவைத்தாள்.

அதோடு நில்லாமல், "நீங்களெல்லோரும் நேற்று மாலை இவர்களைக் கண்டு பரிஹாசம் செய்தீர்களாமே?" என்றும் ஒரு போடு போட்டாள். இதற்குள் மாமி, "ஸரோஸா கோந்தே இவாளோ யாரோ எனக்குத் தெரியாது அம்மா; உன் சிநேகிதிகளானால் எங்களைப் பார்த்துச் சிரித்திருப்பார்களா?" என்று சற்று வெட்கத்துடன் சொன்னாள். அவள் உள்ளத்தின் பெருந்தன்மை மாணவிகளின் மனதைக் கவர்ந்தது. யாவரும் சேர்ந்து ஹாஸ்டலை நோக்கி நடந்துசென்றார்கள்.

சற்றுப் பின்தயங்கின விமலாவும் ராதாவும் மட்டில் "ஸரோஸாவாமே, ஸரோஸா!" என்று சொல்லிய வண்ணம் சிரிப்புத் தாளாமல், வயிற்றைப் பிடித்துக்கொண்டு மணலில் உட்கார்ந்தார்கள்.

அவர்கள் சிரித்து முடிக்கட்டும், பாவம்!




வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்ருேர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது பெரீஸ் பிஸ்கட்ஸ்

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுதும் வாங்குவது

# பெரீஸ்

## பிஸ்கட்ஸ்

PERRY & CO., USILAMPATTI. (Estd. 1917)

# இங்கிலீஷ் தமிழ்

எஸ். பார்த்தஸாரதி அய்யங்கார்

தமிழ்ப் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் நாளுக்குநாள் குவிந்து கொண்டிருக்கின்றன. மூட்டை சேருவதைக் கண்டே நாம் தமிழ் முன்னேற்றமடைந்துவிட்டதாகக் கொந்தளிக்கிறோம். உண்மையில் தமிழ் முறைக்கு மாறுதலான வசன நடை அதிகமாகிறது. சரியான தமிழ் வார்த்தை கிடைக்காத ஸந்தர்ப்பங்களில் இரண்டு மூன்று சொற்களைச் சேர்த்து விபரீதமான தமிழாக்கி எழுதுவதைவிட இங்கிலீஷ் வார்த்தையையே எழுதிவிடுவது மேல். வேறு பாஷையிலிருந்து வார்த்தையை மாத்திரம்தான் எடுத்துக்கொள்ளலாம். தமிழுக்கு முற்றிலும் விரோதமான வாக்கிய அமைப்பு முறையைக் கைப்பற்றக்கூடாது. இங்கிலீஷிலுள்ள விஷயத்தை மாத்திரம் மனதில் வாங்கிக்கொண்ட பிறகு அது நம்முடைய அடிவயிற்றிலிருந்து கிளம்பும் முழுத் தமிழ்ச்சொல்லாக இருக்கவேண்டும். இங்கிலீஷ் தொடர்களை அப்படி அப்படியே மொழிபெயர்த்து எழுதுவதால் தமிழுக்கு விரைவிலேயே விபரீதம் நேரிடும். ரத்நப் பரீக்ஷை செய்பவன் கண்ணாலே கண்ட மாத்திரத்திலேயே நல்ல கல்லையும் மட்டக்கல்லையும் பிரித்துவிடுவான். கல்லுக்கு விலை மதிக்கும் சக்தி ஒன்றுதான் ரத்நப் பரீக்ஷகனிடமுள்ள விசேஷம். நல்லதையும் கெட்டதையும் கண்ட பழக்கத்தினால் நல்ல கல்லும் போலிக்கல்லும் தன்னடையே தெரியும். அதுபோலவே சற்றுக் கவனித்தால் இங்கிலீஷ் தமிழ் இன்னதென்றும் இயற்கைத் தமிழ் இன்னதென்றும் எளிதில் விளங்கும். நாள்தோறும் கிளம்புகிற பத்திரிகைகளிலிருந்து இவ்விஷயத்தைச் சற்று ஆலோசிப்போம்.

## 1. குறுக்கு விசாரணை

இதில் தமிழோசை நன்றாயிருக்கிறது. விசாரணா—என்னும் வடசொல் கடைசியில் ஐ—காரம் பெற்று குறுக்கு என்னும் முழுத் தமிழ்ச் சொல்லோடு நன்றாகப் பொருந்தி இனிப்பாக ஒலிக்கிறது. ஆகிலும், நாம் சொல்ல விரும்பும் விஷயத்துக்கும் இதை உபயோகிக்கும் பொருளுக்கும் இது சேரவில்லை. ஏனெனில், நியாயஸ்தலத்திலும் சபைகளிலும் குறுக்கே எந்தப்பேச்சும் கேள்வியும் விசாரணையும் நடக்க இடமில்லை. யாரேனும் குறுக்கிட்டுப் பேசினால் "குறுக்கே பேசாதே"—என்று வார்த்தை கிளம்புவது இயற்கை. ஆகையால் குறுக்கு விசாரணை குறுக்குக்கேள்வி—என்பவை சாக்ஷி விசாரணையின்போது ஏற்படக்கூடிய இயற்கைத் தமிழல்ல. க்ராஸ் எக்ஸாமிநேஷன்—என்னும் இங்கிலீஷ் தொடருக்கு இது க்ராஸ்—குறுக்கு, எக்ஸாமிநேஷன்—விசாரணை என்ற மொழி பெயர்ப்பு. எக்ஸாமிநேஷன் என்றால் ஸாதாரணமாகப் பரீக்ஷை என்றுதான் அர்த்தம். அப்படி மொழி பெயர்த்தால் குறுக்குப் பரீக்ஷை—என்றாகும். மெட்ரிகுலேஷன் முடிந்ததும் நேராக மேல் படிப்புக்குக் காலேஜில் சேராமல் ஷார்ட்டு ஹாண்டு, டைப்ரைட்டிங்கு, புக் கீபிங்கு—முதலிய படிப்புகளுக்கு ஸ்திரீகள் குறுக்குப் பரீக்ஷை என்று சொல்வதுண்டு. ஆகையால் நியாயஸ்தலத்தில் நடக்கும் எதிர்த்தரப்பு விசாரணையைக் குறுக்கு விசாரணை என்று யாரோ எழுதத் தொடங்கினது பழக்கத்துக்கு வந்துவிட்டது. இங்லீஷ் டிக்ஷனரியைப் பார்த்தால் க்ராஸ் எக்ஸாமினேஷன் என்பதற்கு எக்ஸாமிநேஷன் — பை தி அதர் — என்றுதான் அர்த்தம் ஏற்படும். ஆகவே எதிர்த்தரப்பு விசாரணை, எதிர் விசாரணை—என்று எழுதுவதுதான் சரியான தமிழ்.

## 2. தலைமை உபாத்தியாயர்

ஹெட்மாஸ்டர் என்னும் வார்த்தையை நினைத்துக்கொண்டே எழுதின தமிழ் இது. ஹெட் என்றால் தலை என்று அர்த்தமானாலும் இங்கே ஹெட் என்பது ப்ரதானம்—என்னும் அர்த்தத்தில் இருக்கிறது. தலை வாத்தியார் என்றால் சரியா

யில்லையாகையால் தலைமை உபாத்தியாயர் என்று எழுத ஆரம்பித்துவிட்டோம். ஹெட். என்பதை மறந்து வாத்தியாருக்குள் பிரதானர் பெரியவர்—என்று தமிழிலேயே யோசித்தால் பிரதான உபாத்தியாயர் — அல்லது பெரிய வாத்தியார்— என்றுதான் சொல்லுவோம்.

**3. துப்பு இங்கே**

ரயில்வேஸ்டேஷனில் எச்சில் தொட்டி பலவிடங்களில் வைத்திருக்கிறது. கள்ளிக்கோட்டை ஓட்டினால் செய்த அந்தத் தொட்டியில் ஒரு பக்கம் ஸ்பிட் ஹியர் என்று இங்கிலீஷில் எழுதியிருப்பதற்கு துப்பு இங்கே—என்பது மொழிபெயர்ப்பு. இதில் ஸ்பிட் என்பது முதலிலும் ஹியர் என்று பிறகும் இருப்பதால் அந்த வரிசையிலேயே மொழிபெயர்ப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் தமிழிலேயே யோசித்தால் "இதில் துப்பு" என்றுதான் சொல்லுவோமேயன்றி "துப்பு இங்கே"—என்று சொல்லமாட்டோம். "இங்கே துப்பு" என்றுகூட சொல்லுவோம் "துப்பு இங்கே" என்பது இங்கிலீஷுக்கு மொழிபெயர்ப்பு.

**4. இசைத் தட்டு**

ரேடியோவில் இந்த வார்த்தை அதிகமாகக் கிளம்பியிருக்கிறது. கிராமபோன் ப்ளேட் என்னும் இங்கிலீஷுக்கு இது மொழிபெயர்ப்பு. தட்டுவேறே தகடு வேறே. தட்டு என்பது சாப்பிடும் தட்டு, வெற்றிலைபாக்குத்தட்டு என்னுமாபோலே ஏதேனும் ஒரு வஸ்துவைக் கொள்ளக்கூடியதாயிருக்கும். தகடு என்பது தட்டாகச் செய்யப்படாத நிலைமையிலுள்ளது. இங்கிலீஷில் தட்டு, தகடு இரண்டையும் ப்ளேட் என்ற ஒரு சொல்லாலேயே சொல்லவேண்டியது தவிர வேறு வார்த்தை இல்லை. இங்கிலீஷுக்குள்ள இந்தக் குறையையும் தமிழில் இரண்டு வஸ்துக்களுக்குத் தனித்தனியாகச் சொற்களமைந்



## வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: **மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.**

வின்ஸென்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் **வின்ஸென்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

துள்ள பெருமையையும் அறியாமல் இசைத்தட்டு—என்று கிளம்பிவிட்டது. இசைத்தகடு என்பதுதான் பொருத்தமாயிருக்கும்.

**5. கிறிஸ்துவ தாழ்த்தப்பட்டோர்**

டிப்ரெஸ்டு க்ளாஸ் க்ரிஸ்டியன்ஸ் என்னும் இங்கிலீஷ் தொடர் இப்படித் தமிழில் எழுதப்படுகிறது. தாழ்த்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட கிறிஸ்துவர்கள் — என்று எழுதினல் கிறிஸ்துவ ஸமூகம் முழுதுமே தாழ்த்தப்பட்டதென்று பொருளாகுமாம், அதற்குப் பயந்து இப்படிச் சிரமப்பட்டு வார்த்தை ஸ்ருஷ்டி செய்யப்படுகிறது. இங்கிலீஷைச் சற்று மறந்து தமிழிலேயே ஆலோசித்தால் கிறிஸ்துவ ஹரிஜனங்கள் என்று எழுதலாம். ஹரிஜனம் என்ற ஸம்ஸ்கிருதம் கூடாதென்ருல் கிரிஸ்துவர்களுக்குள் தாழ்த்தப்பட்டவர்கள்—என்று எளிதான இயற்கைத் தமிழாக எழுதலாம்.

**6. குறைவு விற்பனை**

ரிடக்ஷன் ஸேல் — என்னும் இங்கிலீஷுக்கு இது மொழிபெயர்ப்பு. குறைந்த விலை அல்லது குறைந்த விலைக்கு விற்பனை—என்று இயற்கைத் தமிழாக எழுதலாம். பெரும்பாலும் கடைகளில் குறைவு விற்பனை—என்றும் விபரீதத் தமிழ் காணப்படுகிறது. குறைவு விற்பனை — என்ருல் வியாபாரம் மிகவும் குறைந்துபோய்விட்டதென்றுதான் அர்த்தமாகும்.

**7 வரிப்பளு**

இது பர்டன் அப் டாக்ஸ்—என்ற இங்கிலீஷை நினைத்தோ அல்லது பார்த்துக் கொண்டேயோ எழுதின தமிழ். படித்தவர்களின் தமிழைவிட படிக்காதவர்களின் தமிழ்தான் இயற்கைத் தமிழாயிருக்கும். விவசாய வருமான வரி விஷயமாகக் குடியானவர்கள் பேச்சில் வரித்தொல்லை நமக்கும் வந்ததே—என்றுதான் சொல்லுவார்களே யொழிய வரிப்பளு—என்று சொல்லமாட்டார்கள். ஆகையால் வரித் தொல்லை என்பதுதான் சுத்தமான தமிழ்.

**அன்புள்ள ஐயா**

இது இங்கிலீஷில் கடிதம் எழுத ஆரம்பிக்கும் "டியர் ஸார்"—என்பதன் மொழி பெயர்ப்பு. தமிழர்களான நாம் தமிழில் கடிதம் எழுதும்போதுகூட இங்கிலீஷ்காரர்களாக நம்மை நினைத்துக்கொண்டு இங்கிலீஷ் வழக்கத்தை அனுஸரிக்கிருேம். நாம் இங்கிலீஷ் படிக்காததற்கு முன்பு இன்னருக்கு இன்னர் நமஸ்காரம். அல்லது இன்னருக்கு இன்னர் எழுதிக் கொண்டது என்றுதான் எழுதினேம். இப்போதும் நம்மில் இங்கிலீஷ் படிக்காதவர்கள் இப்படித்தான் எழுதுகிருர்கள்.

**உங்கள் கடிதம்**

சுருக்கமாக எழுதும் முறையில் "யுவர் லெட்டர்"—என்று இங்கிலீஷ் கடிதங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இங்கிலீஷ் முறையை மறந்து நாம் சொந்தமாய், சுத்தமான தமிழாகவே எழுதுவோமாகில், உங்கள் கடிதம் கிடைத்தது என்று வினைச்சொல்லோடு எழுதுவோமேயன்றி, வினைச்சொல் இல்லாமல் மொட்டையாக விடமாட்டோம். வினையில்லாத மொட்டை வாக்கியங்கள் நம்முடைய பழந்தமிழில் பல்லாயிரக்கணக்கில் இருந்தாலும், இந்த வாக்கியத்தை—கிடைத்தது, கிடைக்கப்பெற்றேன் என்ற வினைகளோடுதான் எழுதுவது வழக்கம்.


டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்திபெற்ற குழந்தைகளின்
டானிக்

# என்னையா என் மதத்தையா?

எம். எஸ். கமலா

வசந்த ருது மாலை நேரம். இயற்கை அன்னையின் இன்ப அலங்காரத் தோற்றம். இளம் கன்னிகைகளின் காமத்தை எழுப்பி, சந்தியா ராகத்துடன் அனுராக கீதத்தை அடக்கமாய் அனுயாசமாய் எழுப்பி இன்ப வெறியில் ஆழ்த்திக்கொண்டிருந்தது.

பக்தர்கள் பகவத் பூஜைக்காக 'ருதானும் குஸுமாகரஹ' என்று அன்று பாடிய கீதாசார்யனின் உண்மை வாக்கை நினைத்து, பூரித்து, உகந்த மலர்களைப்பறித்துக்கொண்டிருந்தனர். காதலிகள் காதலர்களைத் திருப்தி செய்ய மலர்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டிருந்தனர். பரத்தையர் படுக்கை அறையை மலரால் நிரப்பி மணம் கமழச் செய்தனர்.

இப்பேர்ப்பட்ட வெறி பிடித்தாடும் வசந்த ருதுமாலையில் 'வசந்தமாலை' நந்தவனத்தில் அசோக சக்ரவர்த்தியின் இரண்டாம் மனைவி 'கருவகி' போதி சத்வரின் பூஜைக்காக மாலை மஞ்சள் நீராடி, மஞ்சள் வெயிலில் விரிந்த கூந்தல் காற்றிற்குத் தருராஜங்களுக்கிணையாய்ப் பறந்துஆட, பணிப் பெண் சோபனை மித்திரையுடன் மலரைப் பறித்துக்கொண்டிருந்தாள்.

தாம் திகிட தாம்<br>
தீம் திகிட தீம் திகிட தீம் தாம்<br>
"வசந்த ருது அன்னையின்<br>
மலர் விரிப்பு. வசந்தமே<br>
அனைவரை மயக்கும் களிப்பு"

என்று மதுரமான சங்கீதமும், 'ஜல் ஜல்' லென்று நாட்டியமாடும் ஓசையும் லதாகுஞ்சத்தினுள்ளிருந்து மெல்லக் கணக்கற்ற மலர்களின்மகரந்தத்தூளில் புகுந்து,காதலை எழுப்பத் தொடங்கின. ஆகாயத்தில் இளம் சந்திரனும் இந்த இனிய ஓசையிலீடுபட்டு, இளிக்கிறானோ என்றாற் போலிருந்தது.

"சோபனா! என்னடீ அந்தச் சப்தம்?" என்று உசாவினாள் கருவகி.

"அதா?......நம் சின்ன அரசி......அரசரின் காதற்.........ஆசைக் கிழத்தி நடனமாடப் பயிற்சி செய்கிறாள்"

"அய்யோ அவஸ்தையே! எப்பொழுதும் இதே வேலைதானா? நேற்று இரவு முழுவதும் ஒரே சிரிப்பும் பாட்டும்தான். அரசரென்ற பயமோ மரியாதையோ சற்றுக்கூடயில்லை.........

"அரசரென்றால் அந்தம்மாளுக்கு அதிக அன்பாம். அதற்காகவே......அவரைச் சந்தோஷப்படுத்தவேதான் இந்தப் பிரயத்தினங்கள் என்று சொன்னார்கள் என்னிடம்"

"பாவம்......அவர் ஏகாந்தத்தைக் குலைக்கிறாள்"

"அவரை எப்பொழுதும் தன்னிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று"

"தவறு, மெதுவாய்ப் பேசு. அவர் இக்கஷ்டத்தைச் சகியாமல்தான் 'கயா'வுக்குச் சென்று போதிமரத்தைப் பூஜித்துக்கொண்டிருக்கிறார் மாதமிருமுறை"

"ஆனால் அந்த மரத்திற்கும் ஆயுள் முடிந்தாற்போல்தான்"

"போடி பைத்தியம்! போதாய்விட்டது' வா! போவோம்"

சந்திரன் சிரித்துக்கொண்டே லதாகுஞ்சத்தினுள் தன் கிரணத்தைச் செலுத்தவே நாட்டியத்தை நிறுத்தி 'திஷ்யரக்ஷிதை' நந்தவனத்திற்குள் வந்து தன் விரிந்த பெரிய கண்களை ஒருமுறை சுழற்றிக் கைகளைத் தட்டினாள். இவள் அழைத்ததை யறிந்துவந்த பணிப் பெண்ணிடம் காதில் ஏதோ ரகசியம் பேசுகிறாள். நிலவைப் போன்ற நிறம். மெலிந்து வளைந்த இடுப்பு. பெரிய பெரிய கண்கள். செதுக்கிவைத்த கூரான மூக்கிற்கடியில் முறுவல் பூத்து நிழலாடும் அதரங்கள். அடர்ந்து வளர்ந்திருக்கும் கூந்தலை இறுகக் கட்டினாலும் கட்டிற் கடங்காமல் தளர்ந்து தொங்கும் கனத்த கொண்டை, இருபது வயதை இன்னும் எட்டிப் பிடிக்கவில்லை. அவள் கண்களில் காதல்வெறி கனிந்துகொண்டிருந்தது.

அடர்த்தியாய் வளர்ந்திருந்த கொடிகளின் பின் ஒளிந்துகொண்டு எதையோ கூர்ந்து

கவனித்துக்கொண்டிருந்தாள். அவள் எதைப் பார்க்கக் காத்திருந்தாளோ, அதைப் பார்த்துவிட்டாள்போல் தோன்றுகிறது. இல்லாவிடில் அவள் மார்பகம் அப்படிப் பூரித்து, முகம் பெருமிதம் கொள்வானேன்?

அசோகரின் சகோதரன் மஹேந்திரன் புத்தாஷ்டகத்தைச் சொல்லிக்கொண்டே புஷ்பச்செடிகளுக்குத் தன் கையால் நீர்விட்டுக்கொண்டிருந்தான். அந்நிலவில் அவன் அடர்த்தியான கூந்தல் சுருண்டு அவன் தோளை ஆலிங்கனம் செய்துகொண்டிருந்தது. அவனைக் கண்டதும் 'கல கல'வென்று சிரித்துக்கொண்டே வெளியில் வந்தாள் திஷ்யரக்ஷிதை.

"அப்......பா! மேலேயெல்லாம் ஊற்றிவிட்டாய். பார்த்து விடக்கூடாது. புதர்களில் அநேக புழுக்கள், ஜந்துக்கள் ஒளிந்திருக்குமென்றறியவேண்டாம்? பக்தனுகிவிட்டதினுல் பிராணிகளை......" என்று அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் மண்டையிலடிபட்டவன் போல் மலைத்து நிற்கவே,

"விளையாட்டிற்கு......அய்யோ!......உண்மையாய்......விளையாடினேன்..........அதை இப்படிக்கொடு......நான் விடுகிறேன், பக்தியினுல் உன்கைகள் நடுங்கிப்போகின்றன. ......கொடு......மஹேந்த்ரா!"

"இங்கு ஏன் நிற்கிருய்? விடு......குடத்தை. ......பிடிக்காதே. செடிகளுக்கு நீர் விடுவது என் வழக்கம்"

"நானு! உனக்காகத்தான்......உன்னைப் பார்க்கத்தான். உன் கண்களிலிருக்கும் அந்த ஒளியில் என் உள்ளத்தை நாசம் செய்யவே......இந்தப் பாழடைந்த கோயிலில் அடைபட்டுள்ளேன். இவ்விடம் எல்லோரும் கற்சிலைபோன்றவர்கள். ஒருவருக்காகிலும் சங்கீதம், சௌந்தர்யம், நாட்டியம் இவைகளைச் சொன்னுலும் புரியாது. வாய் அசைத்துப் பேசுபவன் நீ ஒருவன் தான். நீயும் சிலையாய் மாறிவிடாதே! உள்ளமில்லாதவனுய்ப் போய்விடாதே; நான் செடிகளுக்கு என் கைகளால் அன்பாய் நீரைவிடுகிறேன்........."

என்ன அசட்டுத்தனமான பேச்சு! உனக்குகந்ததல்ல. நீ மஹாராணி. அறியாச் சிறுமியைப்போல் விளையாடாதே!"

"சிறு வயதில் உள்ள நான், சிறுமியைப் போல் விளையாடாமல் எப்படியிருப்பேன்? உன் சிறுவயதில் நீ......ஐந்தாண்டுகளுக்கு முன்...... எனக்காக நீ பட்ட வேதனை...... என்னைத்தவிர வேறு தெய்வமில்லை என்றையே!"

"இருக்கலாம். அப்பொழுது நான் அக்ஞானக்கோட்டைக்குள்.........இப்பொழுது எனக்குப் புத்தரைத்தவிர வேறு தெய்வமில்லை. நீயும் என்மேலிருக்கும் அன்பை புத்தர்மேல் செலுத்து. இறந்த உன் சகோதரி 'சங்கமித்திரை' கணவனுக்குச் சகாயமாய் பௌத்தமதப் பிரசாரம் செய்து நிர்வாணமடைந்தாள்......" என்னும்போதே

"நிர்வாணமல்ல. இறந்தாள். அவளைப் போற்றுகிறேன். எதனுலென்றுல், அவள் உடலை மறந்து, உணர்ச்சியின்பால் வசப்பட்டுச் சங்கடப்படவில்லை. அசோகரின் யௌவனத்தின் நிலவை முழுவதையும்...... ஊம்...... நிலவு முழுவதும் அவள் மேல் காய்ந்தது......" என்று சொல்லிக்கொண்டே அவன் வேலைக்கு இடைஞ்சல் செய்தாள்.

"நடுவில் குறுக்கிடாதே! அவளைப் போலவே அசோகரைப் பின்பற்றிச் சரித்திரத்தில் இடம்பெற்று அமரத்வத்தை அடைவாய்"

"ஆனுல்......நம் வாழ்க்கை சரித்திரத்தில் அமரத்வம் அடையத்தானு? நிர்வாணம் நமக்காக அல்ல. சரித்திரக்காரர்களுக்காகத்தானே! உண்மையாய் நாம் நல்லவர்களாயிருந்தால்கூட சரித்திரக்காரர்கள் உண்மையையே எழுதுவார்களென்ற நம்பிக்கை ஏது? அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்கள்தானே!"

அவள் கேள்விக்குச் சரியானவிடையளிக்கக்கூடாமல் திணறினுன் மஹேந்திரன். மௌனமாய்த் தன் வேலையிலாழ்ந்தான்.

"அப்படி வா வழிக்கு. நீயும் சிலையாய் மாறுவதற்குமுன் மனிதனு, அல்லவா நன்ருய்ப் பார்த்துக்கொள். எங்கே, உன் கையை இப்படிக் கொடு, பார்க்கலாம். சூடாயிருக்கிறதா? உணர்ச்சி யிருக்கிறதா? அந்த அசையும் உதடுகளில் உயிர் இருக்கிறதா?......"

"ச்சீ!......விடு......மஹா பாவம்......... அசோகர் என் சகோதரர்......"

"இருவரும் ஒரே மாதிரிதான் இருக்கிறீர்கள்"

"சீ! மஹா பாபம். நீ......இருளில்...... இருக்கிருய்......"

"ஆம் கண் தெரியாத......உன் முகத்திலிருக்கும்......ஒளியை எனக்குக் காண்பி... தயவுசெய்து......இந்த......என்......

"உன் கணவர் அசோகர்......மஹாராஜன் ......அவர் புகழ் பரதகண்டம் முழுவதும் மிளிர்கிறது. அவர் அருமைக்காதலி நீ...... ஆசைக் கிழத்தி நீ......அன்பு......"

"அருமை......காதலி......அன்பு......எவ்வளவு அழகாய்ச் சொல்கிருய்! அச்சொற்களிலே இவ்வளவு இனிமையும் இன்பமும் இருக்கும்போது......உண்மையில்......நடை ......என்ன?"

"அசோகர் ராஜாதிராஜன்"

"உன்னைத் தொட்ட பாபம் அவரையே சேரட்டுமென்றுதானே உன் உத்தேசம்? சுயநலத்தில் அசோகர் உனக்குக் குறைந்தவரல்லர். அவர் என்னைத் தொடமாட்டார். சந்தோஷமாய் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார். எனக்கவரைக் கண்டால் பயம். அவர் கற்சிலை......என்னை ஏன் மணந்து கொண்டாரோ அறியேன்"

"அரசர்களுக்குச்சட்டத்தைப் பொறுத்து அவசியம் சில மனைவிகள் வேண்டியிருக்கின்றனர். உன்ஞல் அவருக்கு அரசாட்சி விரிந்தது. அவருக்கு மனைவிகளுக்கு அளிக்கவென்று தனித்தனி உள்ளமில்லை"

"அரசை அதிகப்படுத்திக் கொள்வதற்காகச் சில மனைவிகள், புகழிற்காக மதம்... இதா உங்கள் நீதி?"

"திஷ்யா! அரசன் பிரஜைகளுக்கு வழிகாட்டியாயிருப்பதற்காகக்சில முக்கியமான இச்சைகளைத் தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. அவருக்கு ராஜ்யத்தைத் தவிர வேறு உலகம் இல்லை"

"போகட்டும், பிரஜைகளுக்காகிலும் சுதந்திரமிருக்கிறதல்லவா?"


# S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

## SALEM TOWN

1. சக்தி அகர்பத்தி
2. சக்தி ஜவாஜிபத்தி
3. சக்தி தர்பார்பத்தி
4. பத்மா அம்பர்பத்தி
5. ஜோதி ஜவாஜிபத்தி
6. S. K. R. ஸ்பெஷல் கஸ்தூரிபத்தி

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு

## எஸ். கே. ஆர். அண் கோ.

பர்ப்யூமர்ஸ்

அருணுசல ஆசாரி தெரு :: ஜோதி பில்டிங்

சேலம் டவுன்

"உனக்கில்லை. நீ அரசி"

"போதும். நிறுத்து. நீ கற்சிலை"

"மதத்திற்காகச் சிலையாய் மாறினால் தோஷமில்லை. காதல்பேரைச்சொல்லி மிருகங்களாய் மாறுவதைவிட இது நல்லதல்லவா?."

"என்னைக் கோபமூட்டாதே! எனக்கு வேண்டியவைகளை அளித்தால்......உலகத்திற்கெத்தனை வேண்டுமானாலும் தியாகம் செய்கிறேன். என் அன்பை......என் காதலை...... தள்ளாதே! அது தூயது. என் ஜன்மம்......நான்கு வருடங்களுக்கு முன் காதல் யாத்திரையை முடித்தாய். என்னைப்போன்ற எத்தனையோ அழகிகளைச் சந்தித்தாய். அசோக மஹாராஜர் வெகு காலம் காதலை ஆராதித்தார். தான் ஆராதித்த ஸ்திரீகளுக்கு 'ஸாஞ்சி' ஸாரநாத்' ஸ்தூபங்களை நிறுத்தி, சிரஞ்சீவிகளாகச் செய்தார். நான் வரும்போது பௌத்த சந்நியாசியாகிவிட்டார். அது என் துர்ப்பாக்கியம்" என்று கண்ணீர் சோரவிட்டாள்.

பெண்களின் கண்ணீரைக் கண்டால் அசங்கிக் கொடாத ஆணும் உண்டா? "அழாதே! திஷ்யா! உன் கண்ணீரைக்கண்டால் என்மனம் விண்டுவிடுகிறது. என்னைச் சாதாரண மனிதனாய் மாற்றி விடாதே..."

"என் தந்தை நான் அரசியாவேனென்றும், தனக்கு உயரிய பதவி கிடைக்குமென்றும், என்னை இந்த விஹாரத்தில் ஆராதனை செய்யச்சொன்னார். ஆனால் என் தந்தையை ஒன்றும் சொல்வதற்கில்லை. நான் அசோகரைக் கௌரவித்தேன். அவர் கண்களில் சாந்திமிளிர்ந்தது. அவர் சொற்களில் கருணை கனிகிறது. ஆனால் அவர் உள்ளம் எனக்குத் தூரமாகி விட்டது. மதத்தை ஆதரித்த சரித்திரக்காரர்கள் அவரைப் புகழ்ந்தாலும்......உட்லுக்கு...... ஊடலுக்குப் பிரதானமளிக்கும் சரித்திரக்காரர்கள் என்னைப்புகழாமலிரார். அசோகருக்கு அவரை நேசித்த......சாச்வதமான சத்ரு ஆவாள். மஹேந்த்ர! மதத்தின் பேரைச் சொல்லி உன் வாழ்க்கையின் வெளிச்சத்தை மறைக்கிறாய். மனிதனாய் இருப்பதை விட........."

"மனிதனாய் இருந்தால் கண்மூடிக் காதல் இருக்கவேண்டுமென்பதில்லை"

"நான் ஒப்பமாட்டேன். அப்படிச் சொன்னவர்களெல்லாம் தம்மைத் தாமே மோசம் செய்து கொள்கிறார்கள். மனிதத் தன்மைக்கு இச்சைதான் முதற்படி, அது தான் முதன்மையானது. மற்றவை முரண்பாடானவை யாகிலும் மனிதனின் உயர்வை வெளியிடுகிறது. சமுத்ரகுப்தனுக்கு அப்படி நடக்க வில்லையா?"

"திஷ்யா! உன்னைப்போன்ற.........ஆச்சரியமாயிருக்கிறது. இதை நீ சரியான வழியில் செலவு செய்தால் உலகத்தையே உத்தரிப்பாய்"

"உண்மையான அன்பிற்குச் செல்வாக்கிருப்பின் அதே ஞானமாய் வெளிவருகிறது. இந்தச்சத்தியத்தைப் பௌத்த மதத்தில் காண முடிந்ததா?"

இதற்குச் சமாதானம் அசோகர் சொல்வார். ஒருகால் இரவு பத்துமணிக்கு மேல் போதிமரப் பூஜையை முடித்துக் கொண்டு கயாவிலிருந்து அண்ணா வருவாரென்று தெரிகிறது. ஆனால்........."

"ஹா! என்ன? என்ன?"

"ஒன்றுமில்லை"

"சொல், உண்மையைச்சொல். மதத்திற்காக......நாசமாக்காதே" என்று கண்களில் சோரும் நீரைத் துடைத்துக்கொள்ளும் போது மஹேந்திரன் அவ்விடம்விட்டு அகன்றான்.

இரவு மணி பதினொன்று. அசோக சக்கரவர்த்தி கண்களை மூடியபடி ஆலோசித்தவாறு தம் ஏகாந்த அறையில் அமர்ந்திருந்தார். எதிரில் பெரிய புத்தரின் சிலை. அவ்வறை முழுவதும் பற்பல லோகங்களினால் செய்த விக்கிரகங்கள். இனிய வாசனைப்புகை அறை முழுதும் நிறைந்திருந்தது. நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட அசோகரின் அகன்ற மார்பும், அழகிய உருண்டு திரண்ட தோள்களும், தடித்த கீழ் உதடும், அசையாத கண்ணிமைகளும், புத்தவிக்கிரகத்துக்கும் அசோகருக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டம்!

தலை நிறையப் புஷ்பம், கழுத்தில் புஷ்பமாலை, கண்ணிமைகளில் தீட்டிய மை அந்த இருளிலும் மின்ன, திஷ்யரக்ஷிதை மெள்ள அறையினுள்ளே வந்தாள். நடுநிசி வேளையில் காமுகர்களைப் பித்தனுக்கும் காமினியைப்போல் அவள் கயல் விழிகள் சுழலும் போது அவள் கண்களில் ஸ்ருஷ்டி தேவனுக்கு உரித்தான கடைசி ஒளி வெளிப்

பட்டது. அசோகரின் பின்புறம் மெல்ல அமர்ந்து தன் மலர்க் கரங்களால் மெள்ள அவர் தியான நேத்திரங்களை மூடினாள்.

கண்களைக் கட்டியது காமினியின் கைகள். ச்வாசத்தைத் திணற அடித்தது சகல ஜாதி புஷ்பங்களின் மணம். தியானம் கலைந்தது.

"திஷ்யா!" என்றார் அசோகர்.

"..................."

"இச்சிறிய மெல்லிய கைகள் திஷ்யாவினுடையவைதான். இன்னும் படுத்துக் கொள்ளவில்லை? போதாயிற்று விடம்மா!"

கண்களை மூடிய கைகளை எடுத்துக் கழுத்தில் பிணைக்கிறாள்.

"நான் தியானத்திலிருக்கிறேன். இப்பொழுதா இப்படி? இதுகூடவா தெரியவில்லை திஷ்யா!"

"அம்மாடி! எப்பொழுதும் தியானம் தானா? இப்பத்தானே செடியையும் கிடியையும் பூஜை செய்து வந்தீர்கள்? நான் உங்களுக்காக எத்தனை ஆவலாய்க் காத்திருக்கிறேன். பாருங்கள் அதோ சந்திரன் நடு ஆகாயத்திற்கு வந்து விட்டான், குத்து விளக்கருகில் எத்தனை விட்டில் பூச்சிகள் விழுந்து சாகின்றன. இப்பேர்ப்பட்ட ஜீவ ஹிம்ஸை செய்யலாமா?"

அசோகர் சிரித்தபடியே தன்னுள் "பாபம். அறியாச் சிறுமி.........குழந்தைபோல் பேசினால், பரிதாபமாயிருககிறது. "அப்புழுவைப்போல்தானிருக்கிறாய். இயற்கையாய் இறப்பவைகளுக்கு நாம் பாத்தியப்பட்டவர்களல்ல. போய்ப் படுத்துக்கொள். என் கண்ணல்ல......"

"நீங்கள் வந்தால் ஒழிய நான் போக மாட்டேன்"

"மஹா பாபம். இம்மஹான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நீ இப்பேர்ப்பட்ட ......" என்று புத்தரைப் பார்க்கிறார்.

"போனால் போகிறது. இவரைக் குருடராய்ச் செய்துவிடட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே விளக்கிலிருக்கும் எண்ணெயில் விரலை நனைத்துப் புத்தரின் கண்களில் தடவினாள்.

அசோகர் மயிர்க் கூச்சலுடன் "அய்யோ! மஹா பாபம்! வரவர நீ முரட்டுப் பெண்ணாகிறாய், போ! இங்கிருந்து" என்று உரத்துச் சொல்லும்போது யாரோ வரும் ஓசை கேட்கவே, சற்றுச் சாந்தமாய் "யாரோ வருகிறார்கள் பார்" என்றார்.

"யாரது?" என்று திஷ்யரக்ஷிதை வாயிலருகில் சென்றாள்.

"வித்தியானந்தசுவாமி அரசரைப் பார்க்க வந்திருககிறார்" என்று காவலன் சொன்னான்.

"இப்பொழுது யாரையும் அரசர் பார்க்க மாட்டார்" என்று அவள் சொல்வது அரசர் காதில் விழவே "யாரது? திஷ்யா?"

"படுக்கை சித்தமாயிருக்கிறதென்று சொல்லவந்தான். மலர்கள் வாடிப்போகாமல் பன்னீர் தெளித்துவை, இப்பொழுது அரசர் எதையும் பார்க்கமாட்டார் என்றேன்."

"இன்று நான் ஏகாந்தமாய்ப் படுக்க வேண்டும், ஒரு புதிய சங்கல்பம் செய்து கொண்டிருக்கிறேன்."

"நீங்கள் எப்பொழுதுதான் ஏகாந்தமில்லாமல் இருக்கிறீர்கள்? மூத்தவள் அதிருஷ்டக்காரி. நீங்கள் இந்த மதப் பைத்தியத்தில் ஆழ்ந்து எல்லாவற்றையும் மறக்கும் வேளைக்கு இறந்து விட்டாள். என் கர்மம்......இம்மதத்திலிருக்கும்........எனக்கு விளங்கவில்லை"

"நீ மதத்தைத் தூஷிக்கக் கூடாது. இவ்விஷயத்தைச் சுயமாய் அறிந்து கொள்ள வேண்டுமே தவிர ஒருவர் சொல்லி விளங்காது. உன் மூத்தாள் அதைத் தானாய் அனுபவித்து நிர்யாணமடைந்தாள்."

"நிர்யாணம், நிர்யாணம் என்கிறீர்கள் எல்லோரும். அதென்னவோ காண்பியுங்கள்"

"சொன்னேனே உனக்கு விளங்காதென்று"

"எல்லோருக்கும் விளங்காத இம்மதம் எதற்கு?"

"கஷ்டப்பட்டாலொழிய அதை அறிய மாட்டாய்"

"........................."

"கஷ்டமென்றால் காதல்...... உணர்ச்சி... இல்லாமலிருப்பதென்று பொருள்"

"காதலில்லா இம்மதத்தைவிட மதப் பற்று இல்லா மிருகங்கள் மிக நல்லவைகளென்று என் எண்ணம்"




# T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் ஐந்து வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 6000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- **ஸ்டார்டிங் அதிசுலபம்:**—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- **மும்முறை வடிகட்டும் வசதி:**—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- **சமகனம்:**—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- **மிகவும் நம்பிக்கையானது:**—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- **நேர்த்தியான தோற்றம்:**—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்.

T·V·S

வாங்குமுன் கியாஸ் பிளாண்ட் மாதிரிகளைப் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

மதுரை. ஃ சென்னை.

"உன் எண்ணங்கள் முழுதும்......தர்க்கங்கள் முழுதும்......... நீ செய்யும் வாதங்களால் ஜயிக்காது. உன் உணர்ச்சிகளுக்கு நடக்கும் சக்தியில்லை, உன்னிடமே பிறந்து உன்னிடமே சமாதியாக வேண்டியதுதான்"

"அர்த்தமில்லா மூட நம்பிக்கையுடன் சத்தியத்தை ஜயிக்கும்போது, தர்க்கத்தால் அசத்தியத்தை ஜயிக்கலாம்"

"அதைத்தான் எண்ணமென்பது"

"எண்ணம், பாபமில்லா எண்ணம் உதித்துக்கொண்டுதானிருக்கிறது? அசோகர் என் கணவரென்பது பாபமல்ல. அவரை நான் நேசித்தேன் என்பதும் எண்ணமல்ல. ஆனால் அசோகர் என்னை நேசிக்கிறார் என்ற பாபம் சத்தியமாய் என்னுள்ளத்தில் ஏன் தோன்றுகிறது சொல்லுங்கள்? என் எண்ணம் பைத்தியக்காரத்தனமானால் காதல் இல்லையென்று தோன்றுகிறது. உண்மை தானே!"

"எனக்குக் காதல் இருக்கிறது திஷ்யா!" என்றார் பரிதாபமான குரலில் அசோகர்.

திஷ்யையின் மைதீட்டிய கண்களில் நீர் நிரம்பியது அக்குத்துவிளக்கு வெளிச்சத்தில் நன்கு தெரிந்தது. "பின் ஏன் என்னை அருகில் சேர்க்கிறதில்லை" என்று கண்களை ஒற்றிக்கொண்டு விசித்தபடியே "அதைச் சொல்லாவிடில் எனக்கு சத்தியத்தில் நம்பிக்கை ஏற்படாது"

"திஷ்யா!" என்று அவள் முதுகை வருடியபடியே "இதோ என்னைப் பார் திஷ்யா! அன்பிற்கும்...... காதலுக்கும் உருவமில்லை. அது வெளிப்பட்டதும் அழிந்துவிடுகிறது"

அவள் சற்றுநேரம் மருட்சியுடன் புத்தர் முகத்தையும் அசோக சக்கரவர்த்தி முகத்தையும் மாறிமாறிப் பார்த்தாள். திடீரென்று "ஆனால் நீங்கள் புத்தரை நேசிக்கிறீர்களா?"

"ஆமாம்" என்றார் அசோகர் தம் சாந்தம் பொழியும் கண்களால் புத்தரை பக்தியுடன் நோக்கியபடியே.

"ஆனால் இவ்வறை நிறைய இத்தனை விக்கிரகங்களேன்"

"மனத்தூய்மைக்கு. இவைகளைப் பார்த்துக்கூட உன் மனம்......" அவளைப் பார்த்தார். அவள் கண்களில் ஓடும் மாயை ஜ்வலிப்பு, ஓர் அரசாங்கத்தையே ஆட்டிவைக்கும்திக்ஷண்யம் அவரை அசக்கி வாயடைக்கச்செய்துவிட்டது.

"அதைப்போல் என்னை ஏன் பார்க்கக்கூடாது"

"நீ மனதிற்கும் உடலுக்கும் வேற்றுமையை அளிக்கிறாய்"

"ஏன்?"

"உன் உணர்ச்சியின்........."

"ஆனால் என்னைச் சாகச்சொல்கிறீர்களா? நான் செய்த மஹாபராதம்தானே என் சௌந்தர்யம். நான் போய் சாகிறேன்" என்று போகும்போது ஒரு புத்த விக்கிரகத்தைக் காலால் எட்டி உதைத்துத் தள்ளிக்கொண்டு போகிறாள். அது கீழேவிழுந்து உடைந்தது. அசோகர் மௌனமாய் அவளைப் பார்த்தார்; பெருமூச்சுடன் அவள் கைகளைப் பிடித்திழுத்தார்.

"மன்னியுங்கள், நான் அச்சிலையைப்பார்க்கவில்லை" அவர் பதில் பேசாமல் அவள் முகத்தைப் பார்த்தார். பேசக்கூடாமல் முரட்டுத்தனம் செய்யும் குரல்வளையைக் கனைத்து சரி செய்துகொண்டு, "திஷ்யா! நீ என்மேல் கோபம் கொள்ளக்கூடாது. என் யௌவனம் மறைந்துவிட்டது. உலகத்தில் புனிதவானாய் எண்ணப்படவேண்டும். என் உடல் தளர்ந்துவிட்டது. ஊடல்...... காத......... சம்சாரத்தைவிட்டகலவேண்டியதுதான். இதற்கு நீங்கள் எல்லாம் சகாயம் செய்யவேண்டும். நான் கிழவனாய் விட்டேன்" என்றார் துக்கம் பொங்கும் குரலில்.

"இத்தனை கையாலாகாதவர் மாதத்திற்கு அத்தனை முறை 'கயா'விற்கு ஏன் சென்று வருகிறீர்கள்?"

"அது என் கொள்கைக்கு ஓர் பிரத்தியக்ஷ தரிசனம். அதற்கு இறப்பு இல்லை. சில யுகங்கள் என் புகழை......தப்பு......நம் புகழைச் சொல்லும்"

"எதற்கு இத்தனை தூரம்......காற்று மழைக்கு அது கீழே சாய்ந்தால்......இயற்கைக்கு உங்கள் மதத்தை விட சக்தி அதிகம் அதை நினைத்துக்கொண்டால்............ இத்தென்றலும் சந்திரனின் குளிர்ச்சியும்...... அந்த வண்டுகளின்......அந்த் வெளிச்சத்தின் நிழலாட்டப்பிணக்கலை......சந்திரனின் ஓட்டத்தை...... எனக்கு விடையளியுங்கள். உங்கள் விக்கிரகத்தைக் காற்றில்பறந்து

போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று சரசரவென்று சென்றுவிட்டாள்'

திஷ்யரக்ஷிரையின் அறை நிறம்ப உடைந்துபோன புத்த விக்கிரகங்கள் தாறு மாருய்க் கிடக்கின்றன. சிற்சில படங்கள் கோணல்மாணலாய் மூலைக்கொன்று தொங்கிக்கொண்டிருந்தன. இரண்டு கிளைகளாய் சேர்ந்திருக்கும் புஷ்பக்கொம்புகளை சிறு கத்தியால் வெட்டி, வேறு செய்துகொண்டிருந்தாள். அவள் செய்யும் தரையில் முரட்டு வேலையில் மேலாடை கீழே நழுவிப் புரண்டுக்கொண்டிருந்தது. இலைகளை அள்ளிக் கொண்டோட வந்த கொள்ளைக்காரனை காற்றுத்தேவன் அவள் மார்பின் அழகைக் கண்டு தழுவ ஆரம்பித்தான். அவள் செய்யும் வேலையின் சிரமமறியாமல் அவன் குளிர்ந்த கரங்கள் அவளைத் தணிக்கச் செய்தன.

ஜன்னல் வழியே வந்த மெல்லிய தென்றலோவெனில் திஷ்யையின் கைகளில் சிக்கி நசுங்கிக்கொண்டு துடிக்கும் இலைகளைப்பிடித்தணைத்துக்கொண்டு ஓடப்பார்க்கிறது. அச்சமயம உள்ளே நுழைந்த பணிப்பெண்' சோபனு'

''மஹாராஜன் வெகு கோபமாய் இருக்கிருர். ஏன்ம்மா?''

''சக்தியில்லாத கோபம். ஆண்டியின் கோபம். பசியாயிருந்தாலும் வெளியில் எப்படிச் சொல்வது?''

''இரைந்து கூவிக்கொண்டிருக்கிருர். எல்லோரையும் அழைத்து ஏதோ செடியைப் பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிருர்''

''உண்மையாகவா! தெரிந்துவிட்டாற் போல் தோன்றுகிறது. நீ இரு. ஒருவரிடமும் சொல்லாதே! என் உயிருக்குயிரான ரகசியம். கயாவிலிருக்கும் போதிமரத்தை நாசம் செய்யவேண்டுமென்று நான் ஏற்பாடு செய்தேன். அதில் வெற்றி பெறவில்லை. இந்தக் கிளைகளிரண்டும் அந்த மரத்தினுடையவை. இதை பூஜை செய்யத்தான் எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கிருர்......''

''அதிலென்ன அப்பேர்பட்ட விசேஷம்?''

''விசேஷ மென்ன? பைத்தியம்தான். இம் மரத்தடியில் அமர்ந்ததால்தான் புத்தருக்கு ஞானோதயமாயிற்ரும். அதனுல் இவருக்குக்கூட......பிணத்தைக் கட்டி எடுக்கக்கூட உதவாத இக்கழிகளுக்கு......''

''நீங்களேன் இதை நாசம் செய்கிறீர்கள்?''

''ஏனென்ருல் தேச முன்னேற்றத்திற்கு. இதனுல்தான் எல்லோரும் மனைவி மக்களை விட்டு ஆண்டிகளாய் தேசம் முழுவதும் சுற்றுகிருர்கள். அவர்களுக்கெல்லாம் பக்தி நிரம்பிவிட்டதா? அதொன்றுமில்லை. அவர்கள் என்ன செய்தார்கள் அதை செய்யவேண்டுமென்று அவர்கள் கொள்கை? ஜீவஹிம்சை உதவாதாம். அவர்கள் தலை! மாமிசம் தின்னக்கூடாதாம்! பழச்சாரைப் பிழிந்து குடிக்கலாமாம். பசுவைக் கொல்வது தவறில்லையாம். தாலி கட்டிய மனைவியைத் துறக்கலாமாம். அவள் சரியாயில்லாமற் போனுல் ஹிம்சைப் படுத்தலாமாம். பார். நான் வந்த புதிதில் அசோகர் என்னைப் பிறிந்து அரை நிமிஷம் இருப்பாரா? மினுக்கனும்பூச்சி தன் பிரகாசத்தால் ஆண் புழுக்களை ஆகர்ஷித்ததைப்போல், என் கண்ணொளியின் காரிருளில் மறைந்து நின்ற என் மனதை......என்னை ......இப்படி எத்தனை யோவித......க்கை......அதில் ... அளப்பறிய ......இன்பம்......சுக ...... அறிந்தவர்......... நுகரு......என்னடி! அப்படிப் பைத்தியக்காரிபோல் விழிக்கிறே? இரு முடித்துவிடுகிறேன். அதைச் சொல்வதில்லை. பிறகு அவர் அடியுடன் என்னை மறந்து இந்த மரத்தின் கீழேயே காலத்தைக் கழிக்கிருர். இதை நாசம் செய்துவிட்டால்......எங்கே போவார்? பார்க்கிறேன். என்னை மறந்து இதனிடம் சென்ருர். இதை நாசமாக்கி விட்டால் எங்கு செல்வார்?

''ஆனுல் தங்களுக்கேன் மஹேந்திரர்மேல் அத்தனை......'' என்று பயத்துடன் வார்த்தையை முடிக்காமல் தயங்கினுள்.

''எனக்கு அவர்மேல்......இல்லையடி. அவருக்குத்தான் என் மேல்......முன்பு இருந்தது. இப்பொழுது சந்நியாசியாகிவிட்டாரல்லவா? அவர் கண்களைப் பார்த்தா எனக்கு குணுலனின் நினைவு வந்துவிடுகிறது. நான் உண்மையாய் முழுமனதுடன் காதலித்தது குணுலன் ஒருவனைத்தான்.'' என்று பெருமூச்சு விட்டாள்.

''யாரோ குருடன் பாடிக்கொண்டு வருகிருன். சற்றுமுன் இப்படித்தான் சென்ருன். எனக்கென்னவோ குணுலனின் நினைவு வருகிறது.'' என்று கவனமாய்க்கேட்கலுற்ருள் தன்னை மறந்து. அச்சமயம் மஹேந்திரன் அவ்விடம் வந்தான். இருவரும் திடுக்கிட்டனர். சோபனு சட்டென்று தன் காரியத்தின் மேல் கண்ணுய் நிலத்தில் புரளும் மேலாடையைத் திஷ்யாவுக்குப் போர்த்தினுள். திஷ்யாவின் மார்பகம் ஆயிரம் முட்களால் குத்துவதைப் போன்று

றிருந்தது. அவனும் அவள் அழகிய மார்பைக்கண்டு சற்று மலைத்தேவிட்டான்.

"திஷ்யா! உன் அறைக்குத் திடீரென்று வந்ததற்கு என்னை மன்னிப்பாய், அவசர வேலையாய் வந்தேன். யாரோ சிலர் போதி விருக்ஷத்தை நாசம் செய்யத் துணிந்தார்களாம். சில கிளைகளை வெட்டினார்களாம். அடியுடன் நாசம் செய்யும் பிரயத்தனத்திலிருக்கிறார்களாம். சிலர் பிடிபட்டனர். விசாரித்ததில் உன் முயற்சியால் செய்ததாகச் சொல்கிறார்கள். இக்கிளைகள் அவைகள் தானா?"

"......................................"

"பதில் சொல். நீதானா?"

"அதனாலென்ன? எதாகிலும் முழுகிப் போய் விட்டதா?"

"அரசர் உன்னை அழைத்து வரச்சொன்னார்."

"நானாயிருந்தால் தானே! நானல்ல" என்றாள் குறும்புத்தனமாய்.

"விளையாட்டிற்கிது சமயமல்ல. தாமதம் செய்தால் அவரே இங்கு வருவார். குணாலனின் கண்களைப் பிடுங்கச் செய்ததுகூட நீதானாமே"

திஷ்யரக்ஷிதை பரபரப்புடன் "உனக்கு அவன் மேல் பொறாமையில்லையே"

"தப்பு, சுடுசரங்களை வீசாதே! அந்த வேலை செய்தது நீ தான் என்றறிந்தால்கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்."

"என் மனதை வெளியிட்டதால் தானே நீ இப்படி என்னைக் குறைவாய்ப் பேசுகிறாய். அசோகர் அபாயகரமான வியாதியால் வருந்திய போது அவரை ஸ்வஸ்தப்படுத்தியது நான் தான் என்பதை மறக்காதே. உங்கள் அரசரை மரணத்தின் வாயிலிருந்து மீட்டவள் நானென்பது நினைவிலிருக்கட்டும்........."

"தந்தை......மகன்......இருவரில் யாரைக் காதலிக்கிறாயோ தெரியவில்லை."

"ஆனால் உன்னைப்போன்ற கற்சிலையைக் காதலிககவில்லை. என் உணர்ச்சியை யார் அறிந்து மதிப்பளித்தார்களென்று நம்புகிறாயோ அவரை நான் காதலித்தேன்."

"உன் விருப்பத்திற்கிசையாததால் குணாலனைத் துரத்திக் கண்களைப் பிடுங்கச் செய்தாய். அசோகர் உனக்கு மரண தண்டனை அளித்தால்........."

"அளித்தால் எல்லோரையும்போல் நானும் சிலையாகிறேன்"

"உன்னை உலகம் பழிக்கும்"

"உள்ளமில்லாத உலகம் பழிக்கவேண்டுமென்பதே என் ஆசை. என்னைக் கொல்வது ஜீவஹிம்சையல்லவே. அது உங்கள் மதத்திற்கு விருத்தமில்லையோ? சக்தியிருக்கும்மட்டும் பெண்களை ஆட்டி அது குறைந்ததும் மதத்தின்பேரால் எங்களைத் துன்புறுத்தும் இந்த மதம்......... பேடி மதம் என்றுதான் சொல்லவேண்டும்"

"நான் கேட்கச் சகியேன். உனக்கு மரண தண்டனை தவறாது. அரசரிடம் உண்மையைச் சொல்லி உன்னை மன்னிக்கும்படி வேண்டுவேன்."

"அதென்ன? உண்மை?"

"நீ இப்படிச் செய்தாயென்று"

"அதில் நீ செய்ததுகூட வெளிப்படுமா?"

"அது அசம்பவம். நான் போகிறேன்"

"சம்பவத்தை நான் காண்பிக்கிறேன்" என்று அகங்காரத்துடன் மூலையிலிருக்கும் ஈட்டியை எடுத்து அவன்மேல் வீசினாள். நல்லவேளை அவனுக்குக் காயம்படவில்லை. சற்றே உராய்ந்து சென்றது.

ரகசியச் சபை. மஹேந்திரன் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருக்கிறான். சிற்சில பிராம்மண ச்ரேஷ்டர்கள்; முக்கியமான சிலர் மௌனமாய் அமர்ந்திருந்தனர். அசோகர் தம் ஆசனத்திற்குமுன் கைகட்டியபடி பித்துபிடித்தவர்போல் இப்படியும் அப்படியுமாய் நடந்துகொண்டிருந்தார். அவர் தங்கை சங்கமித்திரை வாயிற்படி மேல் சாய்ந்து நின்றிருந்தாள். பெரிய புத்த விக்கிரகத்தினருகில் திஷ்யரக்ஷிதை பசித்த புலிபோல் ஆக்ரோஷத்துடன் நின்றிருந்தாள். அவ்விடம் மரணத்தின் மௌனத்திலாழ்ந்திருந்தது.

"குணாலன் உனக்கென்ன ஆகவேண்டும்? என்று கடுகடுத்த குரலில் அசோகர் திஷ்யையைப் பார்த்துக் கேட்டார்"

"........................"

"உன்னைத்தான்" என்றார் நிலத்தைக் காலால் ஒருதட்டு தட்டிக்கொண்டு. திஷ்யா

பிராம்மணர்களைப் பார்க்கிறாள். சோபனா வரும் சிரிப்பை வாய்க்குள் அடக்கிக்கொண்டாள்.

"என் கணவருக்கு முதல் மனைவியின் புத்திரன்"

"ஒரே வார்த்தையில் சொல்லவேண்டும்"

"சமூகக் கட்டுப்பாட்டை அனுசரித்து புத்திரன்" அவள் நாக்குத் துடித்தது. கண்களில் நீர் துளிர்க்கத் தொடங்கிவிட்டது.

"ஆனால் உன்னைப் பொறுத்தமட்டில் புத்திரனல்ல. அப்படித்தானே?"

"உலகத்தையனுசரித்துப் புத்திரனென்று சொல்லலாமே தவிர அது உண்மையல்ல"

"நீ அப்புத்திரனைக் காதலிக்கலாமா?"

"யார் சொன்னது?"

"நீ உண்மையையே தெய்வமாய் போற்றுபவளாதலால் உண்மையைத்தான் சொல்ல வேண்டும். யார் சொன்னாலென்ன? நீ சொல்வதுதான் உண்மையாயிற்றே?"

'அப்படியென்றால் காதலிக்கக்கூடாதா?'

"நீ ஏன் அவனைக் காதலித்தாய்? உண்மையைச் சொல்"

"இச்சித்த பொருளைக் கிடைக்கக்கூடாமல் செய்தால் என் மனம் துக்கத்தால் நிரம்பி விடுகிறது. மனதை நோகச் செய்வது என் மதமல்ல"

"அப்படியானால் அரசனை ஏன் மணந்தாய்?"

"நான் அரசனை மணக்கவில்லை. அரசனே என்னை மணந்தார்"

"அது அரசனை மோசம் செய்வதல்லவா?",

"அரசருக்குத் தனிப்பட்ட......அவர்களுக்கேற்ற.........உள்ளங்களை மனைவிகளுக்கு அளிக்க இல்லாத அரசருக்கு.........தனிப்பெருமை என்ன வேண்டியிருக்கிறது?" என்று மஹேந்திரன் சொன்னான் அரசநீதியை. "அதனால் அரசனை மோசம்போகச் செய்வது பெண்களின் உள்ளமல்ல"

"நீ அரசி என்பது தெரியுமா?"

"நீங்கள் என்னை விரும்பிக்காதலித்த நாட்களில் நான் அரசி; பிறகு நான் ஒரு ஸ்திரீ. அரசரைப் போலவே அரசிகள்கூட காதலித்தார்கள். காதலிப்பவர்கள் ஸ்திரீகள்தாம்......"

"குடும்ப நியதிக்கு இவைகள்"

',குடும்பம்......நீதி......நியதி...இவைகள் அரசிகளுக்கும் தெரியும்"

"உனக்குத் தெரிந்தாலும் தெரியாமற்போனாலும், நெறி தவறியவள், பதிதை என்னும் பேர் உன்னை விட்டலாகாது"

"உயிருடன் இருக்கும்போதே கௌரவமில்லாதபோது இறந்தபின் வரும் களங்கத்தைப்பற்றிய கவலை வேண்டாம்"

"நீ செய்த குற்றத்திற்கு உனக்கு விதித்த தண்டனை மரணம்தான்"

"மிகவும் சந்தோஷம். மதத்தின் பேர் இல்லாவிடினும் உங்கள் முன்னோரின் குணங்களால் உங்கள் புகழ் நிலைத்து நிற்கும்..." என்று போகப் புறப்பட்டாள்.

"சற்று நில்" என்றார் அதிகாரம் த்வனிக்கும் குரலில்.


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4. சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,
286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

"போதி விருக்ஷத்தை நாசமாக்க முயன்றதில் உன் உத்தேசமென்ன?" என்று கேட்டார் ஒரு பிராம்மண சிரேஷ்டர்.

"மதம் என்பதை நிர்மூலம் செய்யவேண்டியதே......செய்யவேண்டுமென்பதே!"

"அது உன்னை என்னசெய்தது?"

"மதம் ஒருவரைத் தனிப்பட ஒன்றும் செய்யாது. சமூகத்திற்குச் செய்கிறது. ஆனால் சமூகத்திற்கு வாயில்லாததால் தேசத்திற்குச் செய்கிறது."

"எப்படி?"

"அசோகருக்குத் தெரியும். அவர் மனம் ஒரு சமயம் அவர்பால் நிலைத்திருக்கும்போது அறிவார். ஆனால் ஒவ்வொருவரின் மதத்திலும் வெவ்வேறு எத்தனையோ மதங்கள் இருக்கின்றன! அதை ஆராயவேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர வேறொன்றுமில்லை. மதம் இல்லாமல் போகவேண்டுமென்பது என் மதம். அதைக் குறித்துக் குதர்க்கமாய் என்னைக் கேள்விகள் கேட்க வேண்டாம். என் அந்தரங்க விஷயங்களைக் கேட்பதற்கு அசோகருக்கு மாத்திரம் உரிமையுண்டு. நான் அவரிடம் ஏகாந்தமாய்ச் சொல்வேன்"

"அரசருக்கு அரசாங்க நீதியைத் தவிர ஏகாந்தமில்லை. இங்கேதான் சொல்லவேண்டும்"

"அசோகரின் முதல் மனைவி இறந்த நான்கு வருடங்களுக்குள் என்மேல் காதல் கொண்டு மணந்தார். என்னை நன்றாய் அனுபவித்தார். அவர் சிறுவயதில் களிங்க தேசத்தை ஜயித்தபோது தம் வலிமையால், சாமர்த்தியத்தால், சண்டையால் ராஜ்யத்தை நிலைநிறுத்த முடியாதென்று அறிந்துகொண்டார். உடனே புத்தமதத்தில் சேர்ந்து ஜீவ ஹிம்சை செய்யக் கூடாதென்ற காரணத்தைக்கொண்டு சாந்தியை நிலை நிறுத்தினார். இந்த மதப் பித்திற்கு அஸ்திவாரக்கல் தன் ராஜ்ஜியத்தை அதிகப்படுத்திக்கொண்டதுதான்.

"மதத்தின் பேரைச் சொன்னதினால் அரசு நிலைத்தது. புகழ்விரிந்தது. இது ஒரு நாடகம். இரண்டாவது வலிவு குன்றியபின் மதத்தின் பேர் சொல்லி உணர்ச்சியை வைத்துக் கொண்டு மனைவிகளைக் கைதிகளாய்ச்செய்து உள்ளத்தையே வதைத்தார். சரீரதை நாசமாக்க விரும்புகிறார். ஏனென்றால் உடல் மெலிந்தது. அதற்கு என் வாழ்க்கையே உதாரணம். மதம் என்பது மானிடர்களுக்கு ஏற்படும் குறைவுகளையும். அவர்களின் வலிவற்ற தன்மையையும் மூடிவைக்கும் ஒருபூதம். இது இருக்கும் வரையில் மானிடர்களுக்கு சந்தோஷம் இருக்காது. இப்பேர்பட்ட மதங்கள் அநேகம் பிறக்கும். கடைசியில் தேசத்திற்குத்தான் நாசம். கண்டிப்பாய் நான் சொல்வது உண்மை. தவறாமல் தேச நாசத்திற்குத்தான் மதங்கள் தோன்றுவதும் வேற்றுமை ஏற்படுவதும்..."

"போதும், உன் பிதற்றலை நிறுத்து"

"சத்தியம் வெளிவர வேண்டியதுதானே! சத்தியத்தை அறிவதுதான் மிகக் கஷ்டம். நான் குணாலனை நேசித்தது வாஸ்தவம் தான். அசோகரிடம் அவன் ரூபம் பிரதிபலித்தது. அதனால் தான் நான் அவரைச் சில நாட்களாயினும் என்னை மறந்து காதலித்தேன். அவர்............... குணால........... இங்கிருந்தால் அவரைத் தொடாமல் இருக்க என்னாலாகாது. அதற்காகவே அவரை வேறு நாட்டிற்கனுப்பினேன். ஆனால் அவர் கண்களைப்பிடுங்கியது நானல்ல. அவர் குருடரானால் என்...... உல...... எனக்கிவ்வுலகமே இருளல்லவா? இந்த ஜன்மத்தில் கற்சிலைகள் போன்ற உணர்ச்சியற்ற மனிதர்கள்முன் என் வாழ்க்கையை......வாழமாட்டேன். உங்கள் மதங்கள் சாச்வதமாய், சிரஞ்சீவியாய் நிலைத்து, தேசத்தைச் சுடுகாடாய் மாற்றும், என் மதம் என்னுடன் மரிக்கவேண்டும்........" என்று ஆவேசமாய்ச் சொல்லி அருகிலிருக்கும் புத்த விக்கிரகத்தை ஓர் உதை உதைத்தாள் பலம்கொண்டமட்டும். அவளும் தடாலென்று மல்லாந்துவிழுந்துவிட்டாள். அவளைத் தொடர்ந்து அப்புத்த விக்கிரகம் அவள்மேல் விழுந்து அழுத்தியது. அவள் காதல் கட்டையுடன் போய்விட்டது. எல்லோரும் பரபரப்புடன் ஓடிவந்து அவளை எடுத்தனர். அவள் உயிரற்று......உணர்ச்சி மரித்து மரத்த சடலம் கிடந்தது. அவள் உயிரற்ற உதட்டில் உள்ளக்கிளர்ச்சியைக் கிளப்பும் புன்முறுவல் எங்கிருந்துதான் ஆடுகிறதோ? அவள் மரணலோகத்தில் அவள் பெண்மையைச் சாந்தியுறச்செய்யும் குணாலனைக் காண்கிறாளோ என்னவோ?

புத்தரை அன்பாய்ப்பார்க்கும் அதே கண்களால் அசோகர் அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தபடி "அவள் வெறுத்தது என்னையா? என் மதத்தையா?" என்றார். பெண்ணுள்ளத்தின் பெண்மையின் ஆவேசத்தை அறிந்த சபையோர்கள்

"அரசே! அந்தம்மாள் வெறுத்தது உங்கள் மதப்பற்றையே ஒழிய உங்களையல்ல" என்றனர்.

"புத்தரின் கீழேயே ஐக்கியமானாள் புனித திஷ்யா" என்றார் அசோகர்.

# பவபூதி*

க. சந்தானம்

இலக்கியத்தின் முக்கிய பாவனைகளைக் காம்பீர்யம், அழகு, உருக்கம் என்று வகுத்து, காளிதாசர் அழகுத் தேவதையின் பிரதம சிஷ்யர் என்று முன் பேச்சில் கூறினேன். இன்று மனித மனத்தை உருகச் செய்வதே கவிதையின் முதல் நோக்கம் என்ற கொள்கை கொண்ட ஒரு மகா கவியைப்பற்றிப் பேச விரும்புகிறேன். இவர் பெயர் பவபூதி. காளிதாசரைப்போல் இவரும் ஒரு வடமொழிப் புலவர். மத்திய பாரதப் புதல்வர். தமது குல கோத்திரங்களைப்பற்றிச் சில விவரங்களைப் இவரே தமது நாடகங்களில் வர்ணித்திருக்கிறார். காசியப கோத்திரத்தைச் சேர்ந்தவர். உதும்பரகுலத்தில் பிறந்தவர். இவர் தந்தையின் பெயர் நீலகண்டர். தாயின் நாமம் ஜாதுகர்ணி. இவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வசித்ததாகச் சரித்திரக்காரர்கள் நிர்ணயித்திருக்கின்றனர். இவருடைய நூல்களில் மூன்று நாடகங்கள் காப்பாற்றப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவை மகாவீர சரித்திரம், மாலதி மாதவம், உத்தர ராம சரிதம் என்பன. மகா வீர சரித்திரத்தில் ராமாயணம் ஒரு நாடகமாகச் செய்யப்பட்டு ராமருடைய வீரச் செயல்கள் வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. மாலதி மாதவம் உயர்ந்த கற்பனை நாடகம்; சாகுந்தலத்தைப்போல் இதிலும் காதலே முக்கிய விஷயமாயினும், காதலைக் காட்டிலும் ஆழ்ந்த பரந்த மனித உணர்ச்சிகளை விளக்குவதிலேயே பவபூதியின் தனித் திறமை என்பது பல விடங்களில் காணப்படுகிறது. உத்தர ராம சரித்திரத்தில் இது முழு வளர்ச்சியடைந்து இவருக்கு உலக மகா கவிகளுக்குள் உயர்ந்த பதவி யளிக்கிறது.

பவபூதி தமது கொள்கையை உத்தர ராம சரித்திரத்தில் மூன்றாவது அங்கத்தில் ஒரு சுலோகத்தில் கூறியிருக்கிறார். "மனதின் உணர்ச்சி யெல்லாம் ஒரு தன்மையுள்ளது. சந்தர்ப்பத்தை அனுசரித்து அது பல உணர்ச்சிகளாகத் தோன்றுகிறது. அலையும், சுழலும், நுரையும் ஜலத்தின் தோற்றங்களேபோல், உருக்கமொன்றே எல்லா உணர்ச்சிகளுக்கும் மூலமாகும்.

உருக்கமென்றால் என்ன? இதை ஆங்கிலத்தில் (Pathos) 'பாதாஸ்' என்பார்கள். மனத்தை உருக்கிக் கண்ணில் நீர் ஒழுகச் செய்யும் உணர்ச்சிகளை யெல்லாம் இப்பதம் குறிக்கும். அன்பு, தயவு, துக்கம், பச்சாத்தாபம், பக்தி முதலிய பாவங்கள் தனியாகவோ, கலந்தோ மனதை முழுவதும் கவர்ந்திருக்கும் நிலை. அப்பொழுது தர்ம அதர்மங்களை, நியாய அநியாயங்களை மனம் பெரிதும் பொருட்படுத்துவதில்லை. இவை ஜீவனின் விவகாரங்கள். மனது உருகும் பொழுது ஜீவன் தனது அந்திம சுபாவத்தில் ஆழ்ந்துவிடுகிறது. அதனால்தான் இராவணன் இறக்கும் பொழுதும், துரியோதனன் தன் பந்துக்களைப் பலி கொடுத்துத் தவிக்கும் பொழுதும் அவர்கள் செய்த கொடுமைகளை மறந்து, நாம் கண்ணீர் விடுகிறோம். முடிவில் அவர்களும் நம்மைப் போன்ற ஜீவன்கள், எல்லா ஜீவன்களும் ஓர் தன்மையுள்ளவை, ஓர் ஆதி மூலத்திலிருந்து தோன்றி, அதனிடம் லயமாகின்றன என்ற உணர்ச்சி இதற்கு அஸ்திவாரமானது.

உத்தர ராம சரித்திரத்தின் கதை மிகவும் கொடுமையானது; ஆபாசமானதென்று கூடக் கூறலாம். கணவனுடன் காட்டிற்குச் சென்று, அசோக வனத்தில் சிறைப்பட்டுக் கஷ்டப்பட்ட சீதையை பகீரதப் பிரயத்தனம் செய்து மீட்டு வந்த இராமர் அவளைக் கர்ப்பவதியாக இருக்கும் சமயத்தில் ஊர் வம்புக்குப் பயந்து, காட்டுக்கு அனுப்பிவிடுகிறார். இக்கதை எப்படித் தலைப்பட்டதென்று வியப்பாக இருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் இந்தக் காண்டம் சேர்ந்திருக்கமுடியாதென்பது நிச்சயம். பிற்காலத்தில் தன் மனைவி மீது சந்தேகங் கொண்ட ஒரு கவி இதைச் சேர்த்திருக்க வேண்டும். இம் மோசமான கதையைக் கொண்டு ஓர் அற்புத நாடகம் பவபூதி அமைத்திருக்கிறார்.

சாகுந்தலத்தில் நான்காம் அங்கம் மிகவும் சிறந்ததென்று காண்பித்தேன். உத்தரராம சரித்திரத்தில் முதல் அங்கம் இத்தன்மையுள்ளது. இந்த ஓர் அங்கத்தை மட்டும் எழுதி, அதைத் தனி நூலாகச் செய்திருந்தால் பவபூதியின் கீர்த்தி சிறிதும் குன்றியிராது. பட்டாபிஷேகத்திற்குப் பின் பலநாள் அயோத்தியிலிருந்த பந்துக்

கள் ஊருக்குப்போனதால் ராமரும் சீதையும் வருத்தத்துடனிருக்கிறார்கள். தாய்மார்களும், வசிஷ்டரும், ரிஷ்யசிங்கரின் யாகத்திற்குப் போய்விட்டனர். அப்பொழுது வசிஷ்டரிடமிருந்து ஜனங்களின் மனங்கோணாமல் அரசு புரிய வேண்டுமென்ற புத்திமதியை ஒரு தூதர்கொண்டு வருகிறார். 'சினேகம், தயை சுகம். எல்லாவற்றையும், ஜானகியையும்கூட. பிரஜைகளின் பிரியத்திற்காகத் தியாகம் செய்யத் தயங்கமாட்டேன்' என்று ராமர் விடையளிக்கிறார். ராமாயணக் கதையை ராஜமாளிகையின் சுவர்களில் சித்திரக்காரர்கள் வரைந்திருக்கிறார்கள்; பார்க்க வேண்டுமென்று லக்ஷ்மணர் வந்து இருவரையும் அழைத்துச் செல்கிறார். தங்கள் பூர்வ சரித்திரத்தை ராமரும், சீதையும் காணும் காட்சி மிகவும் மனோகரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வெய்யிலும் மழையும் சேர்ந்திருப்பதுபோல், காட்சியின்பொழுது சீதையின் கண்ணில் நீர் சொரிய, முகத்தில் முறுவலுடன் துக்கம் ஆனந்தம் இரண்டு உணர்ச்சிகளாலும் ஏககாலத்தில் பரவசமாகிறாள். ஒரு சித்திரத்தில் ராமன் மிதிலை புகுந்து சிவ தனுசை ஒடித்த காட்சி. தான் மூலையில் நின்று கடைக்கண்ணால் கண்ட இராமனை மறுபடியும் படத்தில் கண்டு சீதை மயிர்க்கூச்சல் அடைகிறாள். அவசரமாக மந்தரை கைகேசி விருத்தாந்தத்தை விலக்கி சீதையை வேறுகட்டத்திற்கு ராமர் அழைத்துச் செல்கிறார்: "வேடர்கோன் விரும்பக்கூடிய சிருங்கிபேரபுரத்தின் இருப்பை மரமல்லவா, இது" என்று ராமர் நினைவு மூட்டுகிறார். அதன் பின் எவ்வளவு காட்சிகள்! சித்திரகூடபர்வதத்தின் வழியில் சியாமம் என்ற ஆலமரம். 'நெடுநேரம் வழி நடந்ததால் வாடிய உன் அங்கங்களுக்கு ஓய்வுகொடுக்க என் மார்பில் தலை வைத்து நீ இதனடியில் அயர்ந்து துயில் செய்தாயல்லவா?' என்று பதி கூறச் சீதை நாணமடைகிறாள். அடுத்தாற்போல் தண்டகாரண்யம். கோதாவரி நதி; பிரஸ்ரவண கிரி.

'இம் மலையில் லக்ஷ்மணன் சகலவித சௌகரியங்களும் செய்துகொடுக்க, கோதாவரியின் தெள்ளிய நீரில் குளித்து அதன் கரைகளில் நாம் களித்த நாட்கள் நினைவிலிருக்கிறதா, மைதிலி' என்று வினவுகிறார் ராமர். சீதையின் கண்களில் அக்காலத்தின் மயக்கம் தோன்றவே அதை ராமர் வாயால் வர்ணிக்கிறார்.

"கன்னத்தோடு கன்னம் சேர்ந்து, இடையின்றி இறுகத்தழுவி, குறையின்றி மெதுவான குரலில் பேசும் வம்பு முடியுமுன் நிசி தீர்ந்துவிடுமல்லவா?" அதன் பின் சீதையை ராவணன் தூக்கிச்செல்லுதல், ஜடாயு வதம், சூன்யமான ஜனஸ்தானத்தில் கல்லும் கரையும்படி இராமர் சோகம். இவற்றையெல்லாம் கண்ட உணர்ச்சி மேலீட்டால் களைத்து, சீதை இராமர் மடியில் படுத்துத் தூங்கிவிடுகிறாள். அவளுடைய உயர் குணத்தையும் அளவற்ற பிரேமையையும் நினைத்து இராமர்:

'என் வீட்டின் பாக்கியலக்ஷ்மி; கண்களின் இன்பச்சுடர்; இவளது ஸ்பர்சம் சந்தனத்திலும் குளிர்ந்தது; என் கழுத்தில் சூட்டி இருக்கும் இவள் கை முத்துமாலைகது மேலானது; பிரிவைத் தவிர்த்து இவள் சம்பந்தமான எதுவும் ஆனந்தமன்றோ' என்று தனக்குள் மகிழ்ச்சிகொள்ளும் தருணத்தில் தூதன் வந்து ஊராரின் இகழ்ச்சியைத் தெரிவிக்கிறான். ராமர் தலையில் இடி வீழ்ந்தது போலிருக்கிறது. பட்டாபிஷேகத்தைத் தடுத்து வனத்திற்கனுப்பிய வல்விதி மீண்டும் வந்து சூழ்ந்துவிட்டது என்று எண்ணுகிறார். காரியத்தின் கொடுமையையும் சீதையின் கதியையும் நாம் மறந்து விடுகிறோம். இராமர் சோகமே நம்மைக் கவருகிறது. "துக்கசாகரத்தின் ஆழத்தை அளக்கவே இராமனுக்கு உணர்ச்சி அளிக்கபபட்டது போலும்' இதயத்தின் மர்மத்தில் பாயும் வச்சிர ஆணிபோலும் இவன் உயிர்" என்று ராமர் தமமை நொந்துகொள்ளும் பொழுது நம் மனமும் உருகிவிடுகிறது.

இரண்டாவது மூன்றாவது அங்கங்களில் இராமர் சம்பூக வதத்திற்காகத் தண்டகாரண்யத்தில சென்று சீதையுடன் தாம் சஞ்சரித்த பிரதேசங்களைக் கண்டு பரிதபிக்கிறார். அங்குள்ள மரம், மான், மயில், யானை, எல்லாம் சீதையின் சினேகிதர்கள். உத்தர ராம சரித்திரத்தின் மூன்றாவது அங்கம், சாகுந்தலத்தின் நான்காவது அங்கத்தை நினைவு மூட்டுகிறது. ஆனால் சாகுந்தலத்தைப் படிக்கும் பொழுது ஓயாமல், "என்ன அழகு" என்று சொல்லிக் கொள்ளுவோம். உத்தர ராம சரித்திரத்தில ஒவ்வோர் அடியிலும் "ஐயோ பாவம்" என்று கண்ணீர் விடுகிறோம். பழைய சம்பவங்களை நினைவு மூட்டிவந்த வாசந்தி திடீரென்று: 'நீயே என்னுயிர், இரண்டாவது இதயம், கண்ணுக்கு வெண்ணிலா, அங்கங்களின் அமிர்தம் என்று அன்று பலவாறு கூறி, உள்ளங் கவர்ந்த என் ஏழைத்தோழியை ஐயோ என்ன செய்து விட்டாய்' என்று மூர்ச்சையாகி விடுகிறாள். கங்கா தேவியின் வரத்தால் பிறர் காணாது பின் தொடர்ந்த சீதைக்

குக் கூட இக்குற்றச் சாட்டுப் பொறுக்க வில்லை. பின்னர், அவ்விடத்தில் ஒரு கொடி வீட்டைக் காண்பித்து வாசந்தி கூறுகிறாள்: "இக்கொடி வீட்டில் நீ அவளை எதிர் பார்த்துக் காத்திருந்தாய்; சீதை கோதாவரியின் மணல் திட்டில் அன்னங்களோடு வெகு நேரம் விளையாடித் தாமதமாகத் திரும்புங்கால் உன் முகம் சோர்ந்திருப்பதைக் கண்டு நடு நடுங்கி தூரத்திலிருந்தே தாமரை, மொட்டுப்போல கைகூப்பி, உன்னை மன்னிப்புக் கேட்டாள் அல்லவா" என்று புண்ணில் உப்பிடுகிறாள். இதைக்கேட்டுசீதை தனக்குள்: "நீ கொடியவள் வாசந்தி, இவ்விதம் இதயத்தின் மர்மத்தைப் பிளக்கக் கூடிய சொற்களால் என பதியைத் துன்புறுத்துகிறாய்" என்று வருந்துகிறாள்.

ஆறாவது அங்கத்தில் மிகவும் உருக்கமான ஒரு சித்திரம் வரையப்பட்டிருக்கிறது. லக்ஷ்மணர் புத்திரன் சந்திரகேதுவுக்கும் லவனுக்கும் ஏற்பட்ட யுத்தத்தைததடுத்து இராமர், லவ குசர்களைச் சந்திக்கிறார். தம் பிள்ளைகள் என்று தெரியாது. வால்மீகி சிஷ்யர்கள், இராமாயணத்தை ஓதியவர்கள் என்று கேட்டு, இராமாயணத்தில் சில சுலோகங்கள் பாடச்சொல்லுகிறார்.

'இயற்கையாலே சீதை ராமனுக்கு இனியவள்; தன் குணத்தால் பிரியத்தைப் பன்மடங்கு பெருக்கினாள். ராமனும் அவ்வாறே சீதைக்கு உயிரிலும் உயர் பொருளானான்; இருவருடைய பரஸ்பர அன்பை அவர்களது இதயமே அறியவல்லன' என்று குற்றமறியாத பாலன் குசன் பாடும்பொழுது இராமர் மனம் என்ன பாடு பட்டிருக்க வேண்டும்!

ஏழாவது அங்கத்தில் பவபூதி பழைய உத்தர ராமாயண கதையை மாற்றி, சீதையை இராமனுடன் சேர்த்து வைக்கிறார். நாடகத்தில் வரும் புராண பாத்திரங்களின் குணங்களையும் மாற்றி உணர்ச்சி ததும்பும் புருஷர்களாகவும் ஸ்திரீகளாகவும் செய்து விடுகிறார். ஜனகர் பூர்ண ஞானம் பெற்ற வேதாந்தி என்பது ஐதீகம். இந் நாடகத்தில் சீதை மீது செய்யபபட்ட அநியாயத்தையும் அவள் பட்ட கஷ்டத்தையும் நினைத்து, ஆத்திரத்தாலும் துக்கத்தாலும் மாறி மாறி வேதனைப் படுகிறார். அருந்ததியும், கௌசல்யையும் சீதையைக் காட்டிற்கனுப்பிய ராமரைக் காணவும் அவரிருக்கும் அயோத்தி செல்லவும் மறுத்துவிடுகின்றனர். நல்ல வைதிகப் பிராமண குலத்தில் பிறந்தவரானாலும், சம்பூகவதத்தின் அக்கிரமத்தைப் பவபூதியால் பொறுக்க முடியவில்லை. "சீதையைக் காட்டுக்கனுப்பிய நீ என்ன கொடுமைதான் செய்யமாட்டாய்?" என்று ராமர் வாயால் சொல்லுகிறார். மனித வாழ்க்கையில் அன்பும், சினேகமும், தயையுமே முக்கிய குணங்கள்; இவற்றைப் பாதிக்கும் பழக்கங்களும், ஏற்பாடுகளும் வெறுக்கத் தக்கவை என்ற தமது சித்தாந்தத்தைப் பல வழிகளில் கல்நெஞ்சும் கரைந்தோடும் இனிய சொற்களால் போதிப்பதே இந்த நாடகத்தின் முக்கிய உத்தேசமென்பது எனது அபிப்பிராயம். ஆதலால் முடிவில், 'தீமையைப் போக்கி, நன்மையை வளர்த்து, மக்களுக்கு மங்களமும், இன்பமும் அளிக்கும் கங்காதேவி போன்றது இச்சரிதை" என்று கவி கூறியது மிகையுமல்ல, தற்புகழ்ச்சியுமல்ல.

அழகுக்குக் காளிதாசரும், உருக்கத்திற்குப் பவபூதியும் பிரதான கவிகள் என்று கூறினேன். காம்பீரிய குணத்தை முக்கியமாகக்கொண்ட கவி வடமொழியில் எவர் என்று நேயர்கள் கேட்கலாம். அவர் வால்மீகி. வால்மீகி இராமாயணத்தின் சுருதி ஆதி முதல் ஆந்தம் வரையில் காம்பீரிமே. வால்மீகியின் இராமருக்கும் பவபூதியின் இராமருக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம். ஒருவர் அச்சமறியாத ஆண் சிங்கம்; மற்றவர் விதியின் விளையாட்டுப் பொம்மை. ஆதியில் ஆரியர் நிலையும் பின் நாட்களில் அவர் இழிவும் இதிலிருந்தே புலப்படும். ஆனால் இந்தியரின் கவித்திறமை மட்டும் என்றும் குறையவில்லை. கம்பரும், ரவீந்திரநாத் தாகூரும், சுப்பிரமணிய பாரதியாரும் காளிதாஸர், பவபூதிகளின் கீர்த்தியைச் சிறிதும் குன்றாது காத்துவந்திருக்கின்றனர்.

டில்லி அகில இந்திய ரேடியோ நிலயத்திலிருந்து வெளி நாடுகளுக்கென ஒலி பரப்பப்பட்டது.

# புத்தக விமர்சனம்

(1) தொனி விளக்கு (வடமொழி—த்வந்யா லோகத்தின் மொழி பெயர்ப்பு)

மொழி பெயர்த்தவர் வித்யாரத்னம் டாக்டர் P. S. சுப்ரமண்ய சாஸ்திரி, அண்ணமலை யூனிவர்ஸிடி; திருப்பனந்தாள் காசி மடம் காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் உதவியருளிய பொருளுதவியால் வெளிவந்துள்ளது; அத் தம்பிரான் அவர்களுக்கு இப்பதிப்பு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூபாய் 3; கிடைக்குமிடம் P. S. கணேச சாஸ்திரியார் M. A., L. T., 38, பாண்டியன் சந்து, ஆண்டார்வீதி, தெப்பக்குளம், திருச்சி.

இந்நூலின் மொழிபெயர்ப்பாளராகிய டாக்டர் P. S. சுப்ரமண்ய சாஸ்திரியார் அவர்கள் வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் முதலிய பன்மொழிகளிலுமுள்ள பல நூல்களையும் பயின்று ஆராய்ந்த அறிஞர்; தம் ஆராய்ச்சியின் பயனைப் பலவகை அரிய நூல்களை எழுதி வெளியிட்டுதவியிருக்கின்றார்.

இந்நூலின் சிறப்பைப் பதிப்பாசிரியர் தம் முகவுரையில் "ஈண்டுக் கூறப்பட்ட கோள்கள் இலக்கியத்தைப் படித்து அநுபவிக்க நல்ல துணை ஆகும். எல்லா நாட்டிலும் எக்காலத்திலும் இயற்றப்பட்ட இலக்கியங்களைப் படித்தற்கு இவற்றைத் துணையாகக் கொள்ளலாம். இவற்றைத் துணையாகக் கொள்ளின் பதவுரையையும் பொழிப்புரையையும் கற்றுவிட்டால் நூலைப் படித்ததே ஆகும் என்ற எண்ணம் படிப்போர் மனத்தைவிட்டு நீங்கும். செய்யுளின் சுவையையும் உணரச் சொல்லும். சுவையை உணரும் போது கவியின் பெருமை நமக்கு நன்கு புலப்படும். நூல்களைப் படிக்க விருப்பம் மிகும். அவற்றைச் சுவைத்துப் பிறர் படிக்குமாறு கூறவும் கற்பிக்கவும் இயலும். சுவையிலே ஈடுபட்டால் சொல்லணியிலும் பொருளணியிலும் உள்ள கவனம்போம். நூற் கருத்தை அறிய ஈடுபடச் செய்யும். நங்கருத்தை நன்கு பிறர் சுவைக்குமாறு கூற இயலும்.

"அன்றியும் விரிவாகக்கூறப்பட்ட அவுசித்தியம், பகைச்சுவைகளின் இணைப்பு இவை கொண்ட பகுதிகள் நூல்களைச் சுவைத்து உணர்தற்கும் நூல்களைச் சுவைக்க இயற்றுவதற்கும் துணை ஆவதன்றி, உலகியலில் நாம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை அறிதற்குஞ் சிறந்த துணை ஆகும்"

இந்நூல் தமிழர்க்கு அரிய விருந்தாகும்.

(2) அபிராமி அந்தாதி (உரையுடன்).

ஸ்ரீ அபிராமி பட்டர் இயற்றியது. திருப்பனந்தாள்—காசி மடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தி சுவாமிகள் திருவுள்ளப் பாங்கின் படி கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ வித்வான் கி. வா. ஜகந்நாதன், B. O. L. எழுதிய உரை முதலியவற்றுடன் கூடியது.

இந்நூல் பக்திச் சுவையும், அநுபவாதிசயப் பெருக்கை வெளியிடும் முறையும், எளிய நடையும் அமைந்த பாக்களடங்கிய அரிய தோத்திர நூலாகும். உரையாசிரியர், ஆசிரியர் வரலாறு ஆராய்ச்சி முதலிய தலைப்புக்களில் தம்புலமைத் திறனை நன்கு வெளியிட்டுள்ளார். உரையும் மிக மிகத் தெளிவாயும் அழகாயும் எழுதப்பட்டிருக்கிறது. தேவி உபாஸகர் அனைவருக்கும் சிறந்த பாராயண நூல் ஆகும். விலை குறிக்கப்பட்டிலது.

(3) ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த ஸங்கரஹ விளக்கம்.

சோளங்கிபுரம் சித்தாந்த சைவ சரபம்

ஸ்ரீ சி அருண சிவயோகி அவர்கள் இயற்றியது. திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு. விலை யில்லை.

இதனுள் ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்திரங்களின் மஹிமையும், பொருளும் வடமொழி, தென்மொழிகளிலுள்ள பிரபல பிரமாணங்களை யெடுத்துக் காட்டி விளக்கப்பட்டிருக்கின்றன.

(4) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அற்புதப் பதிகங்கள்.

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள் வெளியீடு.

இதனுள் ஒரு பன்னிரண்டு பதிகங்கள் அடங்கியுள்ளன. விலை இல்லை.

(5) சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய அற்புதப் பதிகங்கள்.

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள் வெளியீடு.

இதனுள்ளும் ஒரு பன்னிரண்டு பதிகங்கள் அடங்கியுள்ளன. விலை இல்லை.

(6) ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள் வரலாறும் ஆதி குமர குருபர ஸ்வாமிகள் அருளிச் செய்த கந்தர் கலிவெண்பா முதலியனவும்.

காசிமடம் திருப்பனந்தாள் வெளியீடு. விலையில்லை.

இதனுள் காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ சாமிநாத ஸ்வாமிகள் வரலாறு (1930—1944) நன்ருக எழுதப்பட்டுள்ளது. அவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் புரிந்துள்ள அருஞ் செயல்கள் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளன. கந்தர் கலிவெண்பா திருப்பனந்தாள் தேவாரம், சகல கலா வல்லிமாலை ஆகிய இவற்றின் அரும்பதவுரைகள் கற்போர்க்குத் துணை புரிவன.

அதர்வவேதம்.

அதர்வவேத சம்ஹிதையின் தமிழ் மொழி பெயர்ப்பு. ஆசிரியர்; எம். ஆர். ஜம்புநாதர்; விலை ரூ. 5. ஜம்புநாதன் புஸ்தகசாலை. சென்னை.

அதர்வ வேதமும் வேதம்தான் என்பதில் ஆக்ஷேபனை இல்லை. அபிசாரத்துக்கு உதவுமளவு அப்யுதயத்துக்கும் உதவுகிறதல்லவா? மணிமந்திர ஔஷத சிகிச்சைகள் பல இவ்வேதத்தினின்று புலனுகும். வைத்ய ஆராய்ச்சிக்குப்பெரிதும் பயன்படும் மூலிகைகளும் ஔஷதிகளும் குறிக்கப்படுகின்றன. இவ்வேதத்தைத் தமிழில் கற்றுணர்ந்துகொள்வதால் தமிழ் ஹிந்துக்கள் தாங்கள் இழந்த அரசை மறுபடியும் அடையலாம் என்று ஆசிரியர் அபிப்ராயப்படுகிருர். அது எவ்வாருயினும், எளிய நடையில் அழகு குறையாமல் இவ்வேதத்தைத் தமிழாக்கியிருக்கும் வேதோப நிஷத ஆசிரியர் ஜம்புநாதன் அவர்களுக்கும் இதை வெளியிட உதவிய திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகளுக்கும் தமிழ் உலகம் கடன்பட்டுள்ளது. விஷ நிவாரணத்துக்கு இருப்பதுபோல் கடன் நிவாரணத்துக்கும் மந்திரங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அவைகளைத் தமிழில் படித்து உருப்போட்டுவிட்டு கடன் நிவாரணம் ஆகவில்லையே என்று ஆசிரியரை ஏசுவது நியாயமாகாது என்று எச்சரிக்க விரும்புகிருேம்.

கந்தபுராணத் திரட்டு

உற்பத்தி காண்டம். ஆசிரியர், ரா. பி. சேதுப்பிள்ளை. விலை ரூ. 1-4-0 அல்லையன்ஸ் கம்பெனி மயிலாப்பூர்.

கச்சியப்பர் அருளிய கந்த புராண உற்பத்தி காண்டத்திலிருந்து 352 பாடல்களை எடுத்துத் தொகுத்து உரையுடன் சிறப்பாக வெளியிடப்பட்டிருக்கிறது. அறுமுகன் அருளை விரும்பும் சிவநேயச் செல்வர்களுக்குப் பெரிதும் இன்பம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

அகஸ்தியர் யாத்திரை

யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றியது. விலை 1-10-0 அன்பு நிலையப்பிரசுரம்.

கிருத யுகத்தில் உறங்கச் சென்ற ஒருவர் திடீர் என்று இந்தக் கலியுகத்தில்—அல்ல ரேடியோ யுகத்தில் விழித்துக்கொண்டு, சுற்றிப்பார்த்தால் என்ன காண்பார், எவ்வாறு சமாளித்துக்கொள்வார்? தர்மாவேசம் குறைந்து நிற்பதைக்கண்டு கலங்குவாரா, இயந்திரப்படைகளும் செயற்கைப்பொருள்களும் விஞ்ஞானத்திட்டமும் வளர்ந்து வருவது கண்டு மகிழ்ச்சியுறுவாரா? அதிலும் தமிழ்த் தொண்டராயிருப்பின் அவர் மன நிலை எவ்வாறு இருக்கும்? இதைக் கற்பனை செய்து நகைச்சுவையுடன் சித்திரிக்கிருர் சுவாமிகள். தமிழ்மொழியைத் தந்த அகத்தியரே ஆயினும் அவர் இன்று ஆங்கிலத்திலேயே பேச விரும்புவார் போலும்!

தென் இந்தியக் கதைகள்.

தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபை பிரசுரம். விலை 0—12—0.

தென் இந்தியாவும் வட இந்தியாவும் ஒரே தேசத்தின் இரு பகுதிகள். ஆயினும் ஒரு பகுதியில இருப்பவர் மற்றய பகுதியில் இருப்பவரைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய அளவு அறிந்துகொள்வதில்லை. அமெரிக்காவைப் பற்றியும் இங்கிலாந்தைப் பற்றியும் அறிந்துகொண்ட அளவுகூட அறிந்துகொள்ளவில்லை என்ருல் இதற்குக் காரணம் என்ன? மொழி வேற்றுமைதான். இதை ஓர் அளவு நிவர்த்தி செய்ய எண்ணி தக்ஷிணபார ஹிந்தி பிரசார சபையார் தென்னிந்திய (ஸமீப காலத்திய) சிறு கதைகளை ஹிந்தி பாஷையில் மொழி பெயர்த்து வெளியிடுகிருர்கள். போற்றத் தக்க முயற்ச்சி. இது மூன்று தெலுங்குக் கதைகள், ஒரு கன்னடக் கதை, ஒரு தமிழ் கதை இதில் தர்ஜமா செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் சிறு கதைகள் ஏராளமாகக் குவிந்து கிடக்கும் இந்நாளில் ஒரே ஒரு கதைதான் இங்கு இடம் பெற்றிருக்கிறதே என்று எண்ணலாம். ஆனாலும் நல்ல கதையாகப் பார்த்துப் பொறுக்கி யிருக்கிருர்கள். எழுதியவர் கு. பா. ரா. மொழி பெயர்த்தவர் கா. ஸ்ரீ. ஸ்ரீ. என்ருல் கேட்கவா வேண்டும்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.